T.D.R.C. 3611
R. C. No. 164-3-1508
Vol II
DIGITIZED
Q23:38.21193 TM
N08
139900.

உ

கணபதிதுணை.

# திருமழுவாடி புராண

## வசனம்.

162
1908 11

இஃது

அகரமாங்குடி ப்ரம்மஸ்ரீ சிதம்பர சாஸ்திரிகள் குமாரர்

பாகவத ஸப்தரிஷி சாஸ்திரிகளால்

சுருக்கமாக மொழிபெயர்த்ததைக் கொண்டு

தஞ்சை

**எஸ். கலியப்பெருமாள் பிள்ளை**

யவர்களாலியற்றப்பட்டு

தமது

இந்தியா முத்திராசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1908.

139960

8 AUG

# முகவுரை

நெடியகடலாற்சூழப்பெற்ற இப்பூமியின்கண்ணுற்றோன்றிய அண்டஜம், ஸ்வேதஜம், சராயுஜம், உத்பீஜமாகிய நான்குவித யோனிகளில், நிற்பன, நடப்பன, பறப்பன ஊர்வன, தவழ்வன, உழல்வன, நீர்வாழ்வன ஆகிய எழுவகை தோற்றத்திலுழலெண்பத்து நான்கு லக்ஷ ஜீவராசிகளில் மானுடப் பிறவியானது புண்ணியப்பேற்றால் மகாபெருமை வாய்ந்ததென்பது வேதாகமங்களின் றுணிபாம். அதைப்பற்றியே தாயுமானசுவாமிகள் "எண்ணரிய பிறவிதனில் மானுடப்பிறவி தானியாதினு மரிதரிதுகா ணிப்பிறவிதப்பினு லெப் பிறவி வாய்க்குமோ வேதுவருமோ வறிகிலேன்." என்றனர். இவ்விதமானுடப்பிறவியில் கூன், குருடு, செவிடு, ஊமை, பேடு, நொண்டி, இவைகளை நீக்கிப்பிறத்தலே அதனினு மருமை வாய்ந்தது. அவ்விண்ணம் பிறந்தமானுடனுக்கு அடுத்த ஜன்மமினி இந்தஜன்மங்கிடைக்குமென்பது நிச்சயமில்லை. ஆகவே இச்சன்மத்திலேயே ஞானத்தையடைந்து மோக்ஷம் பெறுதலே முக்கியமானது. அவ்வித ஞானம் "குருவல்லாற்றன்கொண்ட மௌனஞானம் ஆப்பில்லா சகடதுபோ லழிந்துபோமே." என்ற ஆன்றோர் வாக்கியத்தின்படி ஆசானருளின்றி கிட்டவேமாட்டா. ஆசானருள் வைராக்கியத்தையடைந்த பக்குவியாயிருந்தாலொழிய கிடைக்காது. வைராக்கியங்கிடைப்பது ஈசுரபக்தியின் மகிமையாகுது. ஆதலால் தாயுமானசுவாமிகள் "மூர்த்தி தலந்தீர்த்தம் முறையிற் றொடங்கினற்கோர் வார்த்தை சொல்ல சற்குருவும் வாய்க்கும் பராபரமே". என்றனர். அதுபற்றி முதலில் தலத்தில்வசித்தலும், பின்பு தீர்த்தத்தில்

ஸ்நானஞ்செய்தலும், அதன்பிறகு மூர்த்தியாகிய சிவலிங்கத்தைத் தொழுதலும் வழக்கம். ஞானிகள் மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞையாகிய ஆறாதாரம் கூடியும்; சூர்யபுஷ்கரணி, சந்திரபுஷ்கரணி, அமுதபுஷ்கரணி, முதலிய தீர்த்தங்களால் நிறைபெற்றதும்; ஆத்மாவுக்கு வாசஸ்தானமானதுமாகிய இச்சரீரத்தைப் பூசிப்பதுபோல, காமிகனானோர், கர்ப்பக்ருகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், திருமஞ்சனமண்டபம், கொலுமண்டபம், நடனமண்டபம், மகா தீர்த்தங்கள், இவைகளோடு கூடியதும், சுயம்பு வடிவமைந்துள்ளதும், புராதனமானதுமாகிய கோயிலாற்சிறந்துள்ள சிவஸ்தலஞ் சென்று சிரத்தாபூர்வமாய், கண்ணாரக்கண்டும், வாக்கால் துதித்தும், மனத்தால் தியானித்தும், கைகளால் தொழுதும், கால்களால் பிரதக்ஷணம் முதலியவைகளைச்செய்தும், காதுகளால் கீர்த்தனம், கீதம், மூர்த்திமுதலிய பரமேசுவரரின் திருவிளையாட்டுகளைச் சிரவணித்தும், பாசத்தாற்கட்டுண்ட மானுடனைவரும் பதியாகிய பரசிவமூர்த்தியைத் தொழுதல் அவசியமேயாம். இதற்குச் சித்தே தெய்வப்புலமை திருவள்ளுவநாயனார் "கோளிற் பொறியிற்குணமிலவே யெண் குணத்தான் றாளைவணங்காத் தலை" என்றனர். இவ்வாறு செய்பவே சரியையினின்று கிரியையையும், கிரியையினின்று யோகமும், யோகத்தினின்று ஞானமும், ஞானத்தினின்று மோக்ஷமுமுண்டாகும். ஆகவே தாயுமான சுவாமிகள் "விரும்புஞ்சரியை முதல் மெய்ஞ்ஞான நான்கு மரும்பு மலர் காய் கனிகளன்றோ பராபரமே" என்றனர். ஆகையால் சரியையினின்றே வரிசைக்கிரமமாய் ஞானம் பெற்று மோக்ஷமடையவேண்டியது அவசியமாதலாலும் "பிறவிப்பெருங் கடனீந்துவர் நீந்தா ரிறைவனடி சேராதார்" என்று திருவள்ளுவநாயனார் சொல்லியபடி சிவதலங்களுக்குப்போய் பக்தி செய்யவேண்டுவது முதன்மையாகையாலும், மகா உத்கிருஷ்டம்



பொருந்தியுள்ளதும், சுயம்புவடிவமைந்ததும், பிரகாசம்பொருந்தியுள்ளதும், பிரமா, சந்திரன், சூரியன், அக்னி, முருகக்கடவுள், துர்க்கை, காளி, அசுவினிதேவதைகள், முதலிய தேவதைகளாலும், புருஷாமிருகர், மார்க்கண்டேயர், வசிட்டர், அகத்தியர் முதலியரிஷிகளாலும், பூசிக்கப்பெற்று தங்கடங்களபீஷ்டங்களை நிறைவேற்றிக்கொண்டதும், ஸ்ரீ நந்திகேசருக்குத் திருமணம் முடிந்ததும், பழு நர்த்தனஞ்செய்ததும், சிவகங்கை, லக்ஷ்மிதீர்த்தம், உத்ரவாஹினியாய்வோடுகிற காவிரிநதி இவைகளையுடைத்தானதும், பிரகாசம்பொருந்தியுள்ள வச்சிரத்தூணேசர், சுந்தரநாயகியம்மை, வாழார்க்ககன்னியம்மை, சுந்தரவிநாயகர், இவர்கள் சான்னித்தியம்பெற்று பக்தர்களுக்கு இஷ்டவரத்தைக்கொடுக்கக்கூடியதும், மானுடர்களின் மரணகாலத்தில் தாரகமந்திரத்தை ஈசனுபதேசஞ்செய்யக்கூடியதும், முன்னம் வன்காடாயிருந்து அப்பால் திருமழுவாடியென்று பெயர்வாய்த்துள்ளதுமான திவ்யஸ்தலத்தின் மகிமையைச் சிவநேசச்செல்வர்கள் சிரவணஞ்செய்தப்படி நான் அநேகரின் வேண்டுகோளின்படியே வடமொழியிலிருந்ததை அகரமாங்குடி பிர்ம ஸ்ரீ சிதம்பர சாஸ்திரிகள் குமாரர் பிர்ம ஸ்ரீ "சப்தரிஷி சாஸ்திரிகளால்" தமிழில் பதவுரையாக சுருக்கமாய் மொழிபெயர்த்ததைக்கொண்டு கற்றோர்முதலிய யாவருமெளிதிலுணருமாறு தெள்ளிய தமிழ் நடையில் புராணலக்ஷணங்களுக்கேற்ப உலகோபகாரமாய் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறேன்.

இவ்வாறு கூறியுள்ள மகா மகிமைதங்கிய புராணத்தில் எழுத்து சொல், முதலிய இலக்கணவழுக்களிருப்பினும், கற்றோராயுள்ளவர்கள் இந்தகடவுளின் விசேடத்தைக்கூறும் கதையாதலால் தோஷத்தைநீக்கி, குணமாகிய ரசத்தைக்கிரகித்து சச்சிதானந்தமூர்த்தியின், திருவருட்பாதகமலங்கட்பேறு பெய்வர்.

இப்புராணத்தை வெளியிடுமாறு என்னைத்தூண்டிய பலரையும், கைமாறேதுமில்லாது வடமொழியிலிருந்து தமிழில் பத

[illegible]யாக மொழிபெயர்த்துக்கொடுத்த பிரம ஸ்ரீ சப்தரிஷிசாஸ்திரிகளையும், என்றும் மறவாதிருக்கக் கடவேன். ஒன்றுக்கும் [illegible] பொருள்பொருட்டாய் இப்புராணத்தை எழுதி [illegible] என்மனத்திற்றுடிகொண்டு [illegible] நித்தியமங்களமூர்த்தியும், நிமைமயாளனும், பக்தவத்ஸலனுமான சுந்தரநாயகி வாழர்ந்தகம்னிசமேத வச்சிரவிநாயகேசரின் செய்ய திருத்தாமரையடிகளையும், முக்காலமல்லா வெக்காலத்தும் வணங்கி நிற்கும்

அடிமை


சு. கலியப்பெருமாள்,

தஞ்சாவூர்.

——):0:(——

அடியிற்குறிப்பிட்டவர்களின் வேண்டுகோளின்படி இப்புத்தகத்தை அச்சிடப்பட்டது.

| ள. | பெயர். | தொழில். | இருப்பிடம். |
|---|---|---|---|
| 1 | பிரமஸ்ரீ சாமிநாதையரவர்கள். | கோவில்கணக்கு | இடும்பாவனம். |
| 2 | ,, சுப்ரமண்ய அய்யரவர்கள். | கோவில் ஸ்தானீகம். | டை |
| 3 | ,, விஸ்வநாத அய்யரவர்கள். | கிராம கர்ணம். | டை |
| 4 | ,, சிகாமணி அய்யரவர்கள். | ஜோஸ்யம். | டை |
| 5 | ஸ்ரீலஸ்ரீ கோ. இ. சதாசிவ சுவாமிகள். | | டை |
| 6 | ,, இ. சு. சதாசிவ சுவாமிகள், | மேல்மடம். | டை |
| 7 | ,, மகாதேவ சுவாமிகள். | | டை |
| 8 | மகா-ள-ஸ்ரீ தர்மலிங்கம் பிள்ளையவர்கள் | கிராம முன்சிப், தர்மகர்த்தா. | டை |
| 9 | ,, இரங்கசாமி பிள்ளை அவர்கள் | போஸ்டு மாஸ்டர் | டை |
| 10 | ,, பஞ்சநதம்பிள்ளை அவர்கள். | கண்டிராக்டர். | டை |
| 11 | ,, இரங்க நாடார் அவர்கள். | டை | டை |
| 12 | ,, கந்தசாமி நட்டுவனார். | | டை |
| 13 | ,, வீரப்பஉடையார் அவர்கள் | கிராம முன்சீப். | எலந்தன்கூடம். |
| 14 | ,, சேது பிள்ளையவர்கள். | தர்மகர்த்தா. | அந்தணக்குறிச்சி |





சிவமயம்.

# மூவர் தேவாரங்கள்.

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரருளிச்செய்த

### திருமழபாடி — பண் இந்தளம்.

திருச்சிற்றம்பலம்.

———0———

களையும் வல்வினை யஞ்சனெஞ்சே கருதார்புர
முளையும் பூசல்செய் தாடலர் மால்வரை நல்விலா
வளைய வெஞ்சரம் வாங்கியெய்தார் மதுத்தும்பிவண்
டளையுங் கொன்றையந்தார் மழபாடியு ளண்ணலே. (க)

காச்சிலாத பொன்னொக்குங் கனவயிரத்திர
ளாச்சிலாத பளிங்கின னஞ்சுமுனாடினன்
பேச்சினா லுமக்காவதென் பேதைகாள் பேணுமின்
வாச்ச மாளிகைசூழ் மழபாடியை வாழ்த்துமே. (உ)

உரங்கெடுப்பவ னும்பர்க ளாயவர் தங்களைப்
பரங்கெடுப்பவ னஞ்சையுண்டு பகலோன்றனை
முரண்கெடுப்பவன் முப்புரந் தீயெழச் செற்றுமுன்
வரங்கொடுப்பவன் மாமழபாடியுள் வள்ளலே. (ங)

பள்ளமார் சடையிற் புடையே யடையப்புனல்
வெள்ளமாதரித்தான் விடையேறிய வேதியன்

வள்ளன் மாமழபாடியுண் மேய மருந்தினை
யுள்ள மாதரின் வினையாயின வோயுமே. (௪)

தேனுலாமலர் கொண்டுமெய்த் தேவர்கள் சித்தர்கள்
பானெய்யஞ்சுட னாட்டமுன் னாடிய பால்வண்ணன்
வானநாடர்கள் கைதொழு மாமழபாடியெங்
கோனை நாடொறுங் கும்பிடவே குறிகூடுமே. (௫)

தெரிக்கவல்புர மூன்றுடன் மாட்டிய சேவகன்
பரிந்து கைதொழுவாரவர் தம்மனம் பாவினான்
வரிந்த வெஞ்சிலை யொன்றுடையான் மழபாடியைப்
புரிந்து கைதொழுமின் வினையாயின போகுமே. (௬)

சந்த வார்குழலா ளுமை தன்னொரு கூறுடை
யெந்தையா னிமையாத முக்கண்ணின னெம்பிரான்
மைந்தன் வார்பொழில் சூழ்மழபாடி மருந்தினைச்
சிந்தியா வெழுவார் வினையாயின தேயுமே. (௭)

இரக்க மொன்றுமிலா விறையான் றிருமாமலை
யரக்கனா லெடுத்தான்றன் றோண்முடி பத்திற
விரற்றலைக் கிறுவி யுமையாளொடு மேயவன்
வரத்தையே கொடுக்கும் மழபாடியுள் வள்ளலே. (௮)

ஆலமுண் டமுத மமரர்க்கரு ளண்ணலார்
காலனாருயிர் வீட்டிய மாமணி கண்டனார்
சால நல்லடியார் தவத்தார்களுஞ் சார்விட
மாலயன் வணங்கு மழபாடியெ மைந்தனே. (௯)

கலியின் வல்லமணுங் கருஞ்சாக்கியப் பேய்களுந்
நலியு நாள்கெடுத் தாண்ட வென்னாதனார் வாழ்பதி



பலியும் பாட்டொடு பண்முழவும் பலவோசையு
மலியு மாமழபாடியை வாழ்த்தி வணங்குமே. (௧௦)

மலியுநாள்விழாச் சூழ்மழபாடியுள் வள்ளலைக்
கலிசெய் மாமதில் சூழ்கடற்காழிக் கவுணியன். (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனா ரருளிச்செய்த

### திருமழபாடி.— பண் கொல்லி.

திருச்சிற்றம்பலம்.

காலையார் வண்டினங் கிண்டிய கார்நறுஞ்
சோலையார் பைங்கிளி சொற்பொருள் பயிலவே
வேலையார் விடமணி வேதியன் விரும்பிட
மாலையார் மதிதவழ் மாமழபாடியே. (௧)

கறையணி மிடறுடைக் கண்ணுத லெண்ணிய
பிறையணி செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணுமூர்
துறையணி குருகினத் தாமலர் துதையவே
மறையணி நாவினான் மாமழபாடியே. (௨)

அந்தணர் வேள்வியு மருமறைத் துழனியுஞ்
செந்தமிழ்க் கீதமுஞ் சீரினால் வளர்தரப்
பந்தணை மெல்விரலாளொடும் பயில்விட
மந்தம்வந் துலவுசீர் மாமழ பாடியே. (௩)

அத்தியி னுரிதனை யழகுறப் போர்த்தவன்
முத்தியாய் மூவரின் முதல்வனாய் நின்றவன்

பத்தியாற் பாடிடப் பரிந்தவர்க் கருள்செயு
மத்தனா ருறைவிட மணிமழபாடியே. (௪)

கங்கையார் சடையிடைக் கதிர்மதி யணிந்தவன்
வெங்கண்வா ளரவுடை வேதியன் றீதிலாச்
செங்கயற் கண்ணுமை யாளொடுஞ் சேர்விட
மங்கைமார் நடம்பயின் மாமழபாடியே. (௫)

பாலனா ராருயிர் பாங்கினோ டுண்வருங்
காலனா ருயிர்செகக் காலினாற் சாடினன்
சேலினார் கண்ணினா ளுடனுறைஞ் சேர்வி[illegible]
மாலினார் வழிபடு மாமழபாடியே. (௬)

விண்ணிலா ரிமையவர் மெய்ம்மகிழ்ந் தேத்தவே
யெண்ணிலார் முப்புர மெரியுண நகைசெய்தார்
கண்ணினாற் காமனைக் கனலெழக் காய்ந்தவெம்
மண்ணலா ருறைவிட மணிமழபாடியே. (௭)

கரத்தினாற் கயிலையை யெடுத்த காரரக்கனை
சிரத்தினை யூன்றினுஞ் சிவனடி சரணென
விரத்தினாற் கைந்நரம் பெடுத்திசை பாடலும்
வரத்தினன் மருவிட மாமழ பாடியே. (௮)

ஏடிலா மலர்மிசை [illegible]
[illegible] கரியசீர் நாதனா ருறைவிடம்
பாடலாம் பெண்ணையின் பழம்விழப் பைம்பொழின்
மாடெலா மல்குசீர் மாமழ பாடியே. (௯)

உறிபிடித் தூத்தைவாய்ச் சமணொடு சாக்கியர்
நெறிபிடித் தறிவிலா நீதர்சொற் கொள்ளன்மின்
பொறிபிடித் தரவினம் பூணெனக் கொண்டுமான்



மறிபிடித் தானிட மாமழ பாடியே. (௧0)

ஞாலத்தா ராதிரை நாளினா னொடோறுஞ்
சீலத்தான் மேவிய திருமழ பாடியை
ஞாலத்தான் மிக்கசீர் ஞானசம் பந்தன்சொற்
கோலத்தாற் பாடுவார் குற்றமற் றார்களே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனா ரருளிச்செய்த

## திருமழபாடி—பண்—கௌசிகம்.

திருச்சிற்றம்பலம்.

அங்கையா ரழலன்னழ கார்சடைக்
கங்கையான் கடவுள்ளிட மேவிய
மங்கையா னுறையும்மழ பாடியைத்
தங்கையாற் றொழுவார்தக வாளரே. (௧)

விதியுமாம் விளைவாமொழி யார்த்ததோர்
கதியுமாஞ் சிவமாம்வசி யாற்றமா
மதியுமாம் வலியாமழ பாடியு
ணதியந்தோய் சடை நாதனற் பாதமே. (௨)

முழவினான் முதுகாடுறை பேய்க்கணக்
குழுவினான் குலவுங்கயி லேந்திய
மழுவினா னுறையும்மழ பாடியைத்
தொழுமினுந் துயரானவை தீரவே. (௩)

கலையினான்மறை யான்கதி யாகிய
மலையினான்மரு வார்புர மூன்றெய்த
சிலையினான்சேர் திருமழ பாடியைத்
தலையினால்வணங் கத்தவ மாகுமே. (௪)

நல்வினைப்பய னான்மறை யின்பொருள்
கல்வியாய கருத்த னுருத்திரன்
செல்வன்மேய திருமழபாடியைப்
புல்கியேத்தும தேபுகழாகுமே. (௫)

நீடினானுல குக்குயி ராய்நின்று
ஆடினானெரி கானிடை மாநடம்
பாடினானிசை மாமழ பாடியை
நாடினார்க்கில்லை நல்குர வானவே. (௬)

மின்னினாரிடை யாளொரு பாகமாய்
மன்னினானுறை மாமழபாடியைப்
பன்னினாரிசை யால்வழி பாடுசெய்
துன்னினார்வினை யாயின வோயுமே. (௭)

தென்னிலங்கையர் மன்னன்செ ழுவரை
தன்னிலங்கவ டர்த்தருள் செய்தவன்
மன்னிலங்கிய மாமழ பாடியை
யுன்னிலங்கவு றுபிணி யில்லையே. (௮)

திருவினாயக னுஞ்செழுந் தாமரை
மருவினானுந்தொ ழத்தழன் மாண்பமர்
ருருவினானுறை யும்மழபாடியைப்
பரவினார்வினை பற்றறுப் பார்களே. (௯)



கலியுடன்றுவ ராச்சமண் சாக்கியர்
வலியசொல்லினு மாமழபாடியு
ளொலிசெய்வார்கழ லான்றிரு நாமமே
மெலியுநம்முடன் மேல்வினை யானவே. (௰)

மந்தமுந்து பொழின்மழ பாடியு
ளெந்தைசந்த மினிதுகந் தேத்துவான்
கந்தமார்கடற் காழியுண் ஞானசம்
பந்தன்மாலைவல் லார்க்கில்லை பாவமே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனாரருளிச்செய்த

## திருமழபாடி — திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

நீறேறு திருமேனி யுடையான் கண்டாய், நெற்றிமே
லொற்றைக்க, ணிறைந்தான்கண்டாய், கூறாக உமை
பாகங் கொண்டான்கண்டாய் கொடியவிட முண்டிருண்
ட கண்டன்கண்டா, யேறேறி யெங்குந்திரிவான் கண்
டாயேழுலகுமேழ்மலையு மானான்கண்டாய், மாறானார்
தம்மரண மட்டான்கண்டாய் மழபாடிமன்னு மணா
ளன்றானே. (௧)

கொக்கிறகு சென்னி யுடையான் கண்டாய் கொல்லை
விடையேறுங் கூத்தன் கண்டாய், அக்கரை மேலாட
லுடையான் கண்டா யனலங்கை யேந்திய வாதிகண்டா
யக்கோடரவ மணிந்தான் கண்டா, யடியார்கட் காரமுத

பானுன் கண்டாய் மற்றிருந்த கங்கைச்சடையான்
கண்டாய் மழபாடி மன்னுமணாளன்றானே. (௨)

நெற்றித்தனிக்கண்ணுடையான் கண்டாய் நேரிழையோ
ர்பாகமாய் நின்றான் கண்டாய், பற்றிப்பாம்பாட்டும்
படிறன் கண்டாய் பல்லூர்ப் பலிதேர்பரமன் கண்
டாய், செற்றார்புரமூன்றுஞ்செற்றான்கண்டாய் செழு
மாமதி சென்னிவைத்தான்கண்டாய் மற்றொருகுற்ற
மில்லாதான் கண்டாய் மழபாடி மன்னுமணாளன்றா
னே. (௩)

அலையார்ந்த புனற்கங்கைச் சடையான் கண்டா யண்டத்து
க்கப்பாலாய் நின்றான்கண்டாய், கொலையான கூற்ற
ங்குமைத்தான் கண்டாய் கொல் வேங்கைத்தோலொ
ன்றுடுத்தான் கண்டாய், சிலையாற்றிரிபுரங்கள் செற்றா
ன் கண்டாய்செழுமாமதிசென்னி வைத்தான்கண்டா
ய், மலையான்மடந்தைமணாளன்கண்டாய் மழபாடிமன்னு
மணாளன்றானே. (௪)

உலந்தார்தம்மங்க மணிந்தான் கண்டா யுலகையோடின்ன
ருள்கள் செய்தான்கண்டாய், நலந்திகழுங்கொன்றைச்
சடையான்கண்டாய் நால்வேதமாறங்கமானான்கண்டா
யுலந்தார் தலைகலனாக் கொண்டான்கண்டா யும்பரார்
தங்கள் பெருமான்கண்டாய், மலர்ந்தார் திருவடியென்
றலைமேல்வைத்த மழபாடி மன்னுமணாளன்றானே (௫)
நாமஞ்சரயின் றலையைச் சாய்த்தான் கண்டாய் நகவு
டையார் நெஞ்சிருக்கை கொண்டான்கண்டாய், பூமல
ரானேத்தும்புனிதன் கண்டாய்புணர்ச்சிப்பொருளாகி
நின்றான்கண்டா, யேமருவுவெஞ்சிலை யொன்றேந்தி



கண்டாயிருளார்ந்த கண்டத்திறைவன் கண்டாய், மாம
ருவுங்கலை கையிலேந்தி கண்டாய் மழபாடிமன்னுமணா
ளன்றானே. (௬)

ஏராகிநெடுவரைகளானான்கண்டாய் நிலவாகி நீள்விசு
ம்புமானான்கண்டாய், பாராகிப்பவ்வமேழானான் கண்
டாய் பகலாகிவானாகிநின்றான்கண்டா, யாரேனுந்த
ன்னடியார்க்கன்பன்கண்டா யனுவாகியாதியாய் நின்று
ன்கண்டா, வாரார்ந்த வனமுலையாள்பங்கன் கண்டா
ய் மழபாடிமன்னு மணாளன்றானே. (௭)

பொன்னியலுந் திருமேனியுடையான்கண்டாய் பூங்
கொன்றைத்தாரொன் றணிந்தான்கண்டாய், மின்னிய
லும் வார்சடையெம் பெருமான் கண்டாய் வேழத்தி
னுரிவிருப்பப்போர்த்தான் கண்டாய், தன்னியல்பார்
மற்றொருவரில்லான்கண்டாய் தாங்கரியசிவந்தானாய் நி
ன்றான்கண்டாய், மன்னியமங்கையோர் கூறன் கண்
டாய் மழபாடிமன்னு மணாளன்றானே. (௮)

ஆலாலமுண்டுகந்தவாதிகண்டா யடையலர்தம்புரமூன்
று மெரித்தான்கண்டாய்,காலாலக்காலனையுங்காய்ந்தா
ன்கண்டாய் கண்ணப்பர்க்கருள்செய்த காளைகண்டா
ய், பாலாருமொழிமடவாள் பாகன்கண்டாய் பசுவேறி
ப் பலிதிரியும் பண்பன்கண்டாய், மாலாலு மறிவரிய
மைந்தன்கண்டாய் மழபாடி மன்னுமணாளன்றானே. (௯)

ஒருசுடராயுலகேழுமானான் கண்டா யோங்காரத்துட்
பொருளாய் நின்றான்கண்டாய், விரிசுடராய்விளங்கொ
ளியாய் நின்றான்கண்டாய் விழவொலியும் வேள்வொ

பெருமானுங் கண்டார், இருசுடர் மீதோடாவிலங்
கைக்கோனை யீடழிய விருபதுதோளிறுத்தான் கண்டாய்
இருசுடரின் மாணிக்கக் குன்று கண்டாய் மழபாடி ம
ன்னு மணாளன் றானே. (௧0).

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த

## திருமழபாடி — பண், தக்கராகம்.

திருச்சிற்றம்பலம்.

---0---

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினி யாரை நினைக்கேனே. (௧)

கீளார் கோவணமுந் திருநீறுமெய் பூசியுன்றன்
றாளே வந்தடைந்தேன் றலைவாவெனை யேன்றுகொணீ
வாளார் கண்ணிபங்கா மழபாடியுள் மாணிக்கமே
கேளா நின்னையல்லா லினி யாரை நினைக்கேனே. (௨)

எம்மா னெம்மனையென் றெனக்கெட்டனைச் சார்வாகார்
இம்மைப் பிறவிப் பிறந்தேயிறக் கெய்த் தொழிந்தேன்
மைம்மாம் பூம்பொழில்சூழ் மழபாடியுண் மாணிக்கமே
யெம்மா னின்னையல்லா லினி யாரை நினைக்கேனே. (௩)



பண்டே நின்னடியே னடியா ரடியார்கட் கெல்லாந்
தொண்டே பூண்டொழிந்தேன் றொடராமைத் துரிசறுத்தேன்
வண்டார் பூம் பொழில்சூழ் மழபாடியுண் மாணிக்கமே
யண்டா நின்னையல்லா லினியாரை நினைக்கேனே. (௪)

கண்ணா யேழுலகுங் கருத்தாய வருத்தமுமாய்ப்
பண்ணா ரின்றமிழாய்ப் பரமாய பரஞ்சுடரே
மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே
யண்ணா நின்னையல்லா லினியாரை நினைக்கேனே. (௫)

நாளார் வந்தணுகி நலியாமுன் நின்றனக்கே
யாளா வந்தடைந்தே னடியேனையு மேன்று கொணீ
மாளா நாளருளு மழபாடியுண் மாணிக்கமே
யாளா நின்னை யல்லா லினியாரை நினைக்கேனே. (௬)

சந்தாருங் குழையாய் சடைமேற் பிறைதாங்கி நல்ல
வெந்தார் வெண்பொடியாய் விடையேறிய வித்தகனே
மைந்தார் சோலைகள்சூழ் மழபாடியுண் மாணிக்கமே
யெந்தாய் நின்னையல்லா லினியாரை நினைக்கேனே. (௭)

வெய்ய விரிசுடரோன் மிகுதேவர் கணங்க ளெல்லாஞ்
செய்ய மலர்களிட மிகுசெம்மையுள் நின்றவனே
மையார் பூம்பொழில்சூழ் மழபாடியுண் மாணிக்கமே
யையா நின்னையல்லா லினியாரை நினைக்கேனே. (௮)

நெறியே நின்மலனே நெடுமாலயன் போற்றிசெய்யுங்
குறியே நீர்மையனே கொடியாரிடையாள் தலைவா
மறிசேர் செங்கையனே மழபாடியுண் மாணிக்கமே
யறிவே நின்னையல்லா லினியாரை நினைக்கேனே. (௯)

ஏரார் முப்புரமு மெரியச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுண் மேயவனைச்

சொர்க்காலிகோ ரெழு முனரக்க தசிம்
பாரோ ரேத்தவல்லார்ப் பரலோகத் திருப்பாரே. (௧0)

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுநாயனாரருளிச்செய்த

## திருமழபாடி—திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

அலையடுத்த பெருங்கடனஞ் சமுதாவுண்டு அமரர்கடந்
தலைகாத்தவையர் செம்பொற், சிலையெடுத்துமாநாக
நெருப்புக் கோத்துத் திரிபுரங்க ளெரிவித்தசெல்வர்
போலு, நிலையடுத்த பசும்பொன்னான் முத்தானீண்
டநிரை வயிரப்பலகையாற் குவையார்ந்தெங்கு மலையடு
த்த மழபாடி வயிரத்தூணையென்றென்றே நானரற்றி
நைகின்றேனே. (௧)

அறைகலந்த குழன்மொந்தை வீணையாழு மந்திரத்
திற் கந்தருவரமரேத்த, மறைகலந்த மந்திரமுநீரு
ங்கொண்டு வழிபட்டார் வானாளக்கொடுத்தியன்றே,
கறைகலந்த பொழிற்கச்சிக் கம்பமேய கனவயிரத்திர
டோளா கலிக்கும்மாட, மறைகலந்த மழபாடிவயிரத்தூ
ணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. (௨)

உரங்கொடுக்கு மிருண்மெய்யர் மூர்க்கர்பொல்லா வூத்
தைவாய்ச் சமணர்தமையுறவாக்கொண்ட, பரங்கெடுத்
திங்கடியேனை யாண்டுகொண்ட பவளத்தின்றிரடோளா
பசும்பொன்முத்தே, புரங்கெடுத்துப்பொல்லாத காம
னாகம்பொடியாக விழித்தருளிப் புலியோர்க்கென்றும்
வரங்கொடுக்கு மழபாடி வயிரத்தூணே யென்றென்
றேநானரற்றிநைகின்றேனே. (௩)



ஊனிகந்தூணுறிகையர் குண்டர் பொல்லா ஊத்தைவா
ய்ச்சமணருறவாகக்கொண்டு, ஞானகஞ்சேர்ந்துள்ள
வயிரத்தை நன்று நாயேனைப்பொருளாக வாண்டு
கொண்ட மீனகஞ்சேர் வெள்ளநீர் விதியாற்சூடும்வே
ந்தனை விண்ணவர்தம் பெருமானை மேக, வானகஞ்
சேர்மழபாடி வயிரத்தூணே யென்றென்றே நானரற்
றிநைகின்றேனே. (௪)

சிரமேற்ற நான்முகன்றன் றலையுமற்றைத் திருமால்தன்
செழுந்தலையும் பொன்றச்சிந்தி, யுரமேற்ற விரவிபற்
கர்த்துச்சோமனொளிர் கலைகள் படவுழக்கி யுயிரைநல்
கி நிரையேற்ற விடையேறி நாகம்பூண்ட நம்பியையே
மறைநான்கு மோலமிட்டு, வரமேற்கு மழபாடி வயிர
த்தூணே யென்றென்றே நானரற்றிநைகின்றேனே. (௫)

சினந்திருத்துஞ் சிறுபெரியார் குண்டர்தங்கள் செ
துமதியார் தீவினைக்கே விழுந்தேன்றன்னைப்; புனந்திரு
த்தும் பொல்லாத பிண்டிபேணும் பொறியிலியே
னைப்பொருளா வாண்டுகொண்டு, தனந்திருத்துமவர்தி
றத்தையொழியப்பாற்றித் தயாமூல தன்மவழியெனக்
கு நல்கி, மனந்திருத்து மழபாடி வயிரத்தூணே யென்
றென்றே நானரற்றி நைகின்றேனே. (௬)

சுழித்துணையாம் பிறவிவழித் துக்கநீக்குஞ் சுருள்சடை
யெம்பெருமானே தூயதெண்ணீர், இழிப்பரிய பசுபாசப்
பிழைப்பைநீக்கு மென்றுணையே யென்னுடைய வெம்மா
னெம்மான், பழிப்பரிய திருமாலு மயனுங் காணாப்பரி
சே சுருதிமுடிக்கணியாய் வாய்த்த, வழித்துணையா
மழபாடி வயிரத்தூணே யென்றென்றே நானரற்றி
நைகின்றேனே. (௭) (௮) (௯) (௧0)

திருச்சிற்றம்பலம்.

# தோத்திரங்கள்.

## சுந்தர விநாயகர் துதி.

### விருத்தம்.

சீர்பூத்த செஞ்சடையிற் கொன்றை கங்கைத்
திங்களுட னரவுபிறைக் கடுக்கை சூடி
ஏர்பூத்த பலபகலை மருங்கில் வைத்து
வெள்ளிப்பெருங் கைலைதனில் வீற்றிருக்கும்
நீர்பூத்த மேனியரும் பரமனீன்ற
நீள்துதிக்கை யானைமுக னொற்றைக் கொம்பன்
பேர்பூத்த சுந்தரவி நாயகன்றன்
பொற்றாளென் சிரமதனிற் போற்றி செய்வாம்.

## சுப்பிரமணியர் துதி.

குருமுனிவர்க் கருந்தமிழை யுரைத்த செல்வன்
கூர்வேலைக் கரமதனிற் றாங்குஞ் சித்தன்
பெருகுபிர்மை யவர்சேனைக் கதிபன் கந்தன்
பிரமனைச் சிறையிலிட்டுப் பிரண வத்தின்
பொருள்தனைச் சிவன்றனக்கு முரைத்த ஞான
சின்மயனும் சிவசுப்பிர மண்யன் செவ்வேள்
வருதிபெருந் தமிழுரைக்க வெந்த நாவி
லூற்றிடவே மலர்பதத்தை மனத்திற் கொள்வாம்.

## வச்சிரத்துரேசர் துதி.

அஞ்செழுத்தி லமர்ந்துநின்ற வேகண்ட ரூபி
யாருயிர்க்கு முயிரான வநாதி மூர்த்தி
செஞ்சடையி லலையுடைய கங்கை சூடி
சிலைவளைத்து திரிபுரத்தை சிரித்து நீற்றோன்



கஞ்சனரி தேடரிய கைலை நாதன்
கறைமிடற்றோன் கரிதரித்தோன் கால காலன்
வஞ்சமின்றி யடியருட னிட்டைர் தீர்த்தோன்
வச்சிரத்து ரேசர்பதம் வணங்கி நிற்பாம்.

## சுந்தரநாயகியம்மை துதி.

உம்பரிடர் தீர்க்கவுக்ர ரூபங் கொண்டு
வோங்கார வட்டத்தி லுயர்ந்து நின்று
வெம்புமசு ரர்பயத்தை வேரறுத்து
வேதாந்த ரூபமதாய் விளங்கி நின்று
அம்புயத்தும் நெடுமாலுக் குடன் பிறந்து
ஆதியுட னந்தமுமில் லாதாகி
தெம்புடனே திருமருவை யிலங்கி நின்ற
சுந்தர நாயகிபாதந் துணையாய்க் கொள்வாம்.

முற்றிற்று.



கணபதி துணை.

# திருமழுவாடி புராணம்.

## முதல் அத்தியாயம்.

### நைமிசாரண்ணியச் சருக்கம்.

நெடிய கடலால் சூழப்பெற்று இப்பூமிதேவிக்கு ஓர் அலங்காரம் போன்றதும், மோக்ஷத்தை விரும்புகின்ற முமுக்ஷுக்களுக்கு சுலபமாய் அதனையளிக்கக்கூடியதும், சகல புண்ணிய ஸ்தலங்களுள் மிக்கமேன்மையையுடைத்தானதும், எல்லா புராதனஸ்தலங்களுள் பழமையானதும், மத,மாத்ஸர்யங்களை வேரறுத்துத்தவஞ்செய்யும் முனிசிரேஷ்டர்களால் நிறையப்பெற்றதும், சகல புண்ணிய தீர்த்தங்களுக்கெல்லாம் உத்தமமான தீர்த்தத்தையுடைத்தானதும், நினைத்த வரங்களை எளிதிலளிக்கக்கூடியதும், காமிகளால் அதன் மகிமையையறியப்படாததும், காமக்,குரோத,லோப மோஹ,மத,மாத்ஸரியங்களால் காணப்படாததும், சத்தியமே குடிகொண்டதும், சர்வேசுவரரான கடவுளுக்கிருப்பிடமானதுமான நைமிசாரண்யமென்னும் ஓர் வனமுண்டு, அவ்வனத்தைப்பார்த்தாலும், அதில் வசித்தாலும், அதன் பேரை ஒருவாயுரைத்தாலும், அதனைப்பிரிசித்தாலும், சகல தீவினைகளும் ஒழிந்து ஞானமடைந்து மோக்ஷம் பெறுவார்கள். இவ்வித மேன்மை

தங்கிய அந்த நைமிசாரண்ணியத்தில் பிரமதேவரானவர் சர்வஞ்ஞர்களின் கேதுக்களைக்கருதி முன் ஒருகாலத்தில சர்வஜீவதயாபரனான பார்வதிபதியாகிய பரமேசுவர மூர்த்தியை சந்தோஷிப்படுத்துவதற்காய் ஓர் யாகத்தைச் செய்ய வெத்தனித்து சர்வதேவதைகளையும், யக்ஷ, கின்னர, கந்தர்வ, சித்த, வித்யாதரர் முதலாகிய விண்ணுலகத்தவரும். தேவரிஷிகளும், வசிஷ்டர், வாமதேவர், பிருகு, அத்ரி, அங்கிரசர், கௌதமர், காசிபர், ஜாலந்திரமுனி, விபண்டகர் வியாசர், சநாநந்தர், சௌனகர், கபிலர், தீர்க்கதரிசி, காலதரிசி, ஆஷோளர், பரத்வஜர், உக்கிரவீரியர். மஹாவீரியர், ருத்மதரிசி, சிரந்தனர், ஜைமினி, [illegible] அகத்தியர், சருடவிருதர், யோகநிஷ்டர், ஞானநிஷ்டர், பிரமநிஷ்டர் முதலிய முனிசிரேட்டர்களை பிரமதேவரால் யாகத்துக்கழைக்கப்பட்டு அவ்வனம் வந்து சேர்ந்தனர். இவ்விதமாய் வந்தவர்களுடன் அந்த நைமிசாரண்ணியவாசிகளான மகாரிஷிகளையும் மரியாதையாய் வரவழைத்து வேதசாஸ்திரங்களை ஐயந்திரிபறக்கற்றுணர்ந்த மகாமகிமை பொருந்திய தவச்சிரேட்டர்களைக்கொண்டு தன் யாகத்தை முடிக்க வெண்ணி பிரமதேவன் முனிகளைப்பார்த்து நீங்களெல்லோரும் ஒன்று சேர்ந்து என் யாகத்தை நடத்தவேண்டுமென்று வேண்ட அவ்வேண்டுகோளுக்கிணங்கி அனைவரும் விதிப்படி அவரது யாகத்தை நிறைவேற்றினர். இவ்வாறு யாகம் முடிந்த பின்பு பிரமதேவரும் அவரவர்களுக்குத்தக்கபடி தக்ஷிணை வஸ்திராபரண முதலியவைகளைப்பூர்த்தியாகக்கொடுத்து ஒவ்வொருவரையுந்திருப்தி செய்வித்தனர். இவ்வாறு பிரமரின் யாகம் முடிந்த பின்னர் நைமிசாரண்ணியத்திலுள்ள மகாரிஷிகளும் யாகத்துக்காக வந்த முனிசிரேட்டர்களும் ஒன்று சேர்ந்து வேதசாஸ்திரங்களை கற்றுக்கற்றுணர்ந்தும் சிவபக்தியிற் சிறந்தவர்களாகயிருந்தும் பரமசிவனது மகிமையைக்கூறும் சரிதைகளை சூதமுனிவரால் விஸ்தாரமாகத்தெரிந்து கொள்ள வெண்ணி, அந்நாத வாதத்திற் செந்நமைத்தையுடையவரும், முனி



வர் குலத்திற் சிறந்தவரும், அகண்டு நீண்ட புலித்தோலை உத்தரீயமா யுடையவரும், உருத்திராக்ஷங்களாற் சிறந்த பலசடைகளாற் கட்டப்பட்ட மகுடம் புனைந்தவரும், கைகள் காதுகள் கழுத்து முதலிய அவயவங்களில் ருத்திராக்ஷ ஆபரணத்தைப்பூணிந்தவரும், நெற்றி முதலிய அங்கங்களில் விபூதியை திரிபுண்டரமாக அணிந்தவரும். ஜபமாலையை தளிர்போன்ற கையிலுடையவரும், இடைவிடாது பரமசிவனை தியானஞ்செய்து சகலபாவங்களை யொழித்தவரும், அசைவற்றிருக்கின்ற இரண்டு கண்களால் நாசிநுனியையே பார்த்துக்கொண்டிருப்ப வரும் பஞ்சேந்திரியங்களையும் அடக்கி அசையாத மனத்தை யுடையவரும், புன்னகை விளங்கிய அழகான முகமண்டலங்களோடு கூடிய முகத்தையுடையவரும், சைவாகமங்க ளனைத்தும் சந்தேகமறக் கற்றுணர்ந்தவரும், சம, தமாதிகளை யனுஷ்டித்து நிர்குண பரப்பிரமத்தை தியானிப்பவரும், ஞானம் நிறைந்த நிர்மல மனத்தையுடையவரும், புராணங்களை மாணாக்கரின் பாலுரைப்பதில் மகாவல்லவரும், வியாசரிஷியின் சிஷ்யரும் தர்ப்பாசனத்தின் மீதிருந்து வேதத்தின் பொருள்களை ஆராய்ந்துக்கொண்டிருப்பவருமான சூதபுராணிகரையடைந்து மிகுந்த வணக்கத்துடன் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து இருகைகளையும் கூப்பி துதிக்கலாயினர்.

ஓ! முனிசிரேட்டரே! சிவத்தியானத்திற் சிறந்த சீமானே! வேதசாத்திரபுராணங்களாகிய சமுத்திரத்தைக் கடந்தவரே! யோகமார்க்கத்திற் சிறந்தவரே! பக்தர்களுக்கு வசமாகும் [illegible] டவே! பரிசுத்தமான [illegible] டையவரே! நற்குணங்களுக்கிருப்பிடமே!, சுருதிகளின் மர்ம மறிந்தவரே! சுகமுனிவர் தந்தையே! மகா தேவர் பாதங்களால் [illegible] மதிவள்

ளலே! தங்களிடத்தில் *பிராம்ஹம், பாத்மம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், பவிஷ்யோத்ரம், நாரதியம், மார்க்கண்டேயம், ஆக்நேயம், பிர்மகைவர்த்தம், லிங்கம், வராஹம், ஸ்காந்தம், வாருணம், ஸௌரம், மாத்ஸயம், காருடம், பிர்மாண்டம், ஆகிய பதினெண்புராணங்களையும், பாரத முதலிய இதிகாசங்களையும் கேட்டுணர்ந்தோம். மூவுலகுக்கும் முதன்மையான கதியைத் தரும் சைவாகமங்கள் அனைத்தையும், சிவக்ஷேத்திரங்களின் மகாத்மியங்களையும் விஸ்தாரமாகக்கேட்டுணர்ந்தோம். ஆயினும் சிவக்ஷேத்திரங்களுக்குட் சிறந்ததும் சிவபிரானுக்கும் பார்வதிதேவிக்கும் பிரியவாசஸ்தலமானதுமாகிய திருமழுவாடியென்னும் சிவஸ்தலத்தின் மகிமையை யெங்களுக்கு வுரைத்தருளவேண்டும். புத்திமான்களுக்குட் சிறந்த புண்ணிய சிரேஷ்டரே! எங்கள்மீதுகருணைகூர்ந்து (பரசு நர்த்தனபுரம்) திருமழுவாடி ஸ்தலத்தின் மகிமையை விஸ்தாரமாக எங்களுக் குரைக்க வேண்டுகிறோம். காவிரியாற்றின் வடகரையிலுள்ள தாலவனமென்னும் பனைக்காட்டில் சத்யலோகத்தில் பிரமதேவனாற் பூசிக்கப்பெற்ற வஜ்ரலிங்கம் வந்ததெவ்வாறு? அந்த வஜ்ரத்தூணேசருடைய வைபவங்கள் எவ்விதமானது? புருஷாமிருகமென்னும் முனிவர் வஜ்ரலிங்கத்தைப் பூஜித்ததெவ்விதம்? அவ்வரிய தலத்தில் விளங்கும்சர்வேஸ்வரனுக்கு வஜ்ரஸ்தம்பேசுவரரென்ற பெயர்வந்ததெப்படி? அச்சிவபிரானை மார்க்கண்டேயர் பூசித்த வரலாறென்ன? அதற்கு திருமழுவாடி என்று பெயர் வந்ததியாது? அத்தலத்திலுள்ள புண்ணிய தீர்த்தங்களுக்கு சிவகெங்கை, லக்ஷிமிதீர்

*பிராம்ஹம்=பிர்மபுராணம். பாத்மம்=பதுமபுராணம். ஆக்நேயம்=அக்கினிபுராணம். லிங்கம்=இலிங்கபுராணம். வராஹம்=வராகபுராணம். வாருணம்=வருணபுராணம். ஸௌரம்=சூரியபுராணம். மாத்ஸயம்=மச்சபுராணம். காருடம்=கருடபுராணம். வைஷ்ணவம்=விஷ்ணுபுராணம்.

இப் பதினெண் புராணங்களில் சைவபுராணம்-10 விஷ்ணு புராணம்-6 சூர்யபுராணம்-1 பிர்மாபுராணம்-1— ஆக 18.



த்தம், என்றுபெயர் வந்த விபரமென்ன? சுஷேணனென்னும் பிராமணனுக்கு மகாபாதகங்கள் தீர்ந்ததெவ்விதம்? வைத்யநாதரென்று அச்சிவபிரானுக்குப்பெயர் வந்த காரணம் யாது? சந்திரன், மகாவிஷ்ணு, காவேரி, அக்னி, துர்க்கை, முருகக்கடவுள், அகத்தியர், முதலியவர்கள் பூசித்து எவ்வாறு வரம்பெற்றனர். இவைகளின்விபரங்களையெல்லாம் விஸ்தாரமாக எங்களுக்கு புலப்படுமாறு கருணைகூர்ந்து உரைக்கவேண்டுகிறோமென்று தங்கள் சிரங்களிற் கைகூப்பிவணக்கமாய்க் கேட்டமுனிக்கூட்டங்களுடைய அமிழ்தம்போன்றவசனங்களைக்கேட்டு சூதமாமுனிவரானவர் திருமழுவாடித்தலத்துக்கிறைவனாகிய வஜ்ரஸ்தம்பேசுரரை மனதிற்றியானித்து உடலெங்கும் புளகிக்க ஆனந்தக்கண்ணீர்பெருக, முனிச்சிரேட்டர்களை நோக்கி கேளீர் மகானுபாவர்களாகிய முனிவர்களே! முன்காலத்தில் இத்தலத்தின் வைபவங்களை கும்போதயனாகிய அகத்தியமகாமுனிவருக்கு வேலைக்கையிற்றாங்கி வள்ளிதெய்வானைசமேதராயுள்ள முருகக்கடவுள் விரிவாயெடுத்துக்கூறினர் அதனைஉங்களுக்கு உரைக்கிறேன் நீங்கள் ஒரே மனதுடையவர்களாய் கேட்கக்கடவீர்களென்று சூதபுராணிகரானவர் சொல்லத்தொடங்கினர்.

சாஸ்திரங்களையெல்லாம் கற்றுணர்ந்த முனிவர்களே! ஜன்மாந்திரங்களிற்செய்த புண்ணியங்களாலன்றி உலகத்திலுள்ள ஒருவருக்கும் வஜ்ரத்தூணேசருடைய மகிமையைக்கேட்க அவாவுண்டாகமாட்டாது. நீங்கள் வெகுஜன்மங்களில் நல்லபுண்ணியத்தைச்செய்தவர்களானபடியால் உங்களுக்கு திருமழுவாடித் தலத்தில் விளங்கும் வஜ்ரத்தூணேசுவரருடைய மகான்மியத்தைக்கேட்கவிருப்பமுண்டாகிறது. இவ்வுலகத்தில் அகன்மாத்தாவொருவன் அத்தலத்தின் மகிமையைக்கேட்டபோதிலும் அவன் முக்திபடைவானென்பதற்கு சந்தேகமேயில்லை. அவ்விருந்து அதனைக்கேட்கும் உங்கள்பக்தியையெவ்வாறுவர்ணிக்கத்

தக்கது. நீங்கள் செய்ததவமேதலாம், வஜ்ரத்துணேசர் மகிமையைக்கேட்க உங்களுக்காவலிருப்பதினாலேயே உங்களுக்குப்பரசிவத்தினது அருள்பூர்த்தியாயிருக்கிறதென்பதை நன்றாய்க் காட்டுகின்றது. நீங்களேமகாத்மாக்கள். நீங்களே தவஞ்செய்தவர்கள். நீங்களே மோக்ஷமடையவர்கள். முனிவரர்களே! சச்சிதானந்த மூர்த்தியாகிய பார்வதிபதியின் மகிமையை உங்களையன்றி அறியவல்லவர்கள் யாவரென்று இவ்வாறுமுனிவர்களுடைய பக்திக்கு வியந்து சூதமுனிவர் பின்னும்சொல்லுகிறார்.

கேளுங்கள் தபோதனர்களே! ஆதிகாலத்தில் தமிழ்ப்பக்தி ஞன அகத்திய மகாமுனிவருக்கு சுப்பிரமணியர் உரைத்தவண்ணம் திருமழுவாடியின் க்ஷேத்திர மாஹாத்மியத்தையும், அதிலுள்ள வஜ்ரஸ்தம்பேசுரர் மான்மியத்தையும் உள்ளவாறே உங்களுக்குரைக்கிறேன், நீங்களதனை சாவதானமாய்க் கேளுங்கள் என்று, சூதபுராணிகர் பின்னும் சொல்லலாயினார்.

பக்தர்களுக்கு சர்வாபீஷ்டமும்கொடுக்க யானைமுகமும், நீண்ட துதிக்கையும், ஒற்றைக்கொம்பும், தொந்திவயிறும், வெண்சாமரைகளாலலங்கரிக்கப்பெற்ற காதுகளும், பாசாங்குசமும் பொருந்தி கர்ணமதம், கபோலமதம், கோசமதமாகிய மும்மதங்களும் ஒழுக விளங்கும் சுந்தரவிநாயகரென்னும் கணபதியையும், தேவசேனாதிபதியும், அசுரர்குலகாலனும், வேலாயுதனும், கடப்பமலர்த்தோளனும், வல்லிதெய்வானைமணாளனும், பரமசிவன்புத்திரனுமான முருகக்கடவுளையும், அகிலவுலகுக்கும் குருவாகிய குமரக்கடவுளின் அனுக்கிரகத்தால் பரிசுத்தமான ஞானத்தை அடைந்தவரும், எழுகடலையும் ஆசமனஞ்செய்தவருமாகிய குறுமுனியென்னும் அகஸ்தியரையும், சந்திரகலையும் கங்கையும் விளங்குஜடாமகுடத்தையுடையவரும், திரிபுண்டராகாரமான விபூதியால் அலங்கரிக்கப்பெற்ற நெற்றியில் நேர்கண்ணையுடை



யவரும், சங்கத்தைப்போன்ற அழகிய கந்தியுளதாயிருக்குகிற சர்ப்பகுண்டலங்களையுடையவரும் வணங்கிநிற்கும் பக்தர்களுக்கு வரமளிப்பதற்கொன்றும், அபயப்பிரதானஞ்செய்வதற்கொன்றும், மானைத்தாங்கியதொன்றும், மழுவைத்தாங்கியதொன்றுமாகிய நான்குகைகளையுடையவரும், புலியின்றோலாற் சுற்றப்பட்ட இடையையுடையவரும், யானையின்றோலை மேலாடையாகத்தரித்தவரும், மலர்ந்ததாமரைப்புஷ்பம்போன்ற திருவடிகளான இரண்டுபாதங்களையுடையவரும், இடதுபக்கத்தில் வைக்கப்பட்ட மலைமகளால் அலங்கரிக்கப்பெற்றவரும், இருபக்கங்களிலும் விளையாடிக்கொண்டிருக்கின்ற விநாயகக்கடவுள், முருகக்கடவுள் ஆகிய இருகுழந்தைகளையுடையவரும், பாதிவலதுருவமாயும், பரஞ்சோதிவடிவாயும், பரதத்துவமாயும் விளங்குகின்ற வஜ்ரத்துணேஸ்வரரையும், நித்யகல்யாணியும் ஜடாமுடியில் சந்திரனைத்தரித்தவளும் சங்குசக்ர அபய வரத அஸ்தத்தையுடையவளும் ஜகன்மாதாவுமாகிய சுந்தராம்பிகையம்மையையும், ஹிருதய கமலத்தில் தியானஞ்செய்து, மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்று கரணங்களாலும் பிரார்த்தித்து பரிபூரணசந்தோஷத்துடன் ஸௌநகமகாமுனிவர் திருமழுவாடி ஸ்தலத்தின்மகிமையைச் சொல்லத்தொடங்கினார்.

---

முதல் அத்தியாயம்,

நைமிசாரண்ணியச் சருக்கம்,

முற்றிற்று.

# இரண்டாம் அத்தியாயம்.

## தலமான்மியமுரைத்த சருக்கம்.

கேளுங்கள் முனிவர்களே! திருமழுவாடித்தலத்தின் மகிமையை யார், எவருக்குரைத்தனர்? என்றும் விபரத்தோடு அத்தலமகிமையை உங்களுக்குரைக்கிறேன்.

இமயமலையின் ஓர் கொடிமுடியாகியும், பரமசிவனுக்கும் பார்வதிதேவிக்கும் நித்யவாஸஸ்தானமாகியுமுள்ள கைலாயகிரியில் உபதேசபீடத்தில் எழுந்தருளியிருப்பவரும், சகலபுவனத்துக்கும் ஆதாரமாகிய சக்தியென்னும் ஆயுதத்தால் அநேகமசுரர்களை சம்ஹரித்தவரும், சர்வப்பிராணிகளுக்கும் ஞானோபதேசம் செய்வதற்காகவே பரசிவமூர்த்தியிடம் அவதரித்தவரும், பார்வதிதேவியின் குமாரருமான முருகக்கடவுளிடஞ்சென்று அகத்தியமாமுனிவர் சாஷ்டாங்கமாகதெண்டனிட்டு மிகுந்தவணக்கத்துடன் கேட்கலாயினர்.

ஓ பகவானே! பார்வதீபுத்திரரே! தாரகன்முதலிய அசுரர்களைக்கொன்று உலகத்தைக் காப்பாற்றிய உம்பர்சேனாதிபதியே ஆறுமுகத்தோனே! மயில்வாகனனே! வல்லிதெய்வானைபக்கா! கடப்பமலர்மாலைதோளா! கோழிக்கொடியோனே! தங்களுபதேசத்தால் ஞானத்தையடைந்தேன். சகலவித்தைகளையும் தங்களாலேயேகற்றுணர்ந்தேன். சிவக்ஷேத்திரங்கள் பலவற்றின்மகிமையும் தங்களாற்றெரிந்துகொண்டேன். அச்சிவஸ்தலங்களுள் திருமழுவாடியென்னும் ஸ்தலத்தில் வஜ்ரத்தாணேசுவரனென்னும் சிவபிரான் தன்தேவியோடு எக்காலத்திலும் சாந்நித்யம் செய்கிறாரென்று முன்னமேதாங்கள் கூறியிருப்பதால், அதனைவிஸ்



தாரமாக எனக்குரைக்கவேண்டுமென்று அகத்தியமுனிவர் முருகக்கடவுளிடம் மிகுந்தவணக்கத்துடன் கேட்க முருகக்கடவுள் காருண்யம் நிறைந்த தனதுகடாக்ஷத்தால் அம்முனிவரைநோக்கி பின்வருமாறுசொல்வாராயினர். முன்னொருகாலத்தில் நான்குவேதம், ஆறுசாஸ்திரம், அறுபத்திநான்கு கலைஞானம், அகிலதர்மங்கள் முதலியவைகளைக் கற்றுணர்ந்தவர்களாகிய, மார்கண்டேயர், வரதந்து, வேதத்யுதி, வேதநிதி, சதாநந்தர், சாசுவதர், ஹரீதர், ரோஹிதர், பனசர், பசுரோமகர், வீதிஹோத்திரர், திராதங்கர், கண்வர், கணுதர்முதலிய முனிவர்களெல்லோரும் ஒன்றாய்க்கூடி ஸ்மிருதிகளின் உண்மையை அறிந்தவர்களாதலால் பூப்பிரதக்ஷணஞ்செய்ய வெண்ணங்கொண்டு, கேதாரமென்னும் புண்யக்ஷேத்திரத்திலிருந்து புறப்பட்டுப் பலபுண்யஸ்தலங்களையுங் கடந்து விருத்தாசலமென்னும் க்ஷேத்திரம்வந்து சேர்ந்தார்கள். அவ்விடத்தில் ஒரு பிரமகல்பபர்வளையில் ஜீவித்திருப்பவரும், யோகமார்க்கத்திற்றேர்ந்தவருமாகிய உரோமசரென்னும் மகாரிஷியைக்கண்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து மிகுந்தவணக்கத்துடன் கேட்பாராயினர்.

ஓ! யோகசீலரே!! உலகத்தவர் யாவராலும் பூஜிக்கத்தகுந்த புண்யமூர்த்தியே! சம்சார சமுத்திரத்திலாழ்ந்து மிகுந்த பீடையையடைந்திருக்கும் நாங்கள் பாவத்துக்கிருப்பிடமாகிய அந்தசம்சாரத்தை எவ்விதம் ஒழிப்போம்? காமக்குரோதாதிகள் விருத்தியடைவதற்கே சாதனமாகிய புத்திரகளத்திராதிகளை நிராகரிப்பதெப்படி என்று மிகுந்தவிசாரத்துடன் கேட்கும் முனிவர்களுக்கு உரோமசர் பதிலுரைக்காமலே யோகநிஷ்டையிலிருந்தபடியால் அப்போது அகஸ்மாத்தாய் அசரீரிவாக்கொன்று ஆகாயத்தினின்று உண்டாகியது. "கேளுங்கள் முனிசிரேஷ்டர்களே! சம்சாரத்தினின்றும் மோக்ஷம்பெறுவதற்கு உபாயத்தை உங்களுக்குரைக்கிறேன். நித்ய நைமித்ய கர்மங்களால் மோக்ஷம் கிடைக்குமென்று சிலர் கூறுவர். தீர்த்தயாத்திரை செய்

வதால் மோக்ஷங் கிடைக்குமென்று சிலர் கூறுவர். தவத்தினால் மோக்ஷங் கிடைக்குமென்று சிலர் கூறுவர். பூஜையினால் மோக்ஷங்கிடைக்குமென்று சிலருரைப்பார்கள். யஞ்ஞத்தால் மோக்ஷங்கிடைக்குமென்று சிலர் கூறுவர். ஆனால் இவைகளைச்செய்வதினால் குறைவுண்டாகுமாதலாலும், குறைவறச்செய்வது அசாத்தியமாகும். ஒருக்கால் ஒருகுறையு முண்டாகாமல் இவைகளை அநுஷ்டித்தாலும், அவைகள் பலனைமாத்திரங் கொடுக்குமேயல்லாது சம்சாரத்தினின்றும் மோக்ஷமடைவதற்குக் காரணமாகாதாகையால், சம்சாரத்தை ஒழித்து மோக்ஷம் பெறுவதற்குக் கர்மமுதலியவைகள் பிரயோசனப்படமாட்டாது. இவ்வுலகின்கண் சம்சாரத்தை நிவர்த்திசெய்து மோக்ஷமடைவதற்குத் தகுந்த உபாயம் ஒன்றேயுளது. அதியாதெனில், முன்னொருகாலத்தில் வேதவியாசரென்னும் மகாமுனிவர் மூன்றுகாலங்களையும் நன்றுணர்ந்தவராயிருந்தும், தனக்குசம்பவித்த (பாகுஸ்தம்பனம்) கையைநீட்ட முடக்கக் கூடாதிருத்தலான வாதநோயை நீக்கிக்கொள்வதின்பொருட்டுப் பலவுபாயங்களைச்செய்தும் பயன்படாமல்கடைசியாய்த் தாலவனமென்று பெயர்பூண்ட திருமழுவாடித் தலத்தையடைந்து ஆங்கு சுந்தரநாயகியென்னுந்தேவியோடு விளங்கும் வச்சிரத்தம்பேசரைவணங்கிப், பூசித்துப், பலவிதமாகத்துதித்து பாகுஸ்தம்பனத்தை நிவர்த்திசெய்துகொண்டனர். ஆதலால் பதினெண் புராணங்களைச்செய்த வியாசருக்கே அருள்செய்த புண்யஸ்தலமாகையால், திருமழுவாடித்தலத்திலுள்ள வச்சிரத்தூணருடைய அருள்பெறுதவர்கள் சம்சார பாசத்தையொழித்துமோக்ஷத்தையடையார்கள். தவிரவும் கங்கை, யமுனை, கோதாவரி, சிந்து முதலிய புண்யநதிகளும் தங்கள் தங்கள்பாவத்தைத்தீர்த்துககொள்வதற்காக எந்த காவேரிநதியில் ஸ்நானஞ்செய்யின்றனவோ அந்தக்காவிரிநதியே அந்தஸ்தலத்தில் வடக்குத்திசையைநோக்கி பிரவாகித்து ஓடுகின்றது. ஆகையால் அந்த திருமழுவாடித்தலத்தின் பெருமையயும், அத்தலத்தில் விளங்கும்



வச்சிரத்தம்பேசுவரர்மகிமையும், வேதங்களாலும் வர்ணிக்கத்தக்கவைகளல்ல. விஸ்வேஸ்வரருடைய சான்னித்தியத்தால் காசிக்ஷேத்திரம் எப்படிப் பெருமைபொருந்தியுள்ளதோ அப்படியே வச்சிரத்தம்பேசர் சான்னித்யத்தால் திருமழுவாடிதலமும் பெருமைபெற்றுள்ளது. ஆகையால் திருமழுவாடிஎன்னும் ஸ்தலமும் காசிக்கு விசேஷமானதென்பது திண்ணம். யுகாந்தகாலத்தில் உண்டாகும் பிரளயத்திலும் சிவபிரான் காசிக்ஷேத்திரம், புண்டரீகபுரமென்னும் சிதம்பரம், திருமழுவாடி இம்மூன்றுஸ்தலங்களையும் தனதுகையின் மூன்று விரல்களிற் றாங்கிரக்ஷிக்கின்றனர். பிரமதேவன் ஒர் தராசியின் ஓர்புறத்தில் காசிக்ஷேத்திரத்தையும், மற்றோர்புறத்தில் திருமழுவாடிதலத்தையும் வைத்து நிறுத்துப்பார்த்ததில் காசிக்ஷேத்திரம் குறைவானதால் உயர்ந்தும், திருமழுவாடி உயர்ந்ததாகையால் தாழ்ந்தும் இருந்தபடியால் இத்தலத்தின் பெருமையை அச்சிவபிரான் ஒருவரேயறிவாரென்றனர். உலகத்திலுள்ள ஸ்வயம்பு இலிங்கங்களெல்லாவற்றினும் வச்சிரலிங்கமே சிறந்தது. புண்யதீர்த்தங்களெல்லாவற்றினும் *காவிரிநதியே விசேஷமானது. சிவஸ்தலங்களெல்லாவற்றினும் திருமழுவாடியே உயர்ந்தது. அத்தலத்தை ஒருமுறை மனதில் நினைத்தால் பாபங்கள் தீரும். அதன் மகிமையைக் கேட்டமாத்திரத்தில் புண்யவானாவான். இப்பூமியிலுள்ள விசாலமான பூமிபாகத்துள் இப்புண்ய பூமியே விசேஷமானது. அப்புண்யபூமிக்குள் எதாவது ஓர்தேவதைக்கு வாசஸ்தானமாகியது உத்தமமானது. அங்ஙனம் தேவஸ்தலங்கள் பலவற்றுள்ளும் திருமழுவாடியே மிக்கச்சிறந்தது. காசிக்ஷேத்திரத்தின் பக்கத்திலோடுகிற கங்கை உத்தரகங்கை யென்றும், திருமழுவாடி பக்கத்திலோடுகிற காவிரியே தக்ஷிணகங்கை யென்றும், காசிக்ஷேத்திரம் உத்தரகாசியாதலால் திருமழுவாடியை தக்ஷிணகாசி

*காவிரி—காவேரி யெனமருவியது.

யென்றும், அக்காசியில் விளங்கும் விசுவநாதரே இவ் வச்சிரத்தம்பேசுவரரென்றும், ஆங்குவிளங்கும் விசாலாக்ஷியம்மையே சுந்தராம்பிகையென்றும், அக்காசியிலுள்ள டுண்டிவிநாயகரே இத்தலத்தில் விளங்குஞ்சுந்தரவிநாயகரென்றும், வேதங்களிற் கூறப்பட்டுள்ளது. காசியில் வாசஞ் செய்பவர்களுக்கு மரணகாலத்தில் விசுவேசுரர் எப்படி தாரகமந்திரத்தை உபதேசஞ் செய்கின்றாரோ. அப்படியே திருமழுவாடியில் வசிப்பவர்களுக்கும் வச்சிரத்தூணர் அந்தியகாலத்தில் தாரகமந்திரமாகிய பிரணவமந்திரத்தை உபதேசிக்கின்றார். உலகின்கண்ணுள்ள சகலசிவஸ்தலங்களுக்குள்ளும் திருமழுவாடி ஒன்றே காசிக்ஷேத்திரத்தினும் உயர்வானது. ஏனெனில் சிதம்பரமென்னும் சிவஸ்தலத்தில் வசித்தால் தர்மத்தை மாத்திரம் அடையலாம். அங்ஙனமே காளஹஸ்திக்ஷேத்திரத்தில் வாசஞ்செய்தால் சம்பத்தைமாத்திரம் அடையலாம். அவ்வாறே கும்பகோணமென்னும் ஸ்தலத்தில்வசித்தால் காமத்தைமாத்திரம் அடையலாம். சகலதலங்களுக்கும் மேலானதாகிய காசிக்ஷேத்திரத்தில் வசித்தால் மோக்ஷமாத்திரம் அடையலாம். இப்படி ஒவ்வொருஸ்தலத்தில் வசிப்பதால் ஒவ்வொருபுருஷார்த்தமே கிடைக்கும். ஆனால் திருமழுவாடியென்னும் திவ்யஸ்தலத்தில் வசித்தாலோ தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், என்னும் நான்குபுருஷார்த்தங்களும் ஒரேகாலத்தில் கிடைக்குமென்பதில் தடையில்லை. பின்னும் அத்திருமழுவாடியென்னும் தலத்தில் சஞ்சரிப்பதினாலேயே வச்சிரத்தம்பேசுவரரென்னும் பரசுமூர்த்தியைப் பிரதக்ஷணஞ்செய்வதால் எந்தபலனோ அந்தபலன் கிடைக்கும். அந்தஸ்தலத்தில் அகஸ்மாத்தாய் படுத்திருந்தால் அப்பரசிவனை நமஸ்காரஞ் செய்தபலன் கிடைக்கும் அவ்வூரில் பேசும்பேச்சுகள்யாவும் அப்பரசிவமூர்த்தியின் ஸ்தோத்திரமேயாகும். அவ்வூரில் மௌனமாயிருத்தலே அச்சிவனது தியானமாகும். அவ்வூரிலிருந்து தன் பிரயோசனங்களையுத்தேசித்துச் செய்யுங்காரியங்களானாலும் அவைகளனைத்தும் வச்சி



ரத்தம்பேசருடைய கைங்கரியமேயாகும். அத்தலத்தில்தன்பசிதீர உண்ணும்போஜனமெல்லாம் வச்சிரத்தம்பேசருக்கு நைவேத்யமாகும். அத்தலத்திலொருகவளம் அன்னத்தை அதிதிஒருவனுக்குக்கொடுத்தால் ஒருலக்ஷம் பிராமணர்களுக்கு அன்னமிட்ட பலனையடைவார்கள். ஆதலால் ஞானத்தினாலாவது, அக்ஞானத்தினாலாவது திருமழுவாடியென்னும் புண்யத்தலத்தையடைந்தமாத்திரத்தினாலேயே வச்சிரத்தம்பேசுரருடைய பூசைகளனைத்தும் செய்ததாய்பாவித்து அப்பரசிவன் இஷ்டங்களனைத்துந் தந்தருளுகின்றார். தவிரவும் எவ்வூரிலிருந்தாவது திருமழுவாடியென்னும புண்ய தலத்தைநோக்கி ஒருதட்வை நமஸ்கரித்தால் அவனுடையபாபங்களெல்லாவற்றையுந்தீர்க்க கடவுள்முயர்ச்சிக்கிறாரென்றால் அந்தத்தலத்தையேயடைந்து பகவானைநேரேகண்டு பிரார்த்திப்பவர்களுக்கு எந்தமனோரதந்தான் கைகூடாது?. அந்தத் தலத்தினெல்லையில் தற்செயலாய்க் காலடி வைத்தவனுக்குங்கூட சூரியனுதயத்தால் இருள் நாசமடைவதுபோல் சகலபாபங்களும் நாசமடையும்.

விசுவாசத்தினாலாவது, பயத்தினாலாவது, மோஹத்தினாலாவது, வழிதப்பியாவது, பாதத்தின் நுனியினாலாவது அத்தலத்தைப்பரிசிப்பானாகில் அவன் மோக்ஷத்தை யடைவானென்பது திண்ணம். அந்த தலத்தை தற்செயலாய் எவன் கண்டாலும் அவன் பதினாலு லோகங்களையும் கண்டவனாகிறான். அந்த தலத்தைத்தரிசித்தவனுக்கும், பரிசித்தவனுக்கும் அந்த தலமானது பாபமாகிய இருளுக்குச்சூரியனாம், இதர சிவஸ்தலங்களில் ஒருவருடகாலத்தில் செய்யக்கூடிய தவத்தின் பயனை திருமழுவாடி தலத்தில் ஒரு தினத்தில் செய்யக்கூடியதவத்தினாலேயேகிடைக்கும். வேறுதலங்களில் புல், சருகு, வாயு இவைகளை ஆகாரமாய்க்கொண்டு செய்யுந்தவமும், இத்தலத்தில் அறுசுவை பதார்த்தங்களோடு உண்டு, செய்யுந்தவத்துக்கு இணையாகாது. மற்றத்தலங்களில் ஒருமாசம் உபவாசமிருந்துசெய்யுந்தவத்திலும்இத்தலத்தில்

இரவில் மாத்திரம் புசித்துச்செய்யுந் தவம் மேலானது, கங்கை,
யமுனை, சிந்து, நர்மதை, கோதாவரி முதலிய புண்ய நதிகளி
ளில் தினந்தோறும் திரிகாலங்களிலும் ஸ்நானஞ்செய்வதாலுண்
டாகும் பலத்தை மகாபாதகங்களைச்செய்தவனாயினும் திருமழு
வாடியிலுள்ள சிவகங்கையென்னும் புண்ணிய தீர்த்தத்தில் ஒரு
தடவை செய்யும் ஸ்நானத்தினாலடைகிறான். தவிரவும் பிருதுவ
த்தால் அடையக்கூடிய கைலாசபதவியினால் பிரமத கணங்க
ளோடு வசிக்கும் பெருமையையடைகிறான். இதர ஸ்தலங்க
ளில் மாலை, தோள்வளை, குண்டலம் முதலிய ஆபரணங்களையும்
பயிர் நிறைந்துள்ள பூமிகளையும், பூரணமாய்க்கறக்கும் கன்றோடு
ங்கூடிய வெண்மை நிற பசுக்களையும், தாசி, தாசர்களையும், கன்
னிகை, *துலாபுருஷதானம் முதலிய உயர்ந்த தானங்களையும்
கொடுப்பதனால் எந்த பலனையடைகிறானோ அந்தப்பலனைத்திரும
ழுவாடி யென்னுந்தலத்தில் ஒருவனுக்கு ஒருகாலந்தாகசாந்திக்
குக் கொடுக்கும் ஜலத்தினால் அடைகிறான். வேறு தலங்களில்
வாஜபேயம், அக்கினிஷ்டோமம், அப்தோர்யாமம், அஸ்வமேதம்,
அதிராத்ரம், பௌண்டரீகம், விஸ்வஜித், சர்வஜித், கருடசயனம்
முதலிய வேதங்களிற்கூறப்பட்டுள்ள முக்கிய யஞ்ஞங்களை
அவையவைகளின் அங்கங்களோடுஞ்சரியான பூரி தக்ஷிணையோ
டும் அனுஷ்டிப்பதனால் எந்தப்பலனையடைவானோ அந்தப்பலனை
மழுவாடித்தலத்தில் ஒரு தினத்தில் செய்யும் நித்யகர்மத்தினாலை
டைகிறான். அத்திருமழுவாடித்தலத்தில் எவனாவது ஓர் எழியவ
னுக்கு கொஞ்சம் பொருளைத்தானஞ்செய்தாலும், கிரஹணகால
த்தில் வேதாத்யனஞ்செய்த பிராமணனுக்குத் துலாபுருஷதா
னஞ்செய்த பலனையடைகிறான். அந்த திருமழுவையில் தன்
கையால் ஒட்டையளவுள்ள பூமியை ஒருவனுக்குத் தானஞ்செய்
தால் நான்கு சமுத்திரங்களாற் சூழப்பெற்ற யிப்பூமி முழுவ

* துலாபுருஷதானம் = ஒரு தராசியின் ஓர் தட்டில் இருந்துகொண்டு அதற்குச் சரியான நிறையுள்ள தங்கத்தைத்தானஞ்செய்வது.



துந்தானஞ்செய்த பலத்தை அடைகிறான். அத்தலத்தில் ஒரு
பசுவை உத்தம பிராமணனுக்குத்தானஞ்செய்வதால் எக்காலத்
திலும் காமதேனுவானது அவன் வீட்டிலிருந்து எல்லா மனோர
தத்தையும் பூர்த்தி செய்யக்காத்திருக்கும். அத்தலத்தில் ஒரு இர
த்தினத்தை ஒருவருக்குத்தானஞ்செய்தால் ஆதிசேஷன் முதலிய
அஷ்டநாகங்களின் தலையிலுள்ள இரத்தினங்களால் அலங்கரிக்க
ப்படுகிறான். அத்தலத்தில் வேதவித்தான பிராமணனுக்கு கொஞ்
சம் தங்கத்தை ஒருவன் தானஞ்செய்தால் அவன் ஸ்வர்ணபர்வத
த்திற்குத்தானே யஜமானனாவதும் தவிர மஹாமேருவை வில்லாய்
க்கொண்ட பரமசிவனே தனக்குத்தோழனாகிறான். அத்தலத்தில்
வசிப்பவன் ஒன்றுமறியா மூடனானாலும் நான்கு வேதங்களையுங்கற்
றுணர்ந்தவனென்று மதிக்கப்படுவான். ஆகையால் அத்தலத்
தில் வசிப்பவனுக்கு தானங்கொடுப்பதே மேலாகும். பின்னும்
அத்தலத்தில் வெயிலால் கஷ்டப்படும் ஜனங்களுக்கு மரங்களால்
நிழலுண்டாக்குகிறவர்களுக்கு நடக்கும்போதெல்லாம் முத்துக்க
ளால் அலங்கரிக்கப்பட்ட வெண்பட்டுக்குடை நிழலுண்டாகிறது.
இன்னும் வீட்டின் தெருப்புறங்களில் தண்ணீர்ப்பந்தல் வைத்து
ஜனங்களுக்கு தாகசாந்தி செய்வதனாலேயே உயர்ந்த பதவியை
யடைவாரென்றால் வீட்டுக்குள் வழிப்போக்கர்களை வரவழைத்து
அன்னமிட்டு உபசரிப்பதனாலேயே எவ்வித புண்ணியங்கிடைக்கு
மென்பதை ஆயிரம் பண முடிகளையுடைய ஆதிசேடனாலும் வர்
ணிக்கத்தகுந்ததல்ல. அந்தத்தலத்தில் காகத்திற்கு ஒரு நாள்
பலிபோடுவதால் இலக்ஷம் பிரமக்ஞானமடைந்த பிராமணர்களு
க்கு அன்னமிட்ட பலனையடைகிறான். அத்தலத்தில் வரும்
அதிதிகளுக்கு சிறந்ததையோ அல்லது அஃதில்லாமையாவது ஒரு
காலம் அன்னமளித்தால் அநேக இலக்ஷக்கணக்கான பிராமணர்
களுக்கு அல்லது சிவயோகிகளுக்கு போஜனம் செய்வித்து
அநேக அஸ்வமேதயாகஞ் செய்த பலனையடைகிறான். அத்தல
த்தில் மறைந்திருக்கும் உண்மையான சந்நியாசியை அழைத்துத்

தன் வீட்டில் பிக்ஷை செய்துவைத்தால் காசிக்ஷேத்திரத்திலும் இராமேசுவரத்திலும் பனிரண்டு வருடங்களிடைவிடாது அன்னதானஞ் செய்வித்த பலனையடைகிறான். ஆதலால் அத்தலத்தில் வசிக்கும் யாவரும் வஜ்ரஸ்தம்பேஸ்வரரென்றே எண்ணப்படுகின்றனர்.

பக்தர்களின் இஷ்டவரத்தைப்பூர்த்தி செய்யும் வஜ்ரஸ்தம்பேஸ்வரர் சந்நிதியில் அறுசுவைகளோடு கூடிய உண்டியை வேதமோதிய பிராமணனுக்குக்கொடுத்தால் எப்பொழுதும் பசிநோயில்லாத சித்தனாய் விடுகிறான். அத்தலத்தில் சிவனடியார்களுக்கு அன்னமிடுவதால் தான் சிவனேயாகிறான். அத்தலத்தில் புசித்தவர்களாகிய பிராமணர்களைப்பார்த்து சாப்பிட வாருங்களென்று சந்தோஷமாய் உபசார வார்த்தைகள் கூறினாலும் அன்னமளித்த பலனையடைகிறான். மண்குடங்களிலாவது மண்கலசத்திலாவது குளிர்ந்த தண்ணீரைக்கொண்டுவந்து கோடை காலத்தில் அதிக வெயிலால் நாவறண்டு வரும் ஜனங்களுக்கு கொடுக்கிறவர்களுக்கு தண்ணீரில்லாத பாலைவனத்தில் நூறுகோடி தண்ணீர்ப்பந்தல் வைத்த பலத்தை யடைவதும் தவிர தேவர்கள் மிகுந்த பிரயாசையுடன் சம்பாதித்த அமுதத்தை இவன் எப்பொழுதுங் கைக்கொண்டவனாகிறான். ஆனபடியால் இவ்வுலகத்திலும் வானுலகத்திலும் சௌக்கியமடைய விரும்புகிறவர்கள் திருமழுவாடி என்னுந்தலத்தில் எக்காலத்திலும் வசித்தேதீரவேண்டும். அவ்வாறு வசிப்பதால் தீர்க்கமான ஆயுளையும், அழியாத பொருளையும், அனுகூலமான மனைவியையும், புத்திமான்களான புத்திரர்களையும், ஆரோக்கியத்தையும், அழியாத கீர்த்தியையும், பூரண சௌக்கியத்தையும், நல்ல ஞானத்தையும் அடைவார்கள்.

இத்திருமழுவாடி என்னும் தலத்தின் மகிமையை ஒருவன் படித்தாலும், கேட்டாலும், பிறருக்குபதேசித்தாலும், இம்மையில் சகல சௌபாக்கியங்களையும் பெற்று புத்திர, பௌத்திரர்கள் பூர்ணாயுசுக்கள், சம்பத்துவிருத்தியாய், குருஉபதேசத்தால் நல்ல



ஞானத்தையடைந்து, பக்தியிற்சிறந்து மறுமையில் மோக்ஷத்தையடைவார்கள்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

# மூன்றாம் அத்தியாயம்.

## பலனுரைத்த சருக்கம்.

முன்னம் திருமழுவாடித்தலமானது பனங்காடாயிருந்தகாலத்தில் காவிரிநதியில் மூழ்கி கரையேறிய ஓர் யானைதன் வாலிலுள்ள நீரை உதறியபொழுது அந்நீர் வஜ்ரத்தூணின்மேல் பட்டதால் அப்பகவான் யானைக்குத்தன் சாயுஜ்யபதவியைக்கொடுத்தாரென்றால் அச்சிவபிரானுக்கு எள்ளெண்ணை, பசுவின்நெய், பசுவின்பால் முதலிய திரவியங்களால் பூரணமாய் ருத்ரம், சமகம், புருஷசூக்தம், ஸ்ரீசூக்தம், ருத்ரசூக்தம், விஷ்ணுசூக்தம், பிரமசூக்தம், துர்க்காசூக்தம், பஞ்சசாந்தி, கோஷசாந்தி முதலிய வேதமந்திரஜபத்துடன் அபிஷேகஞ்செய்வதனால் கங்கையையும்

சந்திரக்கலையையும், கொன்றைப்பூவையுஞ் சடையிற்றரிக்கும் பெருமையைப்பெறுவான். அத்தலத்தில் விளங்கும் வஜ்ரத்தம்பேசுரரென்னும் சிவபிரானைப்பூசிப்பதற்காக புஷ்பங்களும், வில்வங்களும், கொடுக்கக்கூடிய நந்தவனம் அமைக்கிறவர்கள் ஒரு புஷ்பத்திற்கு நூறுவருஷங்கணக்காக எவ்வளவு புஷ்பங்களைத்தருகின்றனவோ அவ்வளவு புஷ்பங்களுக்குள்ள வருஷம் வரைக்குஞ் சிவலோகத்தில் சகல சௌக்கியங்களுடன் வசிக்கிறார்கள். அத்தலத்தில் விளங்கும் சிவபிரானை தங்கத்தினாலான மலர்களால் அர்ச்சித்தால் சகல சம்பத்துக்களையுமடைந்து இவ்வுலகில் சகல போகங்களையும் அனுபவித்து மறுமையில் தேவேந்திரனாகிறான். வச்சிரத்தூணேசரின் சந்நிதியில் ஒருவன் நெய் விளக்கேற்றினால் அவன் கோடி சூரியனைப்போன்ற காந்தியையுடைய தேகத்தைப்பெறுகிறான். வச்சிரத்தூணருக்கு அன்னத்தை ஒருகாலம் ஒருவன் நிவேதனஞ்செய்தால் கோடி யுகங்கள் சிவலோகத்தில் வாழ்கிறான்.

முன்னொருகாலத்தில் வச்சிரத்தூணருக்கு நிவேதனமானவுடன் பலிபீடத்திற்கொண்டுவந்து போடப்பட்ட பலியை சாப்பிட எண்ணி பறந்துவந்த ஒரு கழுகை சமீபத்திலிருந்த ஒருவேடன் அம்பினாலெய்ய அப்பாணத்தின் அடியினால்மாண்டு பூமியில் விழுந்த கழுகை ஒரு மயில் தன் மூக்கினால் கொத்திக் கொண்டுவேடனுக்குப்பயந்து அந்த ஆலயத்தைச்சுற்றி யோடியதால் அவ்விரு பறவைகளும் கைலாய பதவியைப்பெற்றது. ஆகையால் அன்றுமுதல் அந்த கழுகின் வம்சபரம்பரையாய் அந்ததிருமழுவையில் வச்சிரத்தூணரின் ஆலயத்திலுள்ள கோபுரத்தில் என்றென்றும் வாழ்கவென்று ஈசன் வரமருளியபடியேயின்றும் அக்கழுகின் வம்சமானது வாழ்ந்துவருகின்றது. ஆனபடியால் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணசுத்தியுடன் அவ்வாலயத்தைப்பிரதக்ஷணஞ்செய்பவனுக்கு உண்டான பலத்தைச்சொல்ல



என்றால் தரமல்ல. இதர சிவஸ்தலங்களில் சிவபிரான் சந்நிதியிலிருந்து செய்யும் ஜபத்தைப்பார்க்கிலும் அத்திருமழுவையிலுள்ள வச்சிரலிங்கத்தின் சந்நிதியிலிருந்து செய்யப்படும் ஜபமானது ஒவ்வொன்றும் கோடி மடங்காக எண்ணப்படுகிறது.

அப்பனங்காட்டுத்தலத்துக்கதிபனான சிவபிரான் ஆலயத்தில் பிரகாரம் முதலியவைகளைச்சீர்திருத்த ஒரு கல்லையாவது அதன் கிரயத்தையாவது கொடுப்பவன் கைலாய லோகத்தில் திருநந்திதேவரோடு வாழும் பெருமையையடைகிறான். பின்னும் அவ்வாலயத்தின் திருப்பணிக்காக அரைக்கப்படுகிற சுண்ணாம்பின் இயந்திரத்துக்குபயோகமாகிய யெருமை கடாக்களுங்கூட கைலாயபதவியையடைகின்றது. மேலும் அவ்வாலயத்தின் திருப்பணிக்கு பொருளுதவி செய்ய சக்தியற்று வாக்கினால் சகாயஞ்செய்பவர்கள் ப்ரகஸ்பதிக்குச்சமத்துவமான வாக்கையுடையவர்களாகிறார்கள். இந்த க்ஷேத்திரத்தில் தானஞ்செய்ய யார் தூண்டுகிறார்களோ, யார் தானஞ் செய்பவர்களைப்பார்த்து சந்தோஷமடைகிறார்களோ அவர்களும் கைலாயபதவியை யடைகிறார்கள்.

கேளுங்கள் முனிவர்களே! இவ்வண்ணம் முருகக்கடவுளால் அகத்திய மகாமுனிவருக்கு உரைக்கப்பட்ட திருமழுவாடி தலத்தின் மகிமையையும், அதில் விளங்கும் வச்சிரத்தூணரின் மகிமையையும், அந்த க்ஷேத்திரத்தின் திருப்பணி முதலியவைகள் செய்யப்படுகிறவர்களுக்குண்டாகும் பலத்தையும் விஸ்தாரமாய் எடுத்துரைத்தேன். இவைகளைப்படிப்பவர்களுங், கேட்பவர்களும், பிறருக்கு எடுத்துரைப்பவர்களும், வச்சிரலிங்கத்தின் அருளால் இம்மையில் சகல ஐசுவரியங்களையும் பெற்று மறுமையில் சிவசாயுஜ்ஜியபலத்தையடைவார்கள்.

ஏழாம் அத்தியாயம் முற்றும்.

# நான்காம் அத்தியாயம்.

## வச்சிரலிங்க மூர்ப்பவர் சருக்கம்.

—):o:(—

கேளுங்கள் முனிபுங்கவர்களே! புருஷாமிருகரென்னும் முனிவர் செய்த தவத்தினால் பிரமலோகத்திலிருந்த வச்சிரலிங்கமானது பூமியில் காவிரிக்கரையிலுள்ள பனங்காட்டுத்தலத்தில் வந்த விபரத்தை முருகக்கடவுளானவர் அகத்தியருக்கு அருளியபடி உங்களுக்குரைக்கிறேன். சாவதானமாய்க்கேளுங்களென்று சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார்.

சிவபூஜையிற் சிறந்தவரும், மகா தபோதனருமாகிய புருஷாமிருகரென்னும் முனிவரானவர் தான் பிரதிதினமும் பூசிக்கவேண்டி மனத்திலுள்ள இருளைப்போக்கி நற்கதியைத்தரக்கூடிய உயர்ந்த சிவலிங்கமொன்றை அடையவெண்ணி உலகமெங்குந்தேடுவதற்காரம்பித்தனர். இமயமலை, மந்தரபர்வதம், விந்தியகிரி முதலிய பல மலைகளிலும், நான்கு சமுத்திரங்களாற் சூழப்பெற்ற இப்பூமியிலுள்ள சகல சிவஸ்தலங்களிலும் அநேக காடுகளிலும் வெகு காலந்தேடியும் உத்தமமான இலிங்கமொன்றையுங் காணாததால், அதலம், விதலம், சுதலம், ரசாதலம், தலாதலம், மஹாதலம், பாதாளம், ஆகிய கீழேழுலோகங்களையும் அடைந்து தேடியும் காணாமையால் மனம் வருந்தி, தேகம் மெலிந்து சுவர்க்கமுதலிய மேலேழுலோகங்களிலும் போய்ப்பார்த்துவரத் தீர்மானித்து ஜகத்குருவும் சந்திரகலாதாருமாகிய கைலாசபதியை மனதில் தியானித்து பிரமதேவனிருப்பிடமாகிய சத்யலோகத்தை





படைத்தனர். ஆங்கு சகல புவனங்களுக்குஞ்சிருட்டி கர்த்தரானவரும், நான்கு முகங்களோடுங்கூடியவருமான பிரமதேவன் பூசை செய்துகொண்டிருக்கக்கண்டு சமீபத்திற் போய் எட்டுறுப்பும் நிலத்திற்படிய நமஸ்கரித்து மிகுந்த விநயத்துடன் அவர் செய்யும் பூசையை உற்றுப்பார்க்கும்பொழுது அப்பூசையில் லக்ஷணம் பொருந்திய வைரத்தினாலான இலிங்கத்தைக்கண்டு ஆனந்தபரவசராகி நிற்கையில் பிரமதேவர் புருஷாமிருகமுனிபுங்கவரை நோக்கி "வாரும்புருஷாமிருகயோகீந்திரரே! என்றுமரியாதையுடன் கூறி உட்காரும்படி வேண்டினர்." இங்ஙனம் பிரமதேவராலுபசரிக்கப்பெற்ற புருஷாமிருகமுனிவரர் பிரமதேவரைநோக்கி பின்வருமாறு பிரார்த்திக்கின்றனர். ஓ சதுர்முகா! சகலபூதங்களையும் படைப்பவரே, நான்குவேதங்களுக்கும் உற்பத்திக்காரணரே, நாமகளின் காதுகளுக்கு ஆநந்தமுடைய வசனிக்குஞ் சமார்த்தியமுடையவரே, ஸ்ரீமன் நாராயணருடைய உந்திகமலத்திலுதித்தவரே, நிர்குணமூர்த்தியே, சகுணமூர்த்தியாயிருந்து சகல உலகங்களையும் படைப்பவரே, உலகங்களுக்கெல்லாம் ஆதரமானவராயிருந்தும் நிராதாரராயிருப்பவரே என்று பிரமதேவரைப் பலவாராய்த்துதித்து நின்றனர். பின்னர் பிதாமகனும் புருஷாமிருக முனிவரைநோக்கி விபூதிருத்திராக்ஷங்களையே ஆபரணமாகக்கொண்டு சிவபிரானையேயிடைவிடாது பூசித்துத் தவஞ்செய்யும் முனிவராகிய நீர் இங்கு வந்தகாரணம் என்ன? உமக்கு ஆகவேண்டியவைகள் என்ன? உரைப்பீர் என்றுகேட்டபிரமதேவரை நோக்கி முனிவருஞ் சொல்லத்தொடங்கினர்.

ஓ பிரமதேவா! விதிப்படியே இதுவரையில் அநேகசிவலிங்கங்களைப் பூசித்திருக்கிறேன், அவ்வண்ணம் பூசித்திருந்தும் பக்தி சித்திக்கவில்லையாகையால் உத்தமோத்தமமாகிய ஓர் இலிங்கத்தைஆத்மார்த்தமாகவைத்து பூசிக்க ஆவல்கொண்டு

பூமியிலும் அதன் கீழ்பாலுள்ள உலகங்களிலுந் தேடியுங்காணா
மல் தங்களிடம்வந்தேன் இங்கு, தங்கள் பூசையிலிருக்கிற இவ்
வச்சிரலிங்கமே நான்கோரியவண்ணம் உத்தமமாயிருப்பதாய்த்
த்தீமானித்தேன். ஆகையால் தயவுசெய்து அதனையேயெமக்கு
ஆத்மார்த்த லிங்கமாகத் தந்தருளுவீரென்றுபிரார்த்தித்தனர். இவ்
வசனத்தைக்கேட்ட பிரமதேவரானவர் சிவபூசையிற்சிறந்தவ
ரும், உக்கிரதபோதனருமான புருஷாமிருகமகாமுனிவருரைத்த
மொழிகளைக்கேட்டு பயத்தையும், விசாரத்தையுமடைந்து மனத்
துள் யோசிக்கின்றனர். "இவ்வச்சிரலிங்கமோ [illegible]த்மார்த்
தமானது. இதனையாசிக்கிற முனிபுங்கவரோ சாமானியரல்ல
ஆத்மார்த்த இலிங்கத்தைக் கொடுக்கக்கூடாதென்பது பெரி
யோரின்கொள்கை. அதனைக்கொடாவிடிலோ முனிவர்கோபம்
டைவர் என்றுபலவாறாய் சிந்தித்து ஒன்றுந்தோன்றாதவராகி
பின் மனத்தைத் தேற்றிக்கொண்டு புருஷாமிருகமுனிவரரை
நோக்கிப் பின்வருமாறு கூறுகின்றனர்." ஓ சைவாகமங்களின்
விசேஷார்த்தங்களை முற்றுமறிந்த தபோதனரே! சுருதி,
ஸ்மிருதி, புராணங்கள் ஆனவற்றின் இரகசியங்களும் தாங்க
ளறியாதவர்களல்ல, ஆத்மார்த்தமாகிய இலிங்கத்தை பிறர்பாற்
கொடுத்தலால் சாஸ்திரத்தை மீறி நடத்தலல்லவா? இவ்வச்
சிர இலிங்கம் எனக்கு ஆத்மார்த்தமாகையால் நீர் இதையா
சிப்பது ஞாயமல்ல; மேலும் இத்தேஜோமயமான இலிங்கத்
தைப்பெறவேண்டி நான் வெகுகாலம் சிவனைக்குறித்துத்தவஞ்
செய்ததின்பேரில் அவர்பிரத்தியக்ஷமாகி இந்த இலிங்கத்தை
யெனக்குக்கொடுக்கும்பொழுது ஆகாசத்தினின்று ஓர் அசரீரி
வாக்குண்டாய் "ஹே பிரமதேவா! உன்தவத்தினுநீ சந்தோஷித்
தோம் உனக்கு இந்த இலிங்கத்தைக்கொடுப்பதுந்தவிர வேறு
எந்த வரங்கள் வேண்டுமாயினுங் கொடுக்க சித்தமாயிருக்கி
றோம் என்று உண்டாகிய அசரீரியை நோக்கி ஹே கருணைக்
கடலாகிய அசரீரியே! பரமசிவனாலளிக்கப்பெற்ற இவ்வச்சிர



இலிங்கத்தை யென் வீட்டில்வைத்து தினந்தோறும் பூசிப்பேன்
அதற்குச்செய்யும் பூசைகளனைத்தும் பரசிவமூர்த்திக்குச் செய்
ததாகவே ஒப்புக்கொள்ளல் வேண்டுமென்று வேண்ட "அப்படி
யே ஆகுகவென்று உத்தரமளித்தது." இவ்வாறு பெருந்தவஞ்
செய்துபெற்ற இவ்வச்சிரலிங்கமானது பரசிவ மூர்த்தியேயல்
லாது வேறல்ல என்று களிகூர்ந்து அதனை விமானத்திலேற்
றியெடுத்துக்கொண்டு என் வீட்டுக்குவந்து அதைத் தினந்
தோறும் பூசித்துக்கொண்டிருக்கிறேன். ஆகையால் நவமணிகளா
லாகிய வேறு அநேக இலிங்கங்கள் இதற்குமுன் என்னால் பூசிக்
கப்பட்டுவந்து இருக்கின்றதாதலால் அவற்றுள் தமக்கு இஷ்
டமான இலிங்கத்தில் எதைவேண்டுகின்றீரோ அதனைக்கொடுக்
கச் சித்தமாயிருக்கிறேன். என்று பிரமதேவர் மறுத்தவுடன்
உத்தரவு பெற்றுக்கொண்டு யோசித்துக்கொண்டே பூலோகத்
துக்குத் திரும்புகிறார். இப்பிராமணன் எவ்விதந் தவஞ்செய்து
இவ்வச்சிர இலிங்கத்தையடைந்தாரோ அவ்வாறே நாமுந் தவஞ்
செய்தால் இந்த இலிங்கமானது நமக்கு ஏன் கிட்டமாட்டா
து? நம்மிடத்திற் கருணைகூர்ந்து பரசிவமூர்த்தி ஏன் பிரத்
தியக்ஷமாகமாட்டார்? பிரமலோகத்திலுள்ள இவ்வச்சிர இலிங்க
மே என்முன்பாக அவதரிக்கவேண்டுமென்று இப்பொழுதே
தவஞ் செய்கிறேனென்று பரமேஸ்வரரை மனத்திலெண்ணி
பூமியையடைந்து கங்கை, யமுனை, நர்மதை, துங்கபத்திரை,
கிருஷ்ணவேணி, கோதாவரி முதலிய நதிக்கரைகளையும் பார்த்தும்
ஒன்றும்பரிசுத்தமாய்க்காணப்படாததால் காவிரிநதியின் வடகரை
யில் ஆகாயமளாவி இருண்ட பனைமரங்களால் நிறையப்பெற்
றதும் அம்மரப்பொந்துகளில் அமர்ந்திருக்கும் கிள்ளை
களும், நாகணவாய்ப்புட்களும், குயில்களும், மரங்கொத்திகளு
ம், பரிகசப்பறவைகளும், சிட்டுகளும் மற்றுமுள்ள அழகியபற
வைகளும் பிரணவத்தோடுங்கூடிய பஞ்சாக்ஷரத்தையும், சிவநா
மத்தையும் கூவுவதைக்கண்ட புருஷாமிருகமுனிவர் ஆனந்தபர

வசராய் தேகமெங்கும் புளகாங்கிதமாகி நைமிசாரண்யத்திலும், ஆநந்தவனத்திலுங்கூட இவ்வகைத்தான பரவைசப்தங்கள் ஏர்ப்படவில்லையே! இவ்வனத்தில் உத்தமமான சிவநாமத்தை பக்ஷிகளே கூவிக்கொண்டிருப்பதால் இதனாலேயே சிவபிரான் நித்யவாசஞ் செய்கிறாரென்பதற்குத்தடையில்லை. இதுவே சர்வோத்கிருஷ்டம் பொருந்திய வனம், இதுவே தவத்துக்குச் சிலாக்கியமுள்ளது எனநினைத்து காவேரியில் மூழ்கி நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு தர்பாசனம் விரித்து அதன்மேல் பத்மாசனத்துடன் உட்கார்ந்தவராய் மூலக்கனலெழுப்பி, ரேசகபூரக, கும்பகஞ்செய்து, குண்டலிசக்தியை விழிக்கச்செய்து, சந்திராமிர்தத்தைப்பானம்பண்ணி, தேவ தேவனான பரசிவத்தின் உருவத்தை மனதிற்கொண்டு பஞ்சாக்ஷரமந்திரத்தை தியானஞ்செய்து திருநடனத்தைக்கண்டு தரிசித்து மூப்பாழுங்கடந்து அதற்கப்பாலுஞ்சென்று அசைவற நின்று அநேக கற்பகாலம் அகோர தவஞ்செய்ய இவரது தவத்திற்குமெச்சிக் கருணைக்கடலான பார்வதிபதி இம்முனிவரரின் மனோரதத்தை நிறைவேற்றுவதின் பொருட்டும், இவ்வகிலபுவனங்களுக்கும்வரங்களுமுண்டாவதின் பொருட்டும், பனைமரங்களால் நிறையப்பெற்ற இருளிடகாட்டிற்றவஞ்செய்யும் முனிபுங்கவரின் முன்பாய் இவர் முன்னம் பிரமலோகத்திற்கண்டவாறே வச்சிர இலிங்கமாகவே எதிரேதோன்றி நின்றனர். இவ்வாறு அவிர்பவித்த வச்சிர இலிங்கத்தின் பிரகாசத்தால் அந்தவனம் முழுவதும் தேஜோமயமாய் விளங்க முனிவருந்தவங்கலைந்துத்தன் கண்களைத் திறந்துபார்த்து தன் தவப்பயனாய் கிடைக்கப்பெற்ற வச்சிரமயமான இலிங்கத்தைத் தன் எதிரேகண்டு நாம் பிரமலோகத்திற்கண்ட வச்சிரலிங்கம் இதுவேயென்று நிச்சயித்து ஆநந்தசாகரத்தில்மூழ்கி புளகாங்கிதமாய் ஆடிபாடி ஆனந்தக்கண்ணீர்விட்டு பன்முறை வலம்வந்து எட்டுறுப்பும் நிலப்படியநமஸ்கரித்து வாய்குழறி பினவருமாறு துதிக்கலாயினர்.



ஹே கருணா மூர்த்தியே! பக்தர்களிடத்தில் வாத்ஸல்யமுடையவரே! அகில உலகத்திற்குந் தந்தையே! பிறர் வேண்டாது கருணைமாரி பொழிபவரே! அண்டினோரை யாதரிக்கும் பழம்பொருளே! தாசன்மீது கருணைகூர்ந்து பிரமலோகத்தினின்று இவ்விடம் அவிர்ப்பவித்ததினாலேயே தங்களைப்போன்ற கருணாநிதியாருமிலரெனக் கண்டுகொண்டேன். யான் செய்த தவம் அற்பமேயாயினும் அன்பர்களிடத்து அன்பு கொண்டவராதலால் அடியேனிடத்துங் கருணைகூர்ந்து அவிர்பவித்தீர். உமது காருண்யத்தை நான் யெவ்வாறுரைப்பேன். வேதங்களாலுந் துதிக்கதர்க்கரிதாகிய நாமரூபங்களை யுடையவரே என்று பலவாறு துதித்து நின்ற புருஷாமிருகரை நோக்கி வஜ்ரத் தூணிலிருந்து நல்வரம் அவிர்ப்பவித்து பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்.

"ஹே முனியே! உமது உத்கிருஷ்டமாகிய தவத்திற்கு மெச்சி உமது முன் வச்சிரலிங்கமாகப்பிரா்ப்தமானோம், இவ்வச்சிரலிங்கத்தைப்பூஜித்து நீரும் இப்பூமியிலுள்ள ஜனங்களும் இம்மையில் இஷ்ட காம்ய பலத்தைபடைந்து மறுமையில் கைலயங்கிரியில் நமது பாதநீழலிலிருக்க அழியாவரத்தை பெறக்கடவீரென்று திருவாய்மலர்ந்தருளி இலிங்கத்தில் மறைந்தனர்." அதன்பின்பு முனிவர் விதிபூர்வமாக காவிரி நதியின் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அதன் கரையோரத்திலுள்ள பலவித புஷ்பங்களையும் கொய்துவந்து சகல திரவியங்களோடும் அபிஷேகஞ்செய்து கஸ்தூரி குங்குமங்கள் கலந்த சந்தனத்தினால் பூசி வஸ்திராலங்கிருதஞ்செய்து பலவித மலர்களால் சகஸ்திரநாமங்களாலர்ச்சித்து தூபதீபங்கொடுத்து அறுசுவையோடுங் கூடிய உண்டியை நிவேதனஞ்செய்து மற்றுமுள்ள உபசாரங்களாலுமுபசரித்து மிகுந்த பக்தியுடன் எழுமுறை வலம்வந்து சாஷ்டாங்கமாய்த் தெண்டனிட்டு அடிபணிந்து கண்டவாறு தோத்திரஞ் செய்தனர். ஹே ஜெகந்நாதனே! ருத்ரனே, மகேஸ்வரனே, காலகாலனே, நாகாபரணனே, சந்திரசூர்யாக்கினி நேத்திரனே, பிரமதகணங்களுக்கிறைவனே, பிரம

தேவரால்பூசிக்கப்பெற்றவனே, பனங்காட்டை வாசஸ்தானமாய்க் கொண்டவனே, சகலகாரணங்களுக்கும் காரணமானவனே, பிரமதேவனாயிருந்து உலகத்தை படைப்பவனே, விஷ்ணுவாயிருந்து உலகத்தைப் பரிபாலிப்பவனே, ருத்திரமூர்த்தியாயிருந்து அவ்வுலகினையழிப்பவனே, ஈசுவரனே, சதாசிவனே, மலைமகள்நாதனே, சர்வசாக்ஷியே, சனகாதி நால்வருக்கும் மௌனத்தால் உபதேசித்தவனே, கங்காதரனே, சந்திரமௌலியே, நமஸ்கரிக்கப்பட்டவர்களின் அபீஷ்டத்தை நிறைவேற்றுபவனே, மனம், வாக்கு, காயங்களுக்கு மெட்டாதவனே, இந்திரன் முதலிய திக்பாலர்களால் நமஸ்கரிக்கப்பட்ட சரணகமலங்களையுடையவனே, விருஷபவாகனனே, திகம்பரனே, பிரளய சம்ஹாரகாலத்தில் விஷ்ணுவைபாணமாய்க்கொண்டவனே, பக்தருக்கு வசியமாகும் பரிபூரணகிருபாநிதியே, பக்தர்களின் அபிப்பிராயத்தை பொறுத்து அவர்களைக்காக்கும் பொறுமையையுடையவனே, பக்தர்களின் மனதையே கோவிலாய்க்கொண்டவனே, என்று பலவாராய்ஸ்தோத்திரஞ்செய்து பரம சந்தோஷத்தையடைந்து தினகதோறும் முக்காலங்களிலும் அவ்வச்சிரலிங்கத்தையே பூசித்துக்கொண்டு புருஷாமிருகமகாமுனிவர் ஆயிரம் சதுர்யுகம் வரையில் அத்தலத்திலேயே வசித்து வந்தனர்.

இந்த வச்சிரலிங்கத்தின் உற்பத்தியின் கதையை யார் படிக்கின்றார்களோ, யார் கேட்கின்றார்களோ, யார் பிறருக்குச்சொல்லுகின்றார்களோ, அவர்கள் இம்மையில் சகல பாபங்களினின்றும் விடுபட்டவராய் இஷ்ட கார்யார்த்தங்களை யடைந்து மறுமையில் சாயுச்சிய பதவியையடைவார்கள்.

நான்காம் அத்தியாயம் முற்றும்.

---

# ஐந்தாம் அத்தியாயம்.

## பெயர் வாய்ந்தச் சருக்கம்.

—):0:(—

கேளுங்கள் முனிசிரேஷ்டர்களே! அத்திருமழுவையில் விளங்கும் வச்சிர இலிங்கத்திற்கு வச்சிரத்தாணேசுரரென்று பெயர் வந்த காரணத்தையும் புருஷாமிருகமுனிவர் செய்த விசேஷ பூஜைகளையும் உங்களுக்கு விஸ்தாரமாய்க் கூறுகிறேனென்று சூதமகாமுனிவர் சொல்லத்தொடங்கினர்.

இவ்விதமாய் வச்சிரலிங்கம் பூமியில் வந்தபின்னர் பிரமதேவர் அதிகாலையிலெழுந்து ஸ்நானஞ்செய்து நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு பரமேஸ்வரனை வச்சிரலிங்கத்தைப் பூஜிப்பதற்காய் பூஜாக்கிரகத்திற்சென்று இலிங்கத்தைப்பார்க்கும்போது இலிங்கம் காணாததால் மிக்க கிலேசமடைந்து சமாதியிலிருந்து தனது ஞானதிருஷ்டியினால் பூமண்டலத்தில் புருஷாமிருகமுனிவரால் அவ்வச்சிரலிங்கம் பூஜிக்கப்படுகிறதென்றறிந்து மிகுந்த கோபாவேசத்துடன் தன் ஹம்சவாகனத்தில் ஆரோஹணித்து பூமியையடைந்து புருஷாமிருகர் வசிக்குமிடமணுகி நோக்குங்கால் அம்முனிவர் தாமரை முதலிய மலர்களாலும் வில்வங்களாலும் மற்றுமுள்ள புஷ்பங்களாலும், வச்சிரலிங்கத்தைப் பூஜிக்கக்கண்டு பிரமதேவன் மோகத்தினால் அறிவு மழுங்கினவராய் ஸ்திரமாகிய அவ்வச்சிரலிங்கத்தை தனது எல்லாக்கரங்களாலும் இறுகப்பிடித்து பலவந்தமாய் அசைத்துப்பிடுங்க எவ்வளவோ முயற்சித்தும் பயன்படாமையால் "இது வச்சிரலிங்கமன்று, வச்சிரத் தம்பமேயாகும்" யென்று கோபத்துடன் மொழிந்தனர். அன்றைய முதல் அந்த வச்சிர இலிங்கத்திற்கு வச்சிரத்தாணேரெனப்பெயர் வாய்ந்தது. அதன் பின்னர் பிரமதேவர் அங்கிரு

ந்து வெளிப்பட்டு புருஷாமிருக முனிவரை நோக்கி நான் தினந்தோறும் பூஜித்து வந்த ஆத்மார்த்தலிங்கமாகிய இவ்வச்சிரலிங்கத்தை திருடிக்கொண்டுவந்து பூஜைசெய்துக்கொண்டு மகாசாதுவேடம் பூண்டுகொண்டிருக்கிறீரே இது உமக்குத்தகுதியாமா? என்று அதிக கோபத்துடனுரைக்க புருஷாமிருக முனிவர் பிரமதேவரை நோக்கிச்சொல்லுகிறார். ஹே பிரமதேவா! இவ்வச்சிரலிங்கமானது உமக்குச்சொந்தமல்ல, அதை யான் திருடிக்கொண்டு வரவுமில்லை, வீணான கோபத்துக்கு இடங்கொடுக்கவேண்டாம், நீர் இதன் சூட்சமத்தை மனதினுள் விசாரித்துப்பாருமென்ன, பின்னும் அம்முனிவரின்மேற் கோபங்கொண்ட பிரமதேவன் ஐந்து திவ்வியாஸ்திரங்களால் அம்முனிவரின் மார்பிற்றாக்க முனிசிரேட்டருக்குக்கோபம் பிறந்து தன் தபோமகிமையால் ஓர் வில்லும், பாணங்களும், அம்பறாப்பொதியுஞ் சிருட்டித்துக்கொண்டு தனது வில்லை நாணேற்றி குணத்வனி செய்து கூர்மையுள்ள திவ்வியாஸ்திரங்களை வில்லிற் பூட்டி மானதபூஜையால் தூபதீப நைவேத்யங்களைச்செய்து அபிமந்திரித்து பிரமதேவரின்மேற் பிரயோகித்தனர். இவ்வாறாய்ப்பிரயோகித்த முனிவர்மேல் பிரமதேவரும் தனக்கு வரத்தால் கிடைத்த திவ்யமான அக்கினியாஸ்திரத்தை தன் வில்லில் தொடுத்து அபிமந்திரித்து முனிசிரேஷ்டரின் மேல்விட அந்த அக்கினியாஸ்திரமானது வில்லிலிருந்து விடுபட்டவுடன் நெருப்பு சுவாலைகளை குபீல் குபீலென்று கக்கிக்கொண்டு ஆலகாலவிஷம்போலவும், வடவை அக்கினியைப்போலவும் அஷ்டதிக்குகளும் திவ கடல்களெல்லாம் நீர் வற்ற வருகின்ற பாணத்தைக்கண்ட மகாமுனிவர் முகத்திற் புஞ்சிரிப்புக்கொண்டு தன்கையிலுள்ள வில்லில் வருணாஸ்திரத்தைப் பூட்டித் தன்காதளவும் நாணையிழுத்து அபிமந்திரித்து ...டு சிம்மநாதஞ்செய்தனர். இப்படிவிட்ட வருணாஸ்திரமானது வில்லிலிருந்து விடுபட்டு சப்தமேகங்களும் ஒன்றுசேர்ந்ததுபோல இடி, மின்னல்களை முழக்கிக்கொண்டு பிரமனுடை



ய அக்கினியாஸ்திரத்தின் சுவாலையை அவித்து சபளீகரஞ்செய்துவிட்டது. உடனே பிரமதேவர் அதிக உக்கிரகோபத்தோடு இரண்டு பர்வதாஸ்திரத்தை விடுத்தனர். முனிவர் தாமும் ஓரே வச்சிராஸ்திரத்தைவிட்டு பர்வதாஸ்திரத்தை தவிடுபொடியாக்கிவிட்டு. தன் தவத்தினால் சிருட்டித்த அகோராஸ்திரத்தை தன்வில்லிற்பூட்டி பிரமர்கையிற்பிடித்திருந்த வில்லை இருதுண்டாகும்படிச்செய்து அதன்பிறகு பத்து பத்து திவ்யாஸ்திரங்களை ஒன்றின்பின்னொன்றாய்த் தொடுத்து பிரமதேவர் நிற்குமிடந்தெரியாமல் சரக்கூடால் மறைத்தனர். இவ்விதம் முனிவர் கட்டிய சரக்கூட்டை பிரமதேவர் வாயு அஸ்திரந் தொடுத்து அந்த பாணங்களையெல்லாம் சுழல்காற்றில் பட்டதுரும்புபோல் வாரிக்கொண்டுபோய்விடும்படிச்செய்துவிட்டனர். இவ்வாறு ஒருவருக்கொருவர் தோல்வியில்லாமல் சமபோர்புரிவதைப்பார்க்க அந்தரத்தில்தேவர்களும், யக்ஷ, கின்னரர், கிம்புருடர், சித்தவித்தியாதரர் முதலியகந்தருவர்களும் வந்திருந்தனர். அஷ்டநாகங்கள், அஷ்டகஜங்கள், அஷ்டகுலாசலங்களும், தலைநடுங்க, பூமியும் அதிர்ந்தது. இவ்வாறு இருவரும்போர்புரிந்து கடைசியாக பிரமதேவர் ஏதோ நாம் எத்தனைபாணங்களை விட்டியுத்தஞ்செய்தபோதிலும் முனிவரும் அதற்குதகுந்த பாணங்களை விட்டு நமது பாணங்களையெல்லாம் சின்னபின்னமாக்கிவிடுகிறார். இதோ ஒருகை பார்ப்போம் இவர்திறத்தையும் இவர்வில் வின்வலிவையும் இவர்பாணத்தின் பெருமையுமென்று மகா கோபாவேசனாய் கோடைகாலத்தில் விண்ணில் முழங்கும் இடியோசையை யொத்துகர்ச்சித்து தன் அருமையான பிரமாஸ்திரத்தை வில்லிற்பூட்டி அபிமந்திரித்து முனிவர்மேல் விட்டுவிட்டனர். இவ்விதம் பிரமனால் விடப்பட்ட பிரமாஸ்திரமானது வில்லிலிருந்து புறப்பட்டு ஒன்று, பத்து, நூறு ஆயிரம், பதினாயிரம், லக்ஷம், பத்துலக்ஷம், கோடி, பத்துகோடி, சங்கமகாசங்கமென்று கணக்குக்கடங்காத பாணங்களாகி வந்துகொண்

டிருப்பதைப்பார்த்தமுனிவர் இனிநாம் சும்மாயிருப்பது சரியல்லவென்று நினைத்து பாசுபாணியை நினைத்து துதிசெய்து தன் வில்லில் பாசுபதாஸ்திரத்தைத் தொடுத்து அபிமந்திரித்துவிட்டுவிட்டனர். இவ்வாறுவிட்ட பாசுபதாஸ்திரமானது வில்லிலிருந்து புறப்பட்டு கணக்கிடக்கூடாத திவ்யாஸ்திரங்களாகி விஷத்திக்களைக் கக்கிக்கொண்டு பிரமாஸ்திரத்தின்மேல் குபீலெனத் தாவி ஒன்றுக்கொன்று போர்செய்யத்துடங்கவே சுவர்க்க, மத்ய, பாதாளமாகிய மூன்றுலோகத்தவர்களும் நடுங்கி தேவதேவனான பரமேஸ்வரரைத் துதிக்கலாயினர். இவ்வாறு மூன்றுலோகத்தவரும் துதிப்பதையுணர்ந்த பார்வதிநாதன் இம்மூன்றுலோகத்திலுள்ளவர்களையும், புருஷாமிருக பகாமுனிவரையும் இரக்ஷிக்கும்பொருட்டும், பிரமதேவனுடைய கோபத்தைத்தணிக்கும்பொருட்டும், வச்சிரலிங்கத்திலிருந்து பரமேஸ்வரரானவர் பார்வதிசமேதராய், விருஷபவாஹனாரூடராய், ஸ்கந்தர், கணபதி சமேதராய் நந்திமுதலிய பிரமதகணங்களுடனே ஜடையில் கங்கை சந்திரன் இவ்விரண்டையுந்தரித்துக்கொண்டும் மான், மழு சூலம் இவைகளைக்கையிலேந்தி தேவர்களும் கந்தருவர்கள் முதலிய யெல்லோரும்துதிக்க பிரமதேவர், புரிஷாமிருககாமுனி இவ்விருவர்கள் எதிரேபிரத்தியக்ஷமாகி ஹே பிரமதேவா! ஈதென்னவிந்தை உமதுசித்தத்திலும் களங்கமேற்பட்டுவிட்டதே நிஷ்காரணமாய் நிரபராதியான முனிச்சிரேஷ்டரோடு நீர் யுத்தஞ்செய்யக்காரணமென்ன? வேண்டாம் கோபத்தைத் தணித்து சண்டையை நிறுத்தி அவரவர்கள் பாணத்தை அவரவர்கள் ஆகர்ஷித்துக்கொள்ளுங்கள். உம்மிடமிருந்த என்னை இம்முனிவர் திருடிக்கொண்டுவரவில்லை. அவருடைய தவத்திற்கும், பக்திக்கும் மெச்சி யானே இவ்விடம் அவிர்ப்பவித்தேனேயல்லாது அவர்மீது கொஞ்சமுங்குற்றமில்லை. மிகவுஞ்சிலாக்கியமாகிய இப்புண்ய பூமியில்வசிப்பதற்கு இச்சித்த என்னை இம்முனிவருடையதவம் இவ்விடங்கொண்டுவந்து சேர்த்ததே



யல்லாது வேறல்ல. ஹே கமலாசனா! இப்புண்ய ஸ்தலத்தைத் தவிர இப்பூமண்டலத்தில் எமக்குப் பிரியமான இடம்வேறில்லாதகையால் இனிஎன்னாளும் இவ்விடத்திற்றான் வசிப்போம் நாம் தினந்தோறும் ஆத்மார்த்தமாய்ப் பூசித்துவந்த இவ்வச்சிரலிங்கம் நமதுலோகத்தினின்றும் மூழ்கிபூமியில்வந்துவிட்டதே என்று யேக்கமுறாமல் வருடத்துக்கோர்முறை இங்குவந்தென்னை பூசிக்கக்கடவீர். கோபாவேசத்தால் நீர் அசைக்கப்பார்த்தும் அசையாதிருந்ததை மறந்துவிட்டீரோ? ஆயினும் நீர்கோபத்துடன் உரைத்தவண்ணமே எனக்கு வச்சிரத்துணேஸ்வரரென்றபெயர் உலகெங்கும் பிரசித்தியாகட்டும்'' என்று கூறிய பரசிவனதுமொழிகளைக்கேட்டு பிரமதேவன் பயந்து ஆனந்தத்திலாழ்ந்து மெய்சிலிர்த்து முனிவரும் சபித்துவிடுவாரோவென்றேங்கி வாய்குழற வச்சிரத்துணேசரைப் பலவாறாகத் துதித்து பூமியை வலஞ்சென்று தனது உலகம் அடைந்தனர். இவ்வாறு பிரமதேவன் சென்றபின்னர் புருஷாமிருகமுனிவர் பிரசன்னராகிய பகவானைக்கண்டு வணங்கி வலம்வந்து இருகைகளையும் சிரத்தின்மீது கூப்பிக்கொண்டு பின்வருமாறு துதிக்கின்றனர்.

ஹே தேவதேவா! உமதுகருணையாலன்றி இப்பிதாமகனுடன் போர்செய்யவல்லவனா? பக்தர்களுடைய ஆபத்தை நிவர்த்திசெய்யும் பிரபுவே என நன்குணர்ந்தேன், முன்னம் கைலயங்கிரியை வேரோடு பிடுங்கிய இராவணனையுங் கோபிக்காது நல்வரம்அளித்ததுபோல் உமதுமூர்த்தியைப்பிடுங்க எத்தனித்த பிரமதேவன்மேல் கோபங்கொள்ளாமல் அவர்கோபத்தாலுரைத்தமொழியையே உமது திருப்திகரமான பெயராகவகித்தீரன்றோ? மோக்ஷந்தந்து முனிவர்களைக் காக்கும் வள்ளலே! காளகூடத்தைபுசித்து சர்வதேவதைகளையும் காப்பாற்றிய கருணாமூர்த்தியே, பிரமன் விஷ்ணுமுதலியவர்கட்கும் கிட்டாத உயர்மணியே, அடியேன்மீது கருணைகூர்ந்து இப்பனங்காட்டை வாசஸ்தலமாய்க்கொண்டீரன்றோ? உண்மையல்லாது யாரையுங்

சரணமடைவேனென்று அநேகவிதமாய்த் துதித்து அசைவற்று நின்றனர். உடனே பார்வதிரமணரும் முனிபுங்கவரை நோக்கி நீர்செய்த தவத்தினால் பூரணசந்தோஷமடைந்தோம். உனக்கு தீர்க்கமான ஆயுளும் யெமது சரணகமலங்களில் ஸ்திரமானபக்தியும் கீர்த்தியும் தருக்கபலமும் யென்றென்றைக்கும் உண்டாகுகவென்றும் இன்னும் உமக்குவேண்டிய வரத்தைகேட்டுக் கொள்வீரென்றும் திருவாய்மலர்ந்தருளிய முக்கண்ணனை நோக்கி புருஷாமிருகமுனிவர் கூறுகின்றனர்.

ஹே லோகநாயகா! அன்பர்களிடத்து வஞ்சமின்றிகேட்ட வரமளிக்கும் கிருபாமூர்த்தியே உமக்குசந்தோஷமுண்டாகும்படி தவஞ்செய்ய நான் அருகனோ! பக்தர்களிடத்து [illegible] விசுவாசத்தைகாண்பிப்பது உமதுகுணமேயாதலால் இவ்விடம் அவதரித்தீர். உமதுகிருபை எனக்கு எப்பொழுதுகிடைத்ததோ அப்பொழுதே எனக்கு சர்வாபீஷ்டங்களும் நிறைவேறினவாயினும் என்பிரீதியின்பொருட்டும் சகலஜனங்களும் க்ஷேமமடைவதின்பொருட்டும் இப்பூமியில்தாங்கள் அவதரித்ததுபோல் தேவகங்கையையும் தங்கள் முன்னிலையில்வரவழைத்துக்கொள்ளவும் வேண்டுகிறேன் என்று முனிவர்கூற பரசிவனானவர் சுவர்க்க கங்கையை பூமியிலுள்ள பனங்காட்டில் தன்முன் அவிர்பவிக்க ஆக்ஞாபித்தவுடனே கங்கையானவள் விண்ணுலகமிருந்து மண்ணுலகத்திற்கு சிவனது ஜடாமகுடத்திலிருக்கும் கங்கையின் ஓர்பாகத்தோடு கலந்து தடாகரூபமாய் வஜ்ரத்துணேசருக்கு முன்பாக நின்றது. அத்தீர்த்தத்தை சிவகங்கையென்றும் சிவதீர்த்தமென்றும் இன்றும்கூறுவார்கள். இவ்வாறு கங்கையை வரவழைத்துத் தன்முன் தடாகமாய் நிறுத்தி முனிவரைப்பார்த்து ஹே புருஷாமிருகமுனிவரே! உமது பிரீதியின்பொருட்டாய் தேவகங்கையைவரவழைத்தோம் அதனை சிவகங்கையென்று உலகத்தோர்கொண்டாடட்டும். இந்ததீர்த்தத்தில்மூழ்கி பிரதிதினமும் என்னைபூசிப்பவர்களுக்கும் மகாபாதகங்களும், ஜனனமரணநோய்



களும் நீங்கி இஷ்டகாம்யார்த்தங்களையடைந்து மோக்ஷமடைவார்களென்பதற்கு ஐயமில்லை எனத் திருவாய் மலர்ந்தருளி அவ்வஜ்ரலிங்கத்திடத்தன் மறைந்தனர்.


அதன்பிறகு தனது தபோபலத்தால் தேவதச்சனான விஸ்வகர்மாவை வரவழைத்து அவ்வச்சிரத்துணேசர் சந்தோஷமடைய சுவர்ணகலசத்தோடுங்கூடிய கர்ப்பக்கிரகத்தையும், சர்வலக்ஷணம் பொருந்திய அர்த்த மண்டபத்தையும், தனதுசரீரம் போன்ற பிரதிமைகளாலங்கரிக்கப்பெற்ற மகாமண்டபத்தையும், பிரகாரங்கள், கோபுரங்கள், மற்றுமுள்ள மண்டபங்கள் முதலான திருப்பணிகளையும், குறைவறச் செய்துமுடித்து, விநாயகர், சுப்பிரமணியர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சண்டிகேஸ்வரர், அம்பிகை, முதலிய உத்சவ விக்கிரகங்களையும், சுவர்ணத்தினால் செய்யப்பட்ட ஹேமசபாரென்றும் பொன்னார்மேனியனென்றும் சொல்லப்பட்ட சுவர்ண விக்கிரகத்தையும், செய்துமுடித்து அவ்விஸ்வகர்மாவைக்கொண்டே சிவகங்கைக்கு படிக்கட்டுகளையும் தபோதனர்களுக்கும் பிராமணர்களுக்கும் நித்தியகர்மானுஷ்டானங்களைச் செய்யும் ஜபமண்டபங்களையும் குறைவின்றி கட்டிமுடித்து, நான்குவருணத்தார்களுக்கும் அவரவர்களின் ஜாதிக்கேற்ற பலதினுசுகளான வீடுகளையும், கிடைக்கக்கூடாத பசைமான்களுமடங்கிய ஆவணங்களால் நிறைந்தவீதிகளையும், விஸ்தாரமான, நான்குரதவீதிகளையும் புஷ்பங்களால்நிறைந்த நந்தவனங்களையும் நிர்மாணஞ்செய்துமுடித்தபின்னர், விசுவகர்மாவுக்கு வேண்டிய சன்மானங்களெல்லாஞ்செய்து தேவலோகத்துக்கனுப்பிவிட்டனர்.


அதன்பிறகு பிரதிதினமும் காலை அருணோதயத்துக்குமுன் எழுந்திருந்து தன்பிராணாயாமமுதலியவைகளைமுடித்து சூர்யோதயத்தில் சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து நித்யகர்மானுஷ்டானங்களையும் முடித்துக்கொண்டு பரிசுத்தமான காவிரிநதியின் தீர்த்

சத்தால் வஜ்ரலிங்கேசருக்கு அபிஷேக திரவியங்களுடன் அபிஷேகித்து திவ்யமான வாசனைகள் தங்கிய கஸ்தூரி, குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், கோரோசனை, புனுகு, ஜவ்வாது முதலியவைகள் கலந்த சந்தனத்தைப்பூசி நந்தவனத்திலுள்ள பரிமளமிகுந்த தேவலோக புஷ்பங்களால் அலங்கரித்தும் சகஸ்திரநாமங்களால் அர்ச்சித்தும் ஷட்ரசம்பொருந்திய உண்டிகளால் நிவேதித்தும் சகல உபசாரங்களுடனே பூசித்துவருவதோடு ஸ்நானஞ்செய்யும்போதும், நடக்கும் போதும், நிற்கும்போதுமவ்வச்சிரதுணேசரையே மனதில்தியானித்து வாக்கினால் அவர் நாமதேயங்களையுச்சரித்தும் அநேககோடி வருஷங்கள் இவ்விதமாய்ச்செய்து வசித்துவந்தனர். பின்னர் வச்சிரத்துணேசர் ஒருநாள்பிரத்தியக்ஷமாகி முனிவரைநோக்கி நீர் இதுவரைக்கும் இவ்வச்சிரமயமான லிங்கத்தைப்பூசித்துக்கொண்டுவந்ததுபோதுமானது இனி மஞ்சுசீலபர்வதத்திலுள்ள ஆடகேசுவரரென்னும் எனதுமூர்த்தியை பிரதிதினமும் பூசித்துக்கொண்டு வருஷத்துக்கோர்முறை இவ்விடம்வந்து என்னைப்பூசித்து போகக்கடவீரென்று திருவாய்மலர்ந்தருளியவண்ணம் முனிவரும் மஞ்சுசீல பர்வதத்தையடைந்து ஆடகேசுவரரைப்பூசித்துக்கொண்டு அவ்விடமே வசித்துவந்தனர்.

கேட்டீரோமுனிவர்களே! இவ்வத்தியாயத்திற் கூறப்பட்ட வச்சிரத்துணேசரென்னும் பெயர்வந்தகாரணத்தையும் புருஷாமிருகர்செய்த திருப்பணிகளையும் அவர்செய்தபூசையின் விசேஷத்தையும். படிப்பவர்களும் அதனைப்பிறருக்குச்சொல்பவர்களும் அதைக்கேட்பவர்களும் புத்திரபௌத்திர தனதான்யசம்பத்துக்களை இகத்திற்பெற்று மறுமையில் மோக்ஷமடைவார்களென்று நிச்சயமாய்க்கூறி சூதபுராணிகர் பின்னுஞ்சொல்வாராயினர்.

ஐந்தாம் அத்தியாயம் முற்றும்.





# ஆறும் அத்தியாயம்.

## மார்க்கண்டேயர் பூசனைச் சருக்கம்.

"ஹே முனிபுங்கவர்களே! சாவதானமாகக்கேட்கக்கடவீர்கள். இவ்வாறு வச்சிரத்தூணை சருக்குப்பிரிய வாசஸ்தலமான தாலவனம் என்னும் பனங்காட்டில் மருவாடிய விதத்தை முருகக்கடவுள் அகத்தியமகா முனிவருக்குரைத்தபடி நானும் உங்களுக்குரைக்கின்றேன். அதனை அசைவற ஒரேமனதுடையவர்களாய் பக்தி விசுவாசத்துடன் கேட்பீர்களாக. மிருகண்டுவென்னும் தபோதனர் செய்ததவப்பயனால், அவருக்கு புத்திரனாயவதரித்தவரும், சிவானுக்கிரகத்தை பூர்த்தியாய்ப்பெற்றவரும், நித்தியமான பதினாறு வயதையடைந்தவருமாகிய மார்க்கண்டேயமகா முனிவர் ஸ்நானஞ்செய்யவெண்ணி க்ஷீராப்தியையடைந்தனர். அச்சமயத்தில் சிதம்பரக்ஷேத்திரத்தில் பிரதோஷகாலத்தில் நர்த்தனஞ்செய்யும் ஆனந்த நடராஜரது திருநடனத்தைக்கண்டு தேவர்களும் முனிவர்களும் கொண்டாட சிவகாமியம்மையும் பக்கத்தினின்றுகண்டுகளிக்க, அன்னடனத்தைக்காண விரும்பி பார்க்கடலில் துயிலுகின்ற மகாவிஷ்ணுவுஞ் சென்றிருந்தனர். முனிவர் க்ஷீராப்தியினின்றும் ஸ்நானஞ்செய்து கரையேறிப்பார்க்கடலில் துயிலும் பரந்தாமனைக்கண்டு வருவோமென்று நினைந்து செல்லுகையில் கந்தருவா கின்னரர் கிம்புருடர் சித்தவித்யாதரர் முதலிய அனைவர்களும் துதிக்க சங்கம், சக்கிரம், கதை, சாரங்கமென்னும் ஆயுதங்கள் விளங்கிய நான்கு கரங்களோடும் கௌஸ்துபமென்னும் மணிகளாலங்கரிக்கப்பெற்ற மார்போடும் பக்கங்களில் விளங்கிய இலக்ஷுமி, பூமிதே

வியோடும் கருடன்மீதம[illegible]ளிந்தருந்தனது ஆதிசேஷனாகிய படுக்கையைவெண்ணி விறைந்துவந்துகொண்டிருந்த மகாவிஷ்ணுவைக்கண்டு பின்வருமாறு யோசிக்கலாயினர்.

அகில புவனங்களையும் ரக்ஷிக்கும் பரந்தாமன் ஆதிசேஷனாகிய படுக்கையைவிட்டுத் தன் திருதேவிமார்களுடன் கருடவாகனத்திலேறி யெவ்விடஞ்சென்று திரும்பி வருகின்றனரோ! க்ஷீர சமுத்திரத்தில் யோக நித்திரையினின்றகலாத வெம்பெருமான் யாதுகாரணம் பற்றிச்சென்றனரோ! என்று சந்தேகித்தவராய்த் தன் ஞான திருஷ்டியினால் நோக்கி உத்தம க்ஷேத்திரமாகிய சிதம்பரத்தில் ஆனந்த நர்த்தனஞ்செய்யும் நடராஜமூர்த்தியைக் காண்பதற்கு இவர் சென்றிருக்காரென்றுணர்ந்தனரில்லை கனகசபேசரின் திருநடனத்தைக்கொண்டாடி, பதஞ்சலி, வியாக்கிரபாதர்களுடைய புண்ணியமே புண்ணியம். அவர்கள் தவமே தவம். அவ்விருவருஞ் சந்தோஷிக்க வேண்டியன்றோ பிரதினமும் பிரதோஷகாலமாகிய சூர்யாஸ்தமனகாலையில் பார்வதீசன் ஆனந்த நடனமாடுகின்றனர். அந்தோ! கருணாநிதியாய் நின்றுமென்றும் பதினாறு வயதாயிருக்க அனுக்கிரகஞ்செய்தும் தனது தாண்டவத்தின் பெருமையை எனக்குக்காட்டாதிருந்துவிட்டனரே! அப்பதஞ்சலி வியாக்கிரபாதர் கடினமாகிய தவஞ்செய்திருக்கின்றனர்போலும் அவ்வண்ணமே நாமும் கடினமான தவத்தைச்செய்தாலன்றி அத்திரு நடனத்தை காண்பதரிதாகுமாதலால் தவஞ்செய்து மகாதேவனைச்சந்தோஷப்படுத்தி அவர் திருநடனத்தைக்கண்டே தீரவேண்டும் என்று மனதில் நிச்சயித்துக்கொண்டு சேஷதல்பத்திற் சயனித்திருக்கும் லக்ஷ்மிபதியையணுகி பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து அவர் அனுக்கிரகம் பெற்று திரும்பி பல ஸ்தலங்களையுமடைந்து தவஞ்செய்வதற்கேற்ற ஸ்தலமெதுவென்று முக்கிய ஸ்தலங்களாயுள்ள வாரணாசி, காஞ்சிபுரம், காளஹஸ்தி, மத்யார்ஜுனம், திருவானைக்காவல், திருவையாறு முதலிய உத்தம ஸ்தலங்களையுங்கண்டு ஒவ்



றும் தன் மனதுக்கு திரு[illegible]மைத்தோற்றுததால் கடைசியாய் காவிரியின் வடகரையில் தர்மார்த்த காம மோக்ஷமென்னும் நான்கு பலங்களையுங்கொடுக்கக்கூடிய புண்ய ஸ்தலமாகிய தாலவனமென்னும் க்ஷேத்திரத்தையடைந்தனர். அங்கு பனங்காட்டின் மத்தியில் சுவர்ண சிகரங்களோடு அளாவிய பதாகைகளால் கட்டப்பட்டுள்ள கோடிசூர்ய பிரகாசங்களோடுங் கூடிய விமானங்களையும், கொடிகளையும், குடைகளையுந்தாங்கி, ஆகாயத்தையளாவி நிற்கும் கோபுரங்களையும், பலமண்டபங்களாலலங்கரிக்கப்பெற்ற விசாலமான சிவாலயத்தையும், நான்கு வருணத்தாரும் வசிக்கும் வீடுகளாலும், பல்கடைகளாலும், நிறைந்துள்ள வீதிகளையும் கண்டு ஆச்சரியங்கொண்டு நாம் முன்னரிவ்விடத்தில் இந்நகரத்தைக் கண்டிலோமே இதனுள்ளோர் தேவாலயம் விளங்குகின்றதே இதன் காரணம் யாதோவென்று மனத்துள் யோசித்து இதனுட் சென்று பார்த்துவருவோமென்று வீதிகளைக் கடந்து ஆலயத்துட் சென்று பார்க்குமளவில் பக்தருக்கிறங்கி இஷ்டவரமளிக்கும் வச்சிரத்தூணேசரிருக்கக்கண்டு ஞானதிருஷ்டியால் புருஷாமிருகரால் பிருமலோகத்திலிருந்து வரவழைத்து பூஜைசெய்யப்பட்ட தேஜோமயமான வஜ்ரலிங்கமிதுவேயெனக் கண்டு புருஷாமிருகரிஷியே தவஞ்செய்து இந்த வச்சிரத்தூணேசரை வரவழைத்துள்ள ஸ்தலமாதலால் இத்தலமானது மகா புண்ய ஸ்தலமென்பதற்கையமில்லையாதலால் நாமுமிவ்விடத்தில் தவஞ்செய்வோமானால் நாம் கோரியவாறு கிருபாநிதியாகிய கங்காதரன் நமக்கு அனுக்கிரகிப்பார் என்று மனதில் தீர்மானித்தவராய்த் தினந்தோறும் சிவகங்கை தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து வச்சிரலிங்கேசருக்கு விதிபூர்வகமாய் அபிஷேக முதலியவைகளை குறைவறச்செய்து வணங்கி அச்சிவபிரானையே நெஞ்சினிலிருத்தி நிஷ்டை செய்து வருவாராயினர். இவ்விதம் தினந்தோறும் அச்சிவபிரானையே யர்ச்சித்து அவரது தியானத்தையே நிஷ்டையாகச்செய்து வருவதோடு ஒருவருஷகாலம் பகலில்

மாத்திரம் புசித்தும், மறு வருஷம் இரவில் மாத்திரம் புசித்தும், மூன்றும் வருஷம் பதினைந்து தினத்துக்கோர் முறைப் புசித்தும், நான்காம் வருஷம் மாதத்துக்கோர் முறைப்புசித்தும், ஐந்தாம் வருடம் மூன்று மாதத்துக்கோர் முறைப்புசித்தும், ஆறும் வருடம் ஆறு மாதத்திற்கோர் முறைப்புசித்தும், ஏழாம் வருடம் வருடத்துக்கோர் முறைப்புசித்தும், எட்டாவது வருடமுதல் ஒருவருடம் பழங்களையே புசித்தும், அடுத்த வருடம் கிழங்குகளைப்புசித்தும், அதனடுத்தவருடம் உலர்ந்த சருகுகளைப்புசித்தும், அதனடுத்த வருஷம் ஜலத்தைப்புசித்தும், அதனடுத்த வருடம் காற்றைப்புசித்தும், இப்படியாக உக்கிரமாக பல்லாயிர வருடம் நிஷ்டையிலிருந்தும் பரமசிவனது அருள் கிடைக்காததை நோக்கி ஊசியின் நுனியில் வலதுகால் பெருவிரலையூன்றி நான்கு புறத்தும் செந்தீ வளர்த்து ரேசக பூரக கும்பகங்களின் வழியே சுவாச நிரோதனஞ்செய்து அருந்தவம் புரியும்பொழுது அம்முனிவரது பிரம்மரந்திரத்தினின்றும் தவத்தீயானது எழும்பி மூன்று லோகமும் வியாபித்து தகிக்க தேவர்களும் மற்றுமுள்ள ரிஷிகளும் நாகலோகவாசிகளும் நடுங்கி ஈதென்ன உலகத்திற்கே அழிவுகால மேற்பட்டதோ! அல்லது இதுதான் பிரளய காலமோ! அல்லது ஆலகாலமென்னும் விஷத்தின் சுவாலையோ, முற்காலத்தில் ஈசன் மன்மதனை யெரித்த தனது மூன்றாவது கண்ணைத் திறந்து விட்டனரோ எனப்பலவாறு ஆலோசித்து ஞானதிருஷ்டியால் மார்க்கண்டேயமுனிசெய்யுந்தவத்தீயென வுணர்ந்து கைலையையடைந்து சர்வேசுரரான உமாபதியை சரணமடைந்தனர்.

இவ்வண்ணமாய்ச் சரணமடைந்த தேவாதிமுனிகளை நோக்கி பரமேசுவரர் ஓ யிந்திராதி தேவர்களே! நீங்கள் எல்லோரும் ஒன்றுகூடிவந்துவணங்குகிற தன்மையைப்பார்த்தால் உங்களுக்கு யேதோ பயமுண்டாயிருப்பதாய் நினைக்கிறேன், அதனை யுரைப்பீர்களாக என்று கூறிய மொழியைக்கேட்ட தேவதைகள் ஹே தேவதேவா, நீதயாளுவே முன்னம் காளகூட விஷத்தைப்புசி



த்து மூவுலகத்தினையுங்காப்பாற்றிய முக்கண்ணரே, மதம்பொழியுங் கபோலத்தையுடைய இக்காரனென்னுங் கஜாசுரனை வதைத்து ஜெகத்திலோரிடரை யொழித்தவரே வெல்லற்கரிய திரிபுராதிகளை வதைத்து சகலரையுங்காத்த சர்வத்தியாபரமனே, முன்னம் தாங்கள் யென்றும் பதினாறு வயதைக்கொடுத்தருளிய மார்க்கண்ட முனி தவஞ்செய்யுந்தீயால் நாங்கள் மிகுந்த தாபத்தையடைந்தோம் ஹே! சந்திரசேகரா இக்ஷணமே தாங்கள் அம்முனிகுமாரரையடைந்து அவருக்கு வரமளித்து கடுந்தவத்திலிருந்து தடுப்பீரெனச் சகலரும் வேண்ட அவ்வேண்டுகோளுக்கிரங்கி ஹே! முனிவர்களே இம்மார்க்கண்டேயன் தவஞ்செய்யுங்காரணத்தை யாமறிவோம். இப்பொழுதே யாம் சென்று அவனிஷ்டத்தை பூர்த்தி செய்ய புறப்படுவோமென்று தேவர்கட்கும் முனிவர்கட்கும் விளம்பி பிரமதகணங்களுக்குத்தலைவனான நந்திகேசனை யழைத்து ஹே! நந்திகேசுவரா பனங்காட்டுத்தலத்தில் தவஞ்செய்யும் மார்க்கண்டேயனிடம் செல்லவேண்டுமாதலால் நமது வாகனமாகிய விருஷபத்தை கொண்டுவாவென்று ஆக்ஞாபித்தனர்.

இவ்வண்ணமாய் ஆக்ஞாபித்ததை சிரசாவகித்த நந்திகேசரும் கைலையம்பொத்து விளங்காநின்ற வெள்ளிய ரிஷபத்தை அலங்கரித்து பிரதமகணங்களையுந் தயார்செய்து பரமேசுவரரிடம் தெரிவிக்க பரமேச்வரரும் உடனே தம் சிம்மாசனத்தினின்றெழுந்து பார்வதிதேவியுடன் விருஷபமேறி சூரியன் குடைபிடிக்க, குபேரனொருபுறமும், தேவேந்திரனொருபுறமும், சாமரைகள்வீச, கந்தர்வர்கள், தோத்திரஞ்செய்ய, நந்திதேவரின் ஆஞ்ஞைக்குட்பட்டு பிரமதகணங்கள் முன்னேறிச்செல்ல, அதிவேகத்துடன் மார்க்கண்டேயர் தவஞ்செய்யும் பனங்காட்டை அடைந்தனர். இவ்வித சகல கணங்களும் பார்வதிசமேதரான பசுபதியும்வந்து பனங்காட்டிலிறங்கியபோது கந்தருவர்களின் வாத்தியமுழக்கங்கள் எண்டிசையதிரவும், தேவர்கள் புஷ்பமாரி

பொழியவும், பிரதமகணங்களெல்லாம் ஜெயஜயவென்று போற்றி செய்யவும், விருஷபம் முக்காரம்போடவும், கேட்டு கிங்கிணிகலிக்க மார்க்கண்டேயமகாமுனி கண்களைத்திறந்து பார்த்தபொழுது தன்முன்னர் கோடிசூர்யகாந்தியுடன் வாமபாகத்தில் விளங்கிய பார்வதிதேவியோடு விருஷபத்தின் மீதாரோஹணித்திருக்கும் சந்திரகலாதரனைக்கண்டு, பரமானந்தங்கொண்டு, மெய்சிலிர்த்து, வாய்குழறி, அங்கமெல்லாநெக்குருக, அனலிற்பட்ட மெழுகுபோல் மனங்கரைந்து, கடுங்காற்றால்மெலிந்த சரீரத்தைதண்டம்போல் பூமியில்வீழ்த்தி எழுந்து கரமுகிழ்த்துமலர்வித்து மறுபடியும் நமஸ்கரித்து பின்வருமாறு துதிக்கின்றனர்.

ஹே மகாதேவா, உமாபதியே, காலனுக்குக்காலனே, திரிபுரசம்ஹாரனே, முக்குணங்களையுங்கடந்தவனே, பினாகபாணியே, சிவகணங்கட்கதிபனே, முக்கண்ணையுடையவனே, தக்கன் வேள்வியையழித்தவனே, பிரமன் சிரங்கொய்தவனே, மகாவிஷ்ணுவின் திருக்கண்மலர்களாலருச்சிக்கப்பெற்றவனே என்று பலவாறாய்த்துதித்து வணங்கிநிற்கும் முனிவர்மைந்தனைநோக்கி நீலகண்டனும் உன் உக்கிரநஷ்டமான தவத்தால் யாம் அகமகிழ்ந்தோம். உனக்கிஷ்டமானவரத்தை கேட்பாயாகில் அதனைக்குறைவறக்கொடுக்க உடன்படுகின்றோம். என்று கூறியமொழிகளைக்கேட்ட முனிகுமாரன் இருகைகளையும் சிரமேற்கூப்பினவராய் ஹேபக்தவத்ஸலா! உங்களைக் கண்ணாறப்பார்த்தமாத்திரத்தில் அடியேனின் மனோரதங்கள்யாவும் பரிபூரணமாயின. ஆகிலும் தாமது ஆனந்த நடனத்தை யிதுகாறும் கண்டிலேன் ஆகையால் வெளியேன்மீது கருணைகூர்ந்து ஆனந்தநடனத்தையெனக்குக்காணபிக்கவேண்டுகிறேன் என்றுபிரார்த்திக்கும் முனிகுமாரனைநோக்கி ஹேமார்க்கண்டேயா உமதிஷ்டத்தை நிறைவேற்றுகின்றோம். இதனையடுத்தவருடத்தில் வைகாசிமாதத்தில் பௌர்ணமிபோடுகூடிய விசாகநக்ஷத்திரதினத்திலேயே உன் முன்பாக



நடனஞ்செய்வோம். அதுவரையிலும் நீர் தவஞ் செய்துகொண்டிருக்கக்கடவீர் என்று ஆக்ஞாபித்து பார்வதியுடனும் நந்தி முதலிய சிவகணங்களுடனும் மறைந்தனர்.

கேளுங்கள் முனிசிரேஷ்டர்களே இவ்விதம் மார்க்கண்டேயர் செய்தவச்சிரலிங்கத்தின் பூஜையையும் அவருக்குப் பரமசிவன் பிரத்தியக்ஷமானதையும் படித்தவர்களும், பிறர்பாலெடுத்துச்சொன்னவர்களும் அதனைக்கேட்டவர்களும் இம்மையில் சகல மனோரதங்களையும் பெற்று மறுமையில்மோக்ஷமடைவது நிச்சயம்.

## ஆறும் அத்தியாயம்


முற்றிற்று.

# ஏழாம் அத்தியாயம்.

—):O:(—

## மழுவாடியர் சருக்கம்.

கேளுங்கள் தபசிகளே இவ்வண்ணமாய் முனிகுமாரனிடம் கூறிய சிவபிரான் கைலையையடைந்தபின்னர் மார்க்கண்டேயர் அத்தலத்திலேயே வச்சிரலிங்கத்தைப் பூசைசெய்துக்கொண்டிருக்கையில் முன்னம் ஈசனாற்கூறப்பட்ட வைசாகபௌர்ணமையும், விசாகநக்ஷத்திரமுங்கிட்டியது. சிவபிரானும் கைலயங்கிரியிலிருந்து மார்க்கண்டேயனுக்கு குறித்தகாலம் சமீபத்ததால் அவனிஷ்டத்தைப் பூர்த்திசெய்ய புறப்படுவதாய் எண்ணினார். இது இவ்வாறிருக்க. இந்திரன்முதலாகிய தேவர்களனைவரும் அசுரர்களால் வருத்தப்பட்டு தங்கள்தங்கள் அதிகாரங்களையிழந்து கைலையையணுகி வாமதேவரை சரணமடைந்து நிற்கும் தேவர்களைநோக்கி ஹேதேவர்காள்! உங்களுக்கேற்பட்ட அதிகாரங்களை இழந்து இங்ஙனம் அல்லோலகல்லோலமாகி இவ்விடம் வந்தகாரணமென்னவென்றுவினவ? தேவர்களும் அசுரர்களால் வருந்துகின்றோம், ஆதலின் உம்மையல்லால் வல்லவர்கள்யாவருமிலர், இக்கணமே புறப்பட்டு எங்கள்இடரை நிவர்த்திக்கவேண்டுமென்று பிரார்த்திக்க மஹாதேவனும் இன்றுவைசாகமாதத்தின் பௌர்ணமை தினமன்றோ! இப்பௌர்ணமையிற்றானே மார்க்கண்டேயனுக்கு நடனங்காண்பிப்பதாய் வாக்களித்திருக்கிறோம். அதனை நிறைவேற்றப்புறப்படுங்கால் தேவர்களோ அசுரர் பீடையுண்டானதாய்த்தெரிவிக்கின்றனர். இவ்விருவர்கட்கும் ஒரேகாலத்தில்யெப்படி இஷ்ட பூர்த்திசெய்வது தேவர்களின் இடரைத்தீர்க்கப்போனாலோ முனிகுமாரனுக்கு அளித்தவாக்கின்படி நிறைவேற்





றமுடியாது. முனிகுமாரனுக்குக் கொடுத்த வாக்கைநிறைவேற்றச்சென்றாலோ அசுரர்கள் ஆக்கிரமித்துவிடுவார்கள். ஆகையால் இருவாறுசெய்துமுடிக்க மனதில் தீர்மானித்துக்கொண்டு தன் கையிலிருக்கப்பட்ட மழுவாயுதத்தைநோக்கி ஹேமழுவே! யாம் செய்யுங்காரியங்கள் ஒவ்வொன்றையும் நீயுஞ்செய்ய வல்லவனன்றோ! ஹேகோடாரியே! அசுரர்குலத்தையழித்துதேவர்களைக் காக்க நாம்போகவேண்டியதவசியமாதலின் நீயென்போல் ரூபங்கொண்டு இக்கணமே காவிரியின் வடகரையிலுள்ள பனங்காடடைந்து ஆங்குதவஞ்செய்யும் மார்க்கண்டேயமுனிவனுக்கு முன்னமே யாம்கூறியவண்ணம் நர்த்தனஞ்செய்து இஷ்டபூர்த்திசெய்விப்பாயாகவென்று கட்டளையிட்டு மழுவையனுப்பியபின்னர் இந்திராதிதேவர்களோடு, அசுரர்களையழிக்கச்சென்றனர். இவ்வாறு கங்காதரன் உத்திரவைப்பெற்றமழுவும் சிரத்திற் சந்திரகலையுங், கங்கையும் விளங்க, நெற்றியில் மூன்றாவது கண்பிரகாசிக்க, கைகளிலேந்திய மானும் மழுவுந்துலங்க, விபூதிப்பூச்சினால் வெளுத்தத் திருமேனியின்மீது ருத்திராக்ஷமாலைகள் விளங்கத், தானே பரசிவமூர்த்தியாகி, விருஷபத்தின் மீதாரோஹணித்து, நந்திகேசுரர்முதலிய சிவகணங்களாற் சூழப்பெற்று, நாரதர்முதலிய முனிவர்கள்துதிக்க, கந்தருவர்கள் இனியசங்கீதம்பாட, பேரிகைமுதலிய பதினெண்வாத்தியங்களும் முழங்க, காவிரியின் வடகரையில் விளங்கும் வச்சிரத்தூணேசரின் சந்நிதியையடைந்தது.

இவ்விதமாய் சந்நிதியையடைந்த மழுவாகிய சிவபிரானை மார்க்கண்டேயமுனிவர் நோக்கி ஆநந்தபரவசராகி, பன்முறை வலம்வந்து நமஸ்கரித்துநிற்கையில், பரசிவவேடங்கொண்டமழுவும் விருஷபத்தினின்று இறங்கி வச்சிரத்தூணேசர் சந்நிதியில் விஸ்வகர்மனால் உண்டாகப்பட்ட நவமணிகளாலான பிரகாசம் பொருந்திய சபாமண்டபத்தில் பிரமன்கைத்தாளமொலிக்க, திரு

மால்மத்தளந் தொனிக்க, யக்ஷ, கின்னரர்கள் வாத்தியங்களை
முழக்க, நாரதர் யாழினையிசைக்க, தும்புரர் கின்னரிவாசிக்க,
மார்க்கண்டேயர் அஞ்சலி அஸ்தராய் இமைக்கொட்டாது கண்டு
களிக்க நர்த்தனஞ்செய்யத் தொடங்கிற்று.

இவ்வாறு நந்திமுதலிய சிவகணங்களும், யக்ஷர்முதலிய
கந்தருவர்களும், விஷ்ணுமுதலியதேவர்களும் புடைசூழ, மழுவா
கிய பரசிவமூர்த்தியானவர் சம, உத்வாஹித, அதோமுக, ஆலோ
லித, த்துத, கம்பித, பராவிருத்த, உக்ஷிப்த, பரிவாஹிதமாகிய
ஒன்பது விதசிரோபேதங்களையும். சம, ஆலோகித, ஸாச்சி, ப்ர
லோகித, நிமீலித, உல்லோகித, அநுவிர்த்த, அவலோகிதமாகிய
எண்வித நேத்திரதிருஷ்டிபேதங்களையும். சுந்தரி, திரச்சினை, பரி
வர்த்திதா, பிரகம்பிதா, ஆகியநான்கு*கிரீவாபேதங்களையும்.
அசம்யுதம், சம்யுதம், அசுரர்கள், சுரர்கள், மானுடர், மிருகங்கள்,
பக்ஷிகள் முதலிய ஹஸ்தபேதங்களையும், ஆங்கிகம், வாசிகம்,
ஆஹார்யம், சாத்விகம் ஆகிய நான்குஅபினயபேதங்களையும். உத்
தானம், லாஸ்யம் ஆகிய இரண்டுதாண்டவபேதங்களையும். ஸ்வ
பாவம், பத அர்த்தபாவம், விபாவம், அநுபாவம், வியபிசாரிபா
வம், சஞ்சாரிபாவம், நவரசபாவம், முதலானபாவங்களையும். சிங்
காரம், வீரம், கருணை, அத்புதம், ஹாஸ்யம், பயாநகம், பீபத்ஸம்,
ரௌத்ரம், ஸாந்தி, வத்ஸலம், ஆகியரசங்களையும். அதற்கேற்றஸ்
தாயிகளையும், நாயகா நாயகி பாவங்களையும். அதீத, அநாகத, சம,
விஷம, முதலிய தாளதசப்ராணங்களையும். சச்சபுடாதி நூற்றெ
ட்டு தாளவகைகளையும். சதுஸ்ர, திச்ர, மிச்ர, கண்ட, சங்கீர்ண
கிய ஐந்துஜாதிபேதங்களாலான திருவ, மட்ய, ரூபக, ஜம்ப, அட
தாளமாகியமுப்பத்தியைந்துதாளவகைகளையும். தத், தித், தொம்,
நம், கிட, ஜெணு, டிங்கு, தளாங்கு, தரி, தக, ஜம், முதலான

*கிரீவம்=கழுத்து.



நடைகதி சொற்களையும் பொருந்த, தோடி, பைரவி, கல்யாணி,
காம்போதி, நாட்டை, ஸ்ரீராகம்முதலிய இராகங்களில் கண, நய,
தேசிகங்கள் பொருந்தி, தசவித கமகங்களுடன்கூடிய வர்ணம்,
பதம், மற்றுமுள்ள பாவினங்களுக்கிசைந்து அப்பாவினங்களி
லிருக்கின்ற அருத்தங்களுக்கிணங்க தன்ஹஸ்தங்களினால் அபி
நயித்து சிரத்திற்குக் கீழ்ப்பட்ட பாகங்களிற்காட்டும் ஹஸ்தத்தி
னிடம் பார்வையும், அதனிடமாய்த் தன்மனமும், அவ்வவற்றுக்
கேற்ற ரசபாவங்களை முகத்தினிடம் உண்டாக்கிக்காட்டி, தன்
காலிலுள்ள சிலம்புகள் ஒலிசெய, சகலரும் ஆனந்தசாகரத்தி
லாழ நர்த்தனஞ்செய்தது. இவ்விதஞ்செய்த ஆனந்தநடனத்தை
மார்க்கண்டேயமகாமுனிவர் கண்ணாரக்கண்டு களிகூர்ந்து, தேக
பரவசராகி, ஆநந்தக்கண்ணீர்ததும்ப, ஹேபிரணவத்தின் பொரு
ளான பரசிவமே, நித்யமங்களமூர்த்தியே, பஞ்சாக்ஷரத்தின்
பொருளே, ஞானரூபியே, நெற்றிக்கண்ணால் மன்மதனை யெரித்
தவனே, காலனைக்காலானுதைத்தவனே, பாவங்களாகிய பஞ்சிற்
குப் பெருஞ் சுழற்காற்றே, சூலபாணியே, தங்களாலனுக்கிரகிக்
கப்பெற்றேன், இப்பொழுதே சகலசித்தியையுமடைந்தேன், என்
மீது கருணைகூர்ந்து ஆனந்தநர்த்தனஞ்செய்தருளினீர். யெனப்
பலவாராய்த் துதித்துநிற்கும் முனிகுமாரனைநோக்கி மழுவாகிய
பரமசிவனும் ஓ மார்க்கண்டேயா! உன்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்
யவேண்டி இவ்விடம்வந்து நர்த்தனமுஞ்செய்தோம். பின்னும்
உனக்கேதாகிலும் வரம்வேண்டுமானாலும் கொடுத்தருளுவோ
மென்று கெம்பீரமாயுரைக்க, முனிகுமாரன் ஓ பகவானே! இவ்
வச்சிரலிங்கத்தில் எக்காலத்தும் பூர்ணகலையுடன் விளங்கும் நீர்
இப்போது செய்த நர்த்தனம்போல் வருடந்தோறும் செய்ய
வேண்டுமென்று இரங்கிநிற்க, மழுவாகிய பரசிவனும் அகமகிழ்ந்
து முகத்திற் புஞ்சிரிப்புலாவ முனிபுத்திரனைநோக்கி உனது
வேண்டுகோளுக்கிணங்கி வருடந்தோறும் விசாக நக்ஷத்திரங்
கூடிய வைகாசி பௌர்ணமியில் நர்த்தனஞ்செய்வோம். நீரும்


அக்காலத்திற் கண்டுகளிப்பிரெனு விஷ்ணுமுதலிய தேவர்கள் நிரைந்தசபையில் மார்க்கண்டேயருக்கநுக்கிரகஞ் செய்தபின்னர் விஷ்ணு முதலியவர்களையனுப்பிவிட்டு அவ்வச்சிரலிங்கத்தினுள்ளே மழுவாகியபரமசிவன் மறைந்தனர்.

கேளீர்முனிவர்காள்! பனங்காட்டென்னுந்தலத்தில் மழுவானது பரசிவவேடங்கொண்டு ஆனந்த நர்த்தனஞ் செய்ததால் அன்றுமுதல் அத்தலத்திற்கு திருமழுவாடியென்று பெயர்வாய்ந்தது. அதன்பின்னர் மார்க்கண்டேயரும் தன் ஆச்சிரமத்தையடைந்து வருடந்தோறும் விசாகபௌர்ணமையும் விசாகநக்ஷத்திரமும் கூடியதினத்தில் வந்து வச்சிரலிங்கத்தைப்பூசித்து நர்த்தனத்தையுந் தரிசனஞ்செய்து வருகின்றனர்.

இம்மழுவாடிய தலபுராணத்தில் மழுவின் நர்த்தனங்கூறிய இவ்வத்தியாயத்தைப்படித்தவர்களும், அதைக கேட்டவர்களும், அதனை பிறர்பால்யெடுத்துரைத்தவர்களும், இம்மையில் சகலசுகபோகங்களையும்பெற்று மறுமையில் சிவசாயுச்சியபதவியையடைவார்கள்.

ஏழாம் அத்தியாயம் முற்றும்.

139900



# எட்டாம் அத்தியாயம்.

## சுஷேணன் முத்திகாண் சருக்கம்.

கேளுங்கள் முனிவர்களே! திருமழுவாடி என்னுர்தலத்தில் வச்சிரத்துவேசர் அனுக்கிரகத்தினுல் சிவகங்கைஎன்னும் தீர்த்தத்தில் சுஷேணனென்னும் பிராமணனின் எலும்பை கழுகு கொண்டுவந்து போட்டதால், கொடியபாதகனுன அப்பிராமணனுடைய மகாபாதகங்களைத்தும் நீர்ந்து கைலாயலோகஞ்சென்ற சரித்திரத்தை உரைக்கிறேமென்று சூதமுனிவர் பின்வருமாறு சொல்லத்துடங்கினர்.

பிரசித்திபெற்ற பாண்டியநாட்டில் சோழவந்தானென்னும் ஓர்கிராமத்திலுள்ள அக்கிரகாரத்தில், நித்யகர்மங்களையனுஷ்டிப் பதிற்சிறந்தவரான லம்படனென்னும் ஓர் அந்தணர் இருந்தார். அவருக்கு பாற்கடலில் அமிர்த மதனம் செய்யுங்கால் ஆலகால விஷம்பிறந்ததுபோல் சுஷேணனென்னும் ஓர் புத்திரன் உற்பவித்தான். அச்சுஷேணனுக்கு ஜாதகர்மம், நாமகர்மம், அன்னப்பிராசனம், முதலியவைகளையும் செய்வித்து, தகுந்தகாலத்திலேயே த்தியாப்பியாசம் செய்விக்கப்பெற்று, எட்டாம் வயதின் துவக்கத்தில் விதிப்படி உபநயநமும் செய்விக்கப்பெற்றுன். பிறகு வன் வேதங்களை அத்யயனம் செய்யவேண்டியதற்காக குருலத்தில் வாசம்செய்துகொண்டிருந்த அவ்வந்தணனுக்கு பாம் றகு வார்த்தபாலும் விஷமாகமாறுவதுபோல் ஞானேபதேசங் ளாவும் அக்ஞானத்துக்கேதுவாயின. அவன் தனது குரு க்கும்சமயம்பார்த்து அவர் இரண்டுகால்களையும் பற்றிபிழூப்ப

றும். அவர் நடக்கும்பாதையில் முன்னமேயே ஓர்பள்ளந்தோண்டி முட்களை நிரப்பிதழைகளைப்பரப்பி மண்ணால் மூடிவைத்து குரு செல்லும்போது அவர் தன் காலைவைத்தவுடன் அந்தப்பள்ளத்தில் விழுந்து முட்களாற்றைக்கப்பட்டு உபத்திரவப்படுஞ்சமயம் தனது இரண்டுகரங்களையுங் கொட்டி நகைத்துக்கொண்டு நிற்பதும். குருவின் வஸ்திரங்களை தோய்த்துவரச்சொன்னால் அவ்வஸ்திரங்களில் மணல்முடிந்து கல்லில் ஓங்கிஅடித்து நூறு கண்கள் உண்டாகும்படிச் சின்னபின்னமாய்க்கிழித்து விடுகிறதும். பசுமாடுகளை மேய்த்துவரச்சொன்னால் காட்டிற் கொண்டுபோய் விரட்டிவிட்டு புலியடித்துத் தின்றுவிட்டதென்று பொய் வார்த்தை சொல்வதும். பயிர்க்குழிகளுக்குத் தண்ணீர் விடச்சொன்னால் அதன் வேர்களையறுத்துவிட்டு நிறைய ஜலம் வார்த்து வருவதும். அத்தியயனஞ்செய்யும் பிள்ளைகளை விளையாட அழைத்துக்கொண்டுபோய் அவர்களுடன்கூடிவிளையாடாமல் அவர்களைச் சௌக்கினால் அடிப்பதுமான இன்னும் அநேக கெட்டகாரியங்களைச் செய்து வந்தானேயொழிய குருவாற் கற்பிக்கப்பட்டு வந்த வித்தையை கொஞ்சமும் உணர்ந்தானில்லை. இப்படிக்கவலையற்று திரிந்த அவனுக்கு விஷ விருக்ஷங்கள் சீக்கிரம் பழுப்பதுபோல அதிசீக்கிரம் யௌவனபருவமும் வந்தபடியால் அதனையுபயோகிக்க வெண்ணி குருவின் பத்தினியை மைகளாலும், மருந்துகளாலும், மந்திர தந்திரங்களாலும் தன் வசஞ்செய்துவிட்டபடியாலும், குருபத்தினியும், யௌவன முடையவளாதலாலும், இவனது மோகத்திலாழ்ந்து பதியின் பணிவிடைகளைச் செய்யாதொழிந்தனள். இவ்வாறு இருவரும் சுக சல்லாபமாயிருந்து வரும் நாளில் ஒருதினம் தன் வீட்டு வேலைகளைச்செய்துகொண்டிருக்கும்பொழுது அவளை பகற்புணர்ச்சிக்கு வரவேண்டுமென்று வற்புறுத்த அதற்கவளிசையாததைக் கண்டு அப்பார்ப்பினியின் தலையின் மயிரைப்பிடித்திழுத்து பூமியிற்றள்ளி காலால் உதைத்து கைகொண்டவரைக்கும் அடித்தனன். இவ்வாறு சுசே



ஷணன் அடித்த அடிகளைப்பட்ட பார்ப்பனி அடியின் உபத்திரவங்களைப்பொறுக்காதவளாய் கோவென்றழ அண்டை வீட்டிலுள்ள ஆண், பெண், இருபாலாரும் ஓடோடியும் அவளைக்கிட்டிவந்து என்னவென்று விசாரிக்கும்பொழுது இவ்விருவர்களுடைய வாய்மொழியால் இவர்களுக்கிருக்கும் சிநேகத்த தன்மையையுணர்ந்து கரங்கள் இரண்டையுந் தங்கள் காதில்வைத்து சிவசிவா! பென்னபாவம்! என்று சொல்லிக் கொண்டு வீட்டைவிட்டு வெளியில்வந்து நின்றுகொண்டு கிராமத்தோரையெல்லாம் ஒருங்கு சேர்த்து ஆலோசித்து இவ்விருவரையும் அந்த கிராமத்தைவிட்டு ஓட்டிவிட்டனர். இவ்வாறு செய்த பின்னர் வெளியிற் சென்றிருந்த குருவானவர் வீட்டுக்குவர நடந்த சங்கதிகள் யாவும் கிராமத்தோரால் சவிஸ்தாரமாக வுணர்ந்து துஷ்டசெய்கைகளையுடையவளை குடும்பத்திற்சேர்த்துக் கொள்வது சரியல்ல, ஓட்டிவிட்டதே மேலானதென்று உரைத்து, வேறொருபெண்ணை மணந்து இல்லறம் நடாத்தி வந்தனர். இது இவ்வாறிருக்க முன்னர் கிராமத்தினரால் ஓட்டப்பெற்ற பார்ப்பனியானவள் தன் தாய்வீட்டையடைந்தனள். சிஷ்யனாகிய சுசேஷணனோ மறுதேசஞ்சென்று அங்கு ஓர் தாசி வீட்டையடைந்து அத்தாசியினது சரசசல்லாபலீலைகளாலும், இனியமொழிகளினாலும், மனங்கரைந்து தன்வலையிற் சிக்கியிருப்பதைக்கண்டு இப்பிராமணனோ நமது வலையிற்றானாய்ச்சிக்கிக்கொண்டானாதலால் இவன் கையிலுள்ள பொருள்களைப்பறிக்க இச்சமயம் தவறினால் வேறுசமயம் கிடைப்பதரிதென்றுணர்ந்து தன் தாயைப்பார்த்து அம்மா இப்பார்ப்பானோ நம் வலையில் நன்றாய்ச்சிக்கிக்கொண்டான் இவன் கையிலுள்ள பொருள்களெல்லாம் பறித்துக்கொண்டுவிட இதுதக்க சமயம் ஆகையால் அதற்கேற்ற தந்திரங்களைச் செய்து பொருள்களை அபகரிக்க வழிதேடுவோம் என்று சொல்லத்தாய்க்கிழவி பார்ப்பானைப்பார்த்து ஐயரே! எங்கள் தவப்பயன்போல் தாங்கள் எங்கள் வீட்டுக்கு வந்தநாள் முதல் எங்களுக்கோர் குறையுமில்லை. தங்க

[illegible] தாங்கள் [illegible] கொடுப்பதைத் [illegible] ஆகையால் [illegible]



[illegible] முத்தமிட்டு [illegible] கொண்டாடி [illegible] கல்யாணத்திற்கு போக [illegible] கேட்க [illegible] கொடுத்தாள். இவ்வாறு [illegible] பொருளை [illegible] நாளுக்கு நாள் கொஞ்சம் கொஞ்சமாய் [illegible] நெருங்கிப் பஞ்சிட்டு [illegible] இவ [illegible] ஆக [illegible] கொண்டு அவள் வீட்டிற்கு [illegible] தாசி [illegible] நோக்கி ஓ பிராமணா! [illegible] இல்லாததால் நீ எனக்குக் [illegible] பொருளில்லாத [illegible] கொண்டு [illegible] கூறி வீட்டை விட்டு வெளியிலோட்டி விட்டனள். அதன்பின்பு [illegible] அந்த தாசியின் [illegible] பொருள் [illegible] இராமலிங்க [illegible] கொண்டு [illegible] நாள் [illegible]

குள் ஏற்பட்டதால் அன்று தன் தொழில் நன்றாய்ப் பலிக்குமென்
றெண்ணி தேகமெங்கும் எண்ணெயைப் பூசிக் குழைத்த கரியைப் பூசி
அரையில் ஓட்டிச்சல்லடம் இட்டுக் கச்சையிறுக்கி, கத்திகட்டி, தான்
பூரணமாய்ப் [illegible] செய்து, இராத்திரி ஓர் ஜாமத்திற்குமேல் [illegible]
கின்றுகொண்டு இன்று எங்கு சென்று திருடலாமென்று ஆலோ
சித்துக்கொண்டிருக்குஞ்சமயத்தில்: அவ்வூரரசன் அரண்மனையில்
விசேஷமாகைக்கால நாட்டியங்கள், ஆறுசாஸ்திரம், பதினெண்
புராணம் முதலியவைகளும் [illegible], காமசாஸ்திர
ங்களையுமுணர்ந்தவரும் அவ்விதியின் வழியே வழுவாது நட
ப்பவருமான உத்தம புரோகிதருக்கு தங்கக்குண்டலங்கள், பகா
கண்டிகை, இரத்தினமோதிரங்கள், தோடாக்கள், தோள்வளை
கள் முதலிய ஆபரணங்களும், ஜரிகைசால்வை, பீதாம்பரம் முத
லிய வஸ்திரங்களும், ஆயிரம்பொன்னடங்கிய ஓர் பையையும்
சன்மானமாகக் கொடுத்ததைப் பார்த்துக்கொண்டு பிராமணோத்தம
ரான புரோகிதர் தனது இல்லம் வருவதைக்கண்ட சுதேஷணனெ
ன்னுந்திருடன் சிங்கம் பாய்வதைப்போல் ஒரேபாய்ச்சலாய் பிரா
மணன் மேற்பாய்ந்து தன் கையிலுள்ள வாளையுருவி வெட்டுவத
ற்கு ஓங்கி நிற்கையில் புரோகித பிராமணர் இவனது காலனைப்போ
ன்ற கறுத்தவுருவையும், அவனது, செய்கையையும் கண்டமாத்திரத்
தில் யாதும் தோன்றாமல் மனம் பதைத்து, மெய் நடுங்கி,
வியர்த்து, வாய் குழறி, நிற்கையில் திருடன் அவர்மீது அணிந்
திருந்த நகைகளையும் பணங்களையும், வஸ்திரங்களையும், அபகரித்த
துமல்லாமல் அவரிடுப்பில் கட்டியிருந்த பொற்காசுகள் அடங்
கிய பையைப்பறிக்க பிராமணர் ஒப்பாததனால் தன் கையி
லுள்ள வாளால் இருதுண்டாய் வெட்டிப்போட்டு அவரிடுப்பிலுள்ள
பையையவிழ்த்துக்கொண்டு தன் பிரிய நாயகியாகிய தாசியின்
வீட்டையடைந்து வழக்கப்போல் வேண்டும் பொருளளித்து சுகி
த்திருந்தனன். அதன் பிறகு அச்சுதேஷணனுக்கு தாசியானவள்
வேண்டும் பணிவிடைகளைத்தாம் செய்து சரசசல்லாப சுக



போகங்களையுமளித்துக் கொஞ்ச கொஞ்சமாய் கையிலுள்ள
பொருள்களையெல்லாம் பறித்து நிர்ப்பாக்கியனாக்கி விட்டனள்.

இவ்விதம் நிர்ப்பாக்கியனான திருடன் தாசியின் போகம் தீரா
தவனாய் மறுபடியும் பொருள் சம்பாதிக்க திருடுமிடம் கிடை
க்காமையால் ஜனங்கள் [illegible] ஜனங்களையடி
த்து வழிப்பறிசெய்து பொருள் சம்பாதித்து முன்போலவே
தாசிக்களித்து காலங்கழித்துவருபவன் ஓர்நாளில் வழக்கம்
போல் வழிப்பறிசெய்ய வெளியில் [illegible] பெருவெளியு
ம் விட்டதிலுள்ள பாதையில் வரும் பாடசாரிகளிடம் பறிக்க
எத்தனித்துக் கொண்டிருக்குஞ் சமயம் ஓர் வேங்கை தன்
குகையைவிட்டு வெளியாகி இரை தேடி வருகையில் திருட
னிருப்பதைக்கண்டு திருடன்மீது ஒரேபாய்ச்சலாய்ப்பாய்ந்து
கொன்றுவிட்டு அவனுதிரத்தை பானம் பண்ண யத்தனிக்கும்
போது இவன் மகாபாதகனானவன் இவனுதிரத்தை பானஞ்செ
ய்யலாகாதுயென்று கொடிய வேங்கைக்கு ஞானம் தோன்றவே
அவனைக்கொன்றுவிட்டு அகன்று தன் குகையையடைந்தது. இவ்
வாறு மரணமடைந்த சுதேஷணனென்னும் மகாபாதகனாகிய திரு
டனை இயமனானவன் தன் கிங்கரர்களை யழைத்து அக்கொடிய
பாதகனை சுதேஷணன் மரணத்தை யடைந்து விட்டபடியால்
அவனை நமது ஆக்ஞைக்குட்பட்டு அநேக கொடுமையான வதை
களைச்செய்து அவனுயிரை என்முன் கொண்டுவந்து சேர்க்கக்
கடவீர்களென்று கட்டளையிட்டதைக் கேட்ட இயமகிங்கரர்கள்
அப்பலைச்சாரலிலுள்ள சுதேஷணனை யணுகி அவனை நெற்றியில் இரு
ப்பு முள்களால் அறைந்து அவன் மூக்கில் கயிறுகோத்து கதை
சூலம், வேல், வாள், முதலிய ஆயுதங்களால் நையப்புடைத்து கால
பாசத்தினாற் கட்டி ஜீவனை இயமலோகம் கொண்டுபோகத்துடங்
கினர்.

இது இவ்வாறிருக்க மகாபாதகனாகிய சுஷேணனுடைய பிரேதமானபின்னர் அது பாதகஞ்செய்த உடலாதலால் புலி, நாய், நரி, முதலிய எந்த மிருகங்களும் புசிக்கவேயில்லை. எறும்புகளும் மொய்க்கவேயில்லை. காக்கை முதலிய பறவைகளும் தீண்டவுமில்லை. சர்வநிகிருஷ்டமும் சண்டாளத்துவமுமுள்ள ஓர் காகமானது இந்தப் பிரேதத்தின் ஓர்பாகமான மாமிசத்தோடுங்கூடிய ஓர் துண்டத்தைத் தன் வாயிற்கவ்விக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ப் பறந்து தன் குஞ்சுகளுக்கிரைகொடுக்கவரும் மார்க்கத்தில் திருமழபாடியென்னும் தலத்தின் வச்சிரலிங்கேசரின் ஆலயத்தின் கோபுரத்திலுள்ள கழுகானது இக்கொடிய பாதகனாகிய சுஷேணனென்பவனின் பிரேதத்தை எவ்விதஜீவன்களும் தீண்டாதிருக்க இச்சண்டாள காகமாத்திரம் எப்படி எடுத்துக்கொண்டு செல்லும் என்று மனத்துள் அதிககோபத்துடன் அதனைக் கொன்றுவிட நினைத்துத்தாக்க அவ்வேகத்தால் அது சண்டையிட்டுக்கொண்டு திருமழபாடியென்னும் தலத்திலுள்ள சிவகங்கைத் தீர்த்தத்திற்கு நேரேவரவும், சுஷேணனென்னும் மகாபாதகனாகிய பிராமணன் தான் முன்ஜன்மத்திற்செய்த தவப்பயனால் சமுத்திரசன்னிதியில் குடியாயிருந்ததையால் தன் மூக்கிலுள்ள மாமிசத்தோடுங்கூடிய எலும்பின் துண்டத்தை நழுவவிட மகாபவித்திரமும், சகலபாவங்களையும் பரிகரிக்கக்கூடியதுமான சிவகங்கையில் வீழ்ந்தது. இவ்விதம் வீழ்ந்த சுஷேணனுடைய சரீரத்தின் ஓர் துண்டமானது உத்தமமான தீர்த்தத்தையடைந்தவுடனே மகாபாதகங்களைச் செய்தவனாயினும் சிவகங்கைத்தீர்த்தத்தின் மகிமையால் இவனது மகாபாதகங்கள் நீங்கவிட, கைலாசகிரியில் வசிக்கும் பார்வதீரமணன் தனது சிவகணங்களை நோக்கி ஹே கணங்களே! நமது பழுதிர்த்தலஞ்செய்த திருமழபாடி என்னும் திவ்விய தலத்தில் வச்சிரலிங்கமாகிய நமது சன்னிதானத்தின் முன்னம் இருக்கிற உத்தமமாகிய சிவகங்கையில் சுஷேணனென்னும் மகாபாதகனாகிய பிராமணனுடைய தேகத்தின் மாமிசத்தோடுங்கூடிய



எலும்பொன்று வீழ்ந்ததால் அவன் மகாபாதகத்தினின்று முக்தனாயினன். ஆகையால் நீங்கள் இக்கணமே சென்று யமபுரத்தின் மார்க்கத்தையடைந்து அவனை யமலோகம் கொண்டு செல்லும் யமகிங்கரர்கள் வசமிருந்து விடுவித்து திவ்விய விமானத்திலேற்றி நமது சன்னிதானத்திற் கொண்டு வருவீர்களென்று ஆக்ஞாபித்த தேவதேவனான பரமசிவன் மொழிகளைக்கேட்ட சிவகணங்கள் உடனே புறப்பட்டுக் கோடிசூரியப்பிரகாசராய், கற்பக மாலைகளையணிந்தவராய், திவ்யகந்தங்களையுடைய சந்தனமுதலாகிய திவ்யகந்தங்களையும், பீதாம்பரங்களையும், இரத்தினகவசங்களையும் தரித்தவர்களாய், தேவவிமானத்தில் ஆரோகணித்து யமபுரத்தின் மார்க்கத்தையடைந்து சுஷேணனைக் கொண்டுபோகும் யமகிங்கரர்களை நோக்கி ஹே கிங்கரர்களே! இவன் சங்கரருக்குப் பிரியமுள்ளவன், இவனை நீங்கள் யமலோகங்கொண்டு சேர்ப்பது எவ்வளவுமாகாது. எங்களிறைவன் பரமேசுவரரின் கட்டளையின்படி நாங்கள் இவனைக் கைலாசங்கொண்டு சேர்க்க வேண்டியதாகையால் நீங்கள் விட்டுவிடுங்களென்று கட்டளையிட அங்ஙனம் யமகிங்கரர்கள் வசமிருந்து சுஷேணனை விடுத்துக் கிங்கரர்கள் யமலோகஞ் சென்றனர். பின்னர் சுஷேணனை யமபாசத்தினின்று நீக்கி திவ்யதேஜோமயமான விமானத்தில் சிவகணங்களேற்றப்பெற்று கைலையில் தேவதேவனான பார்வதீரமணன் சன்னிதியிற் கொண்டுசேர்த்தவுடனே பரமசிவனானவர் சுஷேணனை நோக்கி ஹே பிராமணா! நீ எத்தனையோ பாதகங்களைச் செய்தனையாயினும் எனக்குப் பிரீதிகரமான திருமழபாடிக்ஷேத்திரத்தில் வச்சிரலிங்கமென்னும் எனது சன்னிதியிலுள்ள உத்தமமான திவ்ய பரிசுத்தம் பொருந்திய சிவகங்கையில் உனது ஊனின் எலும்பு சேர்க்கப்பெற்றதால் நீ மகாபாதகத்தினின்றும் முக்தனாயினாய். ஆகையால் நீ மகா பாதகியல்லை. அழியாப்பதத்தைப்பெற்று எப்பொழுதும் பக்கத்திலிருக்கக் கடவையென்று திருவாய் மலர்ந்தருளி அவனுக்குச் சாயுச்சியபதவியைக் கொடுத்தருளினார்.

இது இவ்வாறிருக்க சுவேணனை சிவகணங்களிடம் ஒப்புவித்து வெருண்டோடிய யமகிங்கரர்களை நோக்கி காலன் ஹே கிங்கரர்களே, அங்கு சுவேணனென்னும் மகாபாதகன் என்னாயினன், கிங்கரர்கள் "ஏ நாதா! வெள்ளிக் கைலாசத்தி லிருந்து ஸ்ரீ பரமேசுவரின் சிவகணங்கள் வந்து சுவேணனென்னும் பாவன் மெத்த பரிசுத்தனென்றும் அவனை சங்கரன் கைலைக்குக் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தாரென்றும் அவன் மகாபாதகங்களைச் செய்தவனாயினும் அவன் அஸ்தியானது சிவகங்கைதீர்த்தத்தில் சேர்ந்தவுடன் மகாபாதகத்திலிருந்து விமுக்தனானானென்றும் சொல்லி கைலையைச்சேர்த்தனர்" என்று சொன்னதைக் கேட்ட யமனானவன் மகாகோபாவேசனாய் இரண்டுகண்களிலிருந்தும் நெருப்புப் பொரியெழ, மீசைகள் படபடவென்று துடிக்க, எண்டிசைகளுமதிர, கர்ச்சித்து தன் மஹிஷவாகனமேறி கைலையையடைந்து, நந்திகேசரின் உத்திரவுபெற்று சங்கரன் சன்னிதியையடைந்து பயபக்தி விசுவாசத்துடன் நமஸ்கரித்து நின்றனன். இவ்வாறு நின்ற அந்தகனை நோக்கி பரமேசுவரரான முழுமுதற்கடவுள் வாராய் [illegible]! உனததிகாரமும் உனது சைனியங்களும் நீயும் சுகமா? என்றுவினவியபின்னர் யமனானவன் கூறுவானாயினன்.

ஹே தேவதேவா! ஜெகன்னாயகா! உலகில் சகலவேத சாஸ்திர புராணாதிகளையும் அவ்வவர்களாச்சிரமத்து நடிய தர்மங்களையும் செய்து அவ்விதிகளின் வழியொழுகாது நடப்பவர்களை புண்ணியர்களென்றும், மீறிநடப்பவர்களையெல்லாம் பாதகர்களென்றும் நீங்களே செய்திருக்கிறீர்களன்றோ! அப்படியிருக்க இந்த சுவேணனென்பவன் *குருதாரகமனமும், ¶ஆஹிதாக்னிஹனனமும், ‡வேஸ்யாகமனமும், §ஸ்தேயமும் முதலிய மகாபாதகங்களை

* குருதாரகமனம் = குருவின் மனைவியைப் புணர்தல். ¶ ஆஹிதாக்னிஹனனம் = யஞ்ஞஞ்செய்த பிராமணனைக் கொல்லுதல். ‡ வேஸ்யாகமனம் = விபசாரியைப் புணர்தல். § ஸ்தேயம் = திருடுதல்.



யுஞ் செய்தவனன்றோ! இக்கொடிய பாதகனுக்குத்தகுந்த தண்டனை செய்ய வேண்டுமென்றால் என் உலகத்திலுள்ள இரௌரவாதி நரகங்களும் போதாதே! அனேக கற்பகோடிகாலங்கள் இடைவிடாமல் பிராயச்சித்தங்களைச் செய்தாலும் இவன்பாபத்துக்கு அழிவுண்டோ! இக்கொடிய மகாபாதகனையும் சாயுஜ்யங்கொடுத்துக் காப்பாற்றி விட்டீர்களே! இவ்வாறு எத்தனையோ பாதகர்களையும் இதற்குமுன்னும் காப்பாற்றியிருக்கிறீர்கள். ஆகையால் என்பால் தங்களாற் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரங்கள் முழுவதும் பயன்படாமற் போய்விடுகிறது என்று பலவாறாக முறையிட்டு நின்ற யமனைப் பார்த்து பசுநாயகன் ஹே அந்தகா! உனக்குக் கொடுத்த அதிகாரத்தை விருதாக்கிவிட்டதாய் நினைக்கவேண்டாம், இவன் இச்சென்மத்திற் பல பாதகங்களைச் செய்தவனாயினும் முற்சென்மத்தில் அளவற்றபுண்யத்தைச் செய்திருப்பதும் தவிர இவன் முன்னோர்களும் அவ்வாறே நற்றவத்தைச் செய்தவர்கள் என்பது திண்ணம். ஏனெனில் அவ்வாறு ஜன்மாந்திரங்களிற் புண்ணியத்தை செய்யாதிருப்பானாயின் எமக்கு மிகுந்த பிரீதியைக் கொடுக்கக்கூடிய இப்பூமியின் கண்ணுள்ள திருமழுவாடியென்னுந் திவ்ய க்ஷேத்திரத்தில் நமது முகூர்த்தத்தின் முன்னம் அமைந்துள்ள பரம பரிசுத்தமான சிவகங்கையென்னும் புண்யதீர்த்தத்தில் அவன் சரீரத்தின் எலும்பு வந்து விழுந்திராது. இச்சன்மத்தில் இவன் இவ்வளவு பாதகங்களைச் செய்ய வேண்டியதென்னவெனில், முற்சென்மத்தில் பலபுண்யங்களைச் செய்திருந்தும் இவனறியாது ஒரு பாவத்தைச் செய்திருக்கிறான். எப்படியாயினும் சிவகங்கையில் அவன் எலும்பு விழுந்தபடியால் அவன் பாபங்களனைத்தும் தீயிற்பட்ட பஞ்சுபோற் பறந்து போய்விட்டனவென்று. அச்சிவகங்கையின் மகிமைகளனைத்தும் சாங்கோபாங்கமாய் உரைத்த நீலகண்டன் மொழிகளைக்கேட்டு அச்சிவகங்கையின் மகிமைகளை [illegible]த்தம் இப்பொழுதுதான் நன்குணர்ந்தேன். அப்புண்ணிய

தீர்த்தம் அவ்வளவு மகிமையை வாய்ந்ததாயெனக் காலனுரைக்க பரமசிவன் பின்னும் அச்சிவகங்கையின் பெயரை ஒருவாறு உச்சரித்தாலும், அதன்மீது அடித்த காற்று ஒருவன்மீது பட்டாலும் அவனை பாவங்களும் ஒழியுமென்றால் அதன் மகிமையைச் சொல்ல யார்தான் வல்லவர். எனது சடைமுடியில் விளங்கும் கங்கையினும் அச்சிவகங்கை சிறந்தது. அதனைச்சிவதீர்த்தம் என றும் கூறலாம். என்று ஈசனுரைக்க இயமனும் ஹே சந்திரசேகர விபோ! யான் செய்த அபராதங்களை யெல்லாம் பொறுத்தருள வேண்டுமென்று உத்திரவு பெற்றுக்கொண்டு தனதிருப்பிடம் அடைந்தனன். கேளுங்கள் முனிவர்களே இச்சுலோகனை சரித் திரத்தினால் சிவகங்கையின் மகிமையை நீங்களே யறிவீர்கள். அறிந்து செய்த பாபங்களாயினும் சிவகங்கை ஸ்நானத்தினால் தீருமென்பதிற் றடையில்லை. தீர்த்தங்களனைத்திலும் சிவகங் கையே முதன்மையானது. க்ஷேத்திரங்களனைத்திலும் திருமழு வாடியே சிறந்தது. மூர்த்திகளெல்லாவற்றிலும் வச்சிரலிங்கமே சிலாக்கியமுள்ளது. ஆகையால் இவ்வத்யாயத்திற் கூறப்பட்டுள்ள சிவகங்கையென்னும் திவ்ய தீர்த்தத்தின் மகிமையை படித்தவர் களும், கேட்டவர்களும், பிறரை கேட்கும்படி வற்புறுத்தியவர் களும் இம்மையில் அஷ்டபோகங்களையும் பெற்று சச்சிதானந்த பரம்பொருளாகிய பரமசிவனது திருவடிக்காளாகி என்றென்று மழியாத மோக்ஷமடைவார்கள்.

எட்டாம் அத்தியாயம் முற்றும்.

# ஒன்பதாம் அத்தியாயம்.

—):o:(—

## கமலை பூசனைச் சருக்கம்.

கேட்பீர்காள் முனிவர்களே இன்னுமத்தலத்தில் வச்சிரத் தம்பேசரை மகாலக்ஷ்மி பூஜித்த விசேடத்தையும், கிருஷ்ணமு னிவரால் சபிக்கப்பெற்ற லெக்ஷ்மிதேவி சிவகங்கையில் ஸ்நான ஞ்செய்து அச்சாபத்தை நீக்கிக்கொண்டதையும் உங்களுக்குரைக் கிறேன் நீங்கள் பச்சமரத்திலறைந்த ஆணியைப்போல் நாம் சொல்லும் ஒவ்வொரு விசேடங்களையும் மனதில் பதித்துக்கொ ள்வீராகவென்று சூதமுனிவர் பின்வருமாறு சொல்லத் தொடங் கினர்.

முற்காலத்தில் மிக்கக் கீர்த்திபெற்ற கிருஷ்ணமுனிவரென் பவர் தான் முன்சென்மத்திற் செய்த தவக் குறையால் இச்சென் மத்தில் தேகமெங்கும் வெண்குட்டத்தை யடைந்திருந்தாலும் தான் ஜிதேந்திரியராய் தவத்தைமாத்திரம் விடாது செய்துக் கொண்டுவரும் காலில் ஸ்நானஞ் செய்ய வேண்டி சுதீரப் பிக்குச் சென்றனர். அப்பொழுது அங்கிருந்த லக்ஷ்மிதேவியா னவள் தான் யென்ன உயர்ந்த பதவியிலிருந்தாலும் பெண்ணான படியால் தானிருக்கும் அந்தஸ்த்தை யெல்லாம் மறந்தவளாய் அந்த முனிவரின் சரீரத்தைப்பார்த்து நகைக்கலாயினள். அப்படி நகைத்ததையறிந்த கிருஷ்ணமுனிவரானவர் அதிகோபாவேச ராய் ஹே லக்ஷ்மியே! நீ சகல லக்ஷணத்தோடுங் கூடியிருப்பதா லன்றோ! என்னைப்பார்த்து நகைத்தாய் ஆகையால் உன் சரீ ரமும் எனது சரீரத்தைப் போலவே வெண்குஷ்டமடையக் கடவதெனச் சபித்தவுடன் லக்ஷ்மிதேவியினது தேகமெங்கும்

வெண்குஷ்டம் நிறைந்த சரீரமுள்ளதைக் கண்டு மனதில் அதிக துக்கங்கொண்டவளாய் நாம் தெரியாததனாலல்லவா முனிவரைப் பார்த்து ஏளனஞ்செய்ததால் இவ்வாறு பலரும் நகைக்க நமது சரீரம் கோரமாயிருக்க சாபமடைந்தது. இதனையெவ்வாறு நீக்கிக் கொள்வதென்று மனத்தாலாலோசித்து புண்ய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பரமசிவனை பூஜித்தாலன்றி இந்த ரோகத்தினின்று நீங்கமுடியாதெனநிச்சயித்து கங்கை, யமுனை, கோதாவரி, ஸிந்து, நர்மதை, துங்கபத்திரை முதலிய பல புண்ய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்தும், பல புண்ய க்ஷேத்திரங்களிலுள்ள மகாலிங்கங்களை பூஜித்தும், தன் தேகத்திலுள்ள வெண்வடுக்கள் மாறாமையைக்கண்டு அதிக மனக்கிலேசமடைந்து கடைசியாய் மழுவாடியிலுள்ள புண்ணிய தீர்த்தமாகிய சிவகங்கையில் முழுகி கரையேறுகையில் தான் முன்னம் பாலியப்பட்டில் பிறந்தகாலையில் உள்ள சரீரத்தைப் போலிருக்கக் கண்டு அதிக சந்தோஷத்தோடு வீற்றிருக்கு தேவதேவனாய் சூலபாணியாகிய வச்சிரலிங்கேசரின் மகிமையைத் தெரிந்து தேக பரவசமாகி கண்களில் ஆனந்தவெள்ளம் கரைபுரள மெய்யெலாம் நெக்குருக, ரோமஞ்சிலிர்க்க, பகவானை சகஸ்திரநாமங்களால் அர்ச்சித்து எல்லா பிரகாரங்களையும் ஏழுமுறை பிரதக்ஷணஞ் செய்து வந்து வணங்கி தோத்திரஞ் செய்யத்தொடங்கினாள்.

ஹே கருணாமூர்த்தியே! வேதாந்த வேத்யனே, சர்வப்ரபஞ்சரூபியே, மூவுலகுக்கும் முதன்மையானவனே இவ்வுலகிலுள்ள உத்தம க்ஷேத்திரங்கள் ஒன்றிலும் நீராத என் வெண்குஷ்டத்தைத் தீர்த்துக் காத்தருளினீர். இச்சிவகங்கையில் ஒருபொழுது ஸ்நானஞ்செய்து உம்மைத் தரிசித்த மாத்திரத்தில் நான்சென்மசாபல்யமடைந்தேன் என்று லக்ஷ்மியால் பலவாறாய்ப் பிரார்த்திக்கப்பெற்று வச்ரத்தூணேசர் தேஜோரூபமாய் லிங்கத்தினின்று வெளிவந்து ஹே கமலவாஸினி! உன் பூசையாலும் ஸ்தோத்திரத்தாலும் மிகவும் மகிழ்ந்தேன். உன் தேகத்திலுள்ள வெண் வடுக்களும்



நீங்கின. இன்னுமுனக்கு எந்தவரம்வேண்டுமோ அதனையுமளிப்போமென்ன கமலை இன்று முதல் நான் தவஞ்செய்துகொண்டிருந்தவிடத்தில் தீர்த்தமொன்று என்பெயரால் விளங்கவேண்டுகிறேன் என்று லக்ஷ்மியால்பலவாறாய்ப்பிரார்த்திக்கப்பெற்றவச்சிரத் தூணேசர் ஹே லக்ஷ்மி! உன்னிஷ்டப் பிரகாரம் இவ்வாலயத்திற்கு ஈசான்யதிக்கில் லக்ஷ்மிதீர்த்தமென்று ஓர் தடாகம் உன்பெயரால் விளங்கட்டும். அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து என்னை அர்ச்சித்தவர்களுக்கு மகாரோகங்களும் சகலபாபங்களுமொழிந்து மோக்ஷமடையக் கடவதென்று திருவாய்மலர்ந்தருளி வச்சிரத்தூணில் மறைந்தனர். அக்காலம் தொடங்கி அவ்வாலயத்தின் ஈசான்ய திக்கில் லக்ஷ்மி தீர்த்தமென்று பெயர்வாய்ந்து அதில் ஸ்நானஞ்செய்பவர்களின் ரோகபிணிகளையும் நீக்கி பரிசுத்தமாய் விளங்குகிறது.

இவ்விதமாய்க் கூறியுள்ள இவ்வத்தியாயத்தைப் படிப்பவர்களும், கேட்பவர்களும், பிறர்பால் எடுத்து கூறுபவர்களும், அதனை தினந்தினம் பாராயணஞ்செய்பவர்களும், அதனைப்பூஜிப்பவர்களும், இம்மையில் இஷ்டகாம்யார்த்தங்களை யடைந்து மறுமையில் சிவனருளைப் பெற்று மோக்ஷமடைவார்கள்.

ஒன்பதாம் அத்தியாயம்

முற்றிற்று.

# பத்தாம் அத்தியாயம்.

## மதி பூசனைச் சருக்கம்.

முனிவர்களே! கேட்பீர்களாக. வச்சிரலிங்கத்தைச் சந்திரன் பூசித்ததையும் அந்த லிங்கத்திற்கு வைத்தியநாதரென்று பெயர் வாய்ந்ததையும் உங்களுக்குரைக்கிறேன் சந்தோஷத்தோடு கேட்பீர்களாக.

முற்காலத்தில் தேவர்களும் முனிவர்களும் கண்டு புத்திரர்கள் தக்ஷப் பிரஜாபதியாகிய பதின்மருடனே பிரமதேவரானவர் சத்தியலோகத்தில் சிருஷ்டித்தொழிலைச்செய்துகொண்டிருக்கையில் பிரமபுத்திரர்களுள் ஒருவரான தக்ஷப்பிரஜாபதி தன் தந்தையை நமஸ்கரித்து தவஞ்செய்ய விடை பெற்றுக்கொண்டு இமயமலையிலுள்ள மானஸஸரஸ்ஸென்னுந் தடாகத்தையடைந்து அக்கரையில் நெடுங்காலந் தவம்புரிந்துகொண்டிருந்தனர். அத்தவத்தினால் சந்தோஷித்து பிரத்தியக்ஷமாக வந்த சிவனைநோக்கி தக்ஷப்பிரஜாபதி நமஸ்கரித்து துதிசெய்து அச்சிவபிரானால் கொடுக்கப்பட்ட உலக சிருஷ்டியின் சாமர்த்தியத்தையும் அனைவரும் நமஸ்கரிக்கத்தகுந்த பெருமையையும் வரங்களாகப்பெற்றுத் தன்னிருப்பிடம் சேர்ந்தார். அதன் பின்னர் வேதவல்லியென்னும் ஓர் பெண்ணை மணந்து ஆயிரம் புத்திரர்களுடன் சந்தோஷமாக வாழ்ந்திருக்கும் காலையில் தன் புத்திரர்கள் ஆயிரம் பெயரையும் நோக்கி என்னருமைக்குழந்தைகாள்! நான் முற்காலத்தில் பரமசிவனை நோக்கி தவஞ்செய்து உலகத்தையெல்லாம் சிருஷ்டிக்கும் வரத்தை பெற்றிருக்கிறபடியே நீங்கள் பனிமலையிலுள்ள



மானஸஸரஸ் என்னும் தடாகத்தையடைந்து ஈசுவரனைநோக்கி கொடுந்தவம்புரிந்து அவ்வாறருளைப்பெற்று வாருங்களென்றுரைக்க அவ்வாறேசெய்கிறோமென்று தன் தந்தையிடம் விடைபெற்றுக்கொண்டு ஹிமாசலத்திலுள்ள மானஸஸரஸ்ஸென்னுங் குளத்தின் கரையில் கடுந்தவம்புரிந்துகொண்டிருக்குந் தருவாயில் அவர்களிடம் வந்த நாரதமகாமுனிவருக்கு அர்க்ய, பாத்ய, ஆசமநாதி பூசைகளைத்தருஞ் செய்து நமஸ்கரித்து அஞ்சலிபந்தராய் நிற்கும் பிரமபௌத்திரர்கள் ஆயிரம் பெயரையும் நோக்கி நீங்கள் இக்கொடியபனியால் நிறையப்பெற்ற மலையின்மீதுள்ள அதிக குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்து இப்பேர்ப்பட்ட கொடியதவஞ்செய்யக் காரணமென்னவென்று கேட்ட நாரதமுனிவரைநோக்கி தக்ஷபுத்திரர்கள் சொல்வாராயினர். ஹே பிரமபுத்திர! எங்கள் பிதாமகனும் பிதாவும் அடைந்திருக்கிற உலகசிருஷ்டிசாமர்த்தியத்தை நாங்களும் அடையவேண்டி பரமசிவனை பிரத்தியக்ஷமாக்கி வரம்பெற்றுக்கொள்ள இத்தவம்புரிகின்றோம் என்றுரைக்கவும் நாரதர் புன்சிரிப்புடன் புத்திரர்களைநோக்கி கல்விமகிமைகளும் பொருந்திய பிரமதேவருக்கு பௌத்திரர்களாகிய நீங்கள் பரசிவனைக் கண்ணுறக்கண்டும் சிருஷ்டி சாமர்த்தியத்தை வரமாகக்கேட்பது மிகவும்சாமான்யம் பெறுதற்கரியமோக்ஷத்தையல்லவா யாசித்தல்வேண்டுமென்று கூற, தக்ஷபுத்திரர்கள் அதனையுண்மையாக நம்பி பரமசிவன் பிரத்தியக்ஷமானவுடன் மோக்ஷம் வேண்டுமென்றுபிரார்த்தித்து மோக்ஷமடைந்தனர். தக்ஷப்பிரஜாபதியோ மைந்தர்கள் வாராமையைக்கண்டு ஞானதிருஷ்டியால் யோசித்து நாரதர்செய்த மோசமென்றறிந்து மிகுந்த கோபத்துடன் பின்னுமாயிரம் புதல்வர்களையுண்டாக்கினர். அவர்களும் பிதாவினுத்திரவுப்படி மானஸரஸ் தடாகத்தையடைந்து சிருஷ்டித்தொழிலைப்பெறவேண்டி யீசுவரனைநோக்கி தவம்புரிகையில் நாரதர் முன்போல்வந்து ஓ மைந்தர்களே! உலகத்தை சிருஷ்டிப்பது ஓர் வித்தையா? இதனையறிதலென்னி இவ்வற்பக்காரியத்திற்கு

சகலரைத் துதித்து இவ்வளவு கொடுந்தவம் புரியலாமா? பிரமன் சிருஷ்டித்திருனென்றால் அச்சிருஷ்டி ஓர் பெருங்காரியமாகாது சிருஷ்டியினாலுண்டான அகந்தையினாலன்றோ அவன் ஈசனால் சிரங்கொய்யப்பட்டான், ஆகையால் பரமனைக்கண்டு ரக்ஷணமும் மோக்ஷமடைய வரம் பெறுவதே மேலானகாரியமென்று அவர்கள் புத்தியை மாற்றிவிடவே அவர்களும் அதற்கிசைந்து தவத்தால் ஈசன்பிரத்தியக்ஷமாக மோக்ஷமடைந்தனர். அதனையுமுணர்ந்த தக்ஷன் இனி ஆண்மக்களை யுண்டாக்குவதில்லையென நிர்மாணித்து மிருதுவான சரீரமுள்ளவர்களும், சர்வலக்ஷணங்களும் பொருந்தியவர்களுமாகிய சிலகன்னிகைகளைச் சிருஷ்டித்தனர். அக்கன்னிகைகள் யௌவனமடையும்பருவத்தில் அவர்களை பிருகு, மரீசி, புலஸ்தியர், ஆங்கிரசர், அத்திரி வசிட்டர் முதலிய முனிவர்களுக்கு கல்யாணஞ்செய்துகொடுக்க அவ்வொருவர்களும் பலபுத்திரர்களையும் பலபுத்திரிகளையுமடைந்து விருத்தியாக்கிவந்தனர். பின்னுந்தக்கன் ¶ இருபத்தேழு கன்னிகைகளை மிகுந்த ரூபலாவண்யத்துடன் சிருஷ்டித்து அவர்களனைவரையும் சந்திரனுக்கு கல்யாணஞ்செய்து கொடுத்தனர். தாரைகளென்று பெயர்வாய்ந்த அக்கன்னிகைகளுடன் இல்லறத்திற்சேர்ந்து அவர்களுள் உரோகிணியிடத்து மிகுந்த மையலுள்ளவனாய் மற்றவர்களை கவனியாதிருந்தனன். இவ்வாறு தங்கள் நாயகன் ரோகிணியிடத்து மையல்கொண்டு தங்களை விரும்பி பாராதிருத்தலையுணர்ந்த மற்றவர்கள் தங்கள் தந்தையினிடத்துப்போய் குறைகூற தக்கனும் மிகுந்தகோபத்துடன் உரோகிணியுடன் குலாவிக்கொண்டிருந்த சந்திரனையணுக சந்திரன் உடனே யெழுந்து நமஸ்கரித்து மரியாதையாய் நின்றனன், இவ்வாறுநின்ற சந்திரனைநோக்கி தக்கன் ஹே சசியே! ஏனிப்படி புத்தியபக்கங்கொண்டாய்; உனக்கு நானளித்த பெண்களனைவரும் ரூபத்திலும், குணத்திலும், வயதிலும், ஒருமாதிரியை யுடையவர்கள்தானே? ரோகிணிமீதுமாத்தி

¶ 27 கன்னிகைகளாவன = அசுவினியாதி 27 நக்ஷத்திரங்களாம்.



ரம் காதல்கொண்டது தகுதியல்ல இனி அவ்வண்ணமிருக்காது ஒரேவிதமாய் பக்ஷம்பாராட்டுவாயாக வென்றுகூறி சென்றவுடன் சந்திரன் முன்போலவே ரோகிணியிடத்திலுள்ள காதல் மாறாதிருந்ததையுணர்ந்த தக்கன் மிகுந்தகோபத்துடனே ஹே சந்திரா! முன்னமேயே உரைத்திருந்தும் கேளாதிருந்தாய் உன்னழகால் உண்டாகிய கர்வமே இதற்குக்காரணமன்றோ? உனதழகு கெட்டு நீ §க்ஷயத்தையடைவாயென்று சபித்தனர்.! இவ்வாறு சபிக்கப்பெற்ற சந்திரன் அங்கங்களும் அழகும் குறைய மனக்கிலேசமடைந்து ஒருவாறு தேறி தக்கனைப்பணிந்து ஓ மாமா! அஞ்ஞானத்தாற் சிறுவன் செய்தபிழையை பொறுத்து இச்சாபந்தீர ஒருபாயம் உரைப்பீரென்று வணங்கிநின்ற மருமகனைநோக்கி ஹே! மூர்க்கனே என் பெண்களைமணந்தவனாகையால் உனக்கு பிரதிசாபம் கொடுக்கிறேன். "பூமியில் காவிரியின் வடகரையிலுள்ள மழுவாடி என்னுந்தலத்திலுள்ள சிவகங்கையில் மூழ்கி வச்சிரலிங்கத்தைப் பூசிப்பாயானால் அவர் மகிழ்ந்து சாபத்தை நீக்குவார்" என்றதைக்கேட்ட சந்திரன் பூமியில் காவிரியின்வடகரையிலுள்ள திருமழுவாடியென்னும் க்ஷேத்திரத்தையடைந்து சிவகங்கையில்மூழ்கி வச்சிரத்தூணேசரைப் பூசித்து பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து தனக்கு தக்கனாலேற்பட்ட சாபத்தை நீக்க வேண்டுமென்று பிரார்த்தித்துநின்ற சந்திரனைநோக்கி ஈசனுரைக்கின்றார். ஹே மிருகாங்கா! தக்கன் கொடுத்தசாபம் வியர்த்தமாகாதாகையால் அச்சாபத்தை பதினைந்துதினம் அனுபவித்து அதன்பிறகு பதினைந்துதினமும்நாளுக்குநாள் கிரமமாக விருத்தியடைவதுந்தவிர உலகிலுள்ள பிராணிகள் அனைவர்கட்கும் சந்தோஷமுண்டாக்கக் கூடியவனாயிருக்கக்கடவையென்று திருவாய்மலர்ந்தருளிய சூலபாணியைநோக்கி என் தேகத்துக்கு வைத்தியம் செய்தருளிய நீர் இனி வைத்தியநாதரென்று பெயரடைய வேண்டுமென்றுவேண்ட, அங்ஙனமேயாகுகவென்றனுக்கிரகித்து இலிங்கத்துள் மறைந்தனர்.

§ க்ஷயம் = குன்றுதல் = வளர்பிறை தேய்பிறையென்பதாம்.

இவ்வத்தியாயத்திற்கூறியுள்ள சந்திரன்பூசைசெய்து தன் சாபத்தைத்தீர்த்துக்கொண்ட சரித்திரத்தையும், வச்சிரத்தூணேசருக்கு வைத்தியநாதரென்று பெயர்வந்தவிபரத்தையும், படித்தவர்களும், கேட்டவர்களும், அதனைப்பிறர்பாலெடுத்துச்சொன்னவர்களும், இந்தபுராணத்தை வீட்டில்வைத்துத்தினந்தோறும்பூசித்தவர்களும், இம்மையில் சகலசுகங்களையும் பெறுவதுந்தவிர மகாரோகங்களிலிருந்தும் விடுபட்டவர்களாய் மறுமையில் மோக்ஷமடைவார்கள்.

பத்தாம் அத்தியாயம்

முற்றிற்று.

# பதினோராம் அத்தியாயம்.

——):O:(——

## சூரியன் பூசனைச் சருக்கம்.

கேளுங்கள் முனிபுங்கவர்களே! சூரியபகவானானவர் பூமியிலுள்ள ஜனங்களெல்லாம் தன்னை நமஸ்கரித்து அவரவர்களின் பாபத்தைத் தீர்த்துக்கொள்வதனால் அப்பாபமானது தன்னைச் சாரவே அதனால் வருத்தமுற்று நாரதரையணுகி அவருரைத்த வண்ணம் வச்சிரத்தூணரைப்பூசித்து தன்பாவத்தை தீர்த்துக் கொண்டதை உங்கள்பாலுரைக்கிறேன் என்று சூதமகாமுனிவர் பின்வருமாறு சொல்லத்தொடங்கினர்.

முற்காலத்தில் அதிதிபுத்திரனாகிய சூரியபகவான் ஆகாயமண்டலத்தில் சஞ்சரித்துக்கொண்டு சகல அண்டத்திலும் பிரகாசமாய் விளங்கியும், முனிவர்களும் மற்றுமுள்ள பெரியோர்களும் பாபிகளைப்பார்க்கும்பொழுது அப்பாபிகளின் பாபமானது தன்னைச்சாராது சூரியனைப்பார்த்து அப்பாபத்தைதீர்த்துக்கொள்வதால் அச்சூரியனுக்கு நாளுக்குநாள் பாபமானது சேர்ந்து தன் கதிகுறைந்து மந்தகதியையடைய மனதில் அதிக துக்கமுற்று ஆலோசித்து நமக்குச்சேர்ந்திருக்கும் பாபத்தை நீக்கிக்கொள்ள உமாமகேஸ்வரரான பரமசிவனைப் பூசித்தாலன்றி இப்பாபத்தாலுண்டான மந்தநடையை தீர்த்துக்கொள்ளக்கூடாதென்றுணர்ந்து பூமியிலுள்ள பல சிவஸ்தலங்களிலுஞ்சென்று புண்யதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தும், மகா லிங்கங்களைப் பூசித்தும், தனக்கு நேர்ந்திருக்கும் மந்தநடை ஒழியாமையைக்கண்டு மனதிற் கிலேசமுற்றிருக்குந்தருணத்தில் ஓர்நாள் நாரதமகாமுனிவரானவர் சூரியனிடம்வந்து ஹே அர்க்கமூர்த்தியே! நீர் முகவாட்டத்தோடிருக்குங்காரணமியாது? அவ்வாறிருக்க உமக்கு யேற்பட்ட தொந்தரை யென்ன? என்றுவினவிய பிரமபுத்திரரைநோக்கி ஹே மகாமுனியே யென்னென்றுரைப்பது போதனர்களும் மற்றுமுள்ள சிவ

போகினும் பாபிகளைப் பார்த்தமாத்திரத்தில் அவர்கள்பாபம் தம்மையணுகாதிருக்க என்னை வட்டமாய்ப்பார்ப்பது வழக்கமாயிருக்கிறதால் அப்பாபமானது என்னைச் சூழ்ந்து கொண்டுள்ள வெகு மலைகடலைப்போல் மகத்தான மயக்கமடைந்தேன். ஆகையால் அதைத் தீர்த்துக்கொள்ளும் பொருட்டு பல புண்யதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்தும், பலசிவக்ஷேத்திரங்களைப்பூசித்தும் வருகிறேன் அப்படிப் பூசித்தும் எனக்குச்சார்ந்த பாபமானது நீங்கவில்லை ஆகையால் இனி செய்வதியாதென்று மனத்துள் ஆலோசித்த வண்ணம் விசாரப்பட்டுக்கொண்டிருக்கிறேனென்றுரைத்த மொழிகளைக்கேட்ட நாரதமகாமுனிவர் சூரியனைநோக்கி ஓ பகலவனே! நீர் இதுவரையில் அநேக தீர்த்தங்களில் முழுகியும், க்ஷேத்திரங்களைத் தரிசித்தும் பயன்படவில்லை யாயினும் நாம் சொல்லும் க்ஷேத்திரத்தையடைந்து சிவதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, பகவானை அர்ச்சிப்பீராகில் உமது பாபமானது நீங்கி எப்போதும் போல் சுகத்திருக்கக்கடவீரென்று பின்னுஞ் சொல்லுவாரானார்.

கேளும் மார்த்தாண்டனே! இப்பூமியிலுள்ள சிவக்ஷேத்திரங்களில் மிகமேன்மை தங்கினதும், இலிங்கங்களெல்லாவற்றிலும் தேஜோமயமானதும், தீர்த்தங்களெல்லாவற்றிலும் பரிசுத்தம்பொருந்தியதும் காவிரியின் வடகரையிலமைந்துள்ளதுமான திருமழுவாடியென்னும் ஓர் திவ்ய க்ஷேத்திரமுண்டு. அக்க்ஷேத்திரத்தின் மகிமையை ஆதிசேடனாம் வர்ணித்து வர்ணித்து நாவிருபிளவாகியும் முற்றும் வர்ணிக்கக்கூடாது இன்னும் தன்னிருபீராயிரநாவை நீட்டி நீட்டி வர்ணிக்கிறானென்றால் என்னால் முடியுமன்று அதனால் அத்தலத்திற்சென்று சிவகெங்கையில் ஸ்நானஞ்செய்து சுந்தரவிநாயகரையும், வச்சிரத்தம்பேசரையும், சுந்தரநாயகியையும், வாழார்ந்த கன்னியையும் பூசித்து வருவீரேல் உம்மனோரதம் பூர்த்தியாகுமென்றுரைத்து விடைபெற்றுக்கொண்டு சென்றனர்.



இவ்வண்ணமாயுரைத்த நாரதர் மொழிகளைக்கேட்ட இரவியும் நடுக்கடலில் கப்பலுடைந்து, தண்ணீரில் விழுந்து தத்தளிப்பவனுக்கோர் மரக்கலங் கிட்டியதுபோல் மஹா சந்தோஷமுற்றவனாய் காவிரியின் வடகரையிலுள்ள திருமழுவாடியையடைந்து அங்குள்ள திவ்யதீர்த்தமாகிய சிவகங்கையில்மூழ்கி சுந்தரவிநாயகரையும் வச்சிரத்தம்பேசர், சுந்தரநாயகி, வாழார்த்தகன்னி இவர்களை விதிபூர்வமாக சகல அபிஷேக திரவியங்களோடு அபிஷேகித்து, வாசனைபொருந்திய சந்தனங்களையும், குங்குமங்களையும் பூ தேவலோக மலர்களால் அலங்கரித்து சகஸ்திர நாமங்களால் அர்ச்சித்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து தோத்திரஞ்செய்துநின்ற பரிபக்குவமாகிய சூரியன் முன்வச்சிரத்தாணிலிருந்து பசுபதியானவர் பிரத்தியக்ஷமாகி ஓ திவாகரா! உன் பூசையால் அகமகிழ்ந்தோம் உனக்குண்டான பாபங்களெல்லாம் ஒழிந்தன, உனக்கு எப்போதும்போலவே சீக்கிரகதியுண்டாகுக, பின்னும் எப்பொழுதும் எப்பேர்ப்பட்டபாபங்கள் உன்னையணுகமாட்டா. நீயே புண்ணியமூர்த்தியென்று உன்னை சகலரும் துதிக்கட்டும், நவசகல கிரகங்களுக்குந் தலைவனாயிருக்க வரந்தந்தேன். இனி சர்வ கர்மங்களுக்கும் சாக்ஷியாயிருப்பாய். உன்னிருப்பிடம் போய்ச்சேருவாயாகவென்று ஆக்ஞாபித்து வச்சிரத்தம்பத்திலுள்ளே மறைந்தனர். அன்று தொடங்கி தன் இரதமானது முன்னிலும் அதிவேகமாக சென்று வருகிறது.

கேளீர் முனிவர்களே! இவ்விதம் சூரியனுற் பூசைசெய்து தன் பாபங்களைப் போக்கடித்துக்கொண்ட சரித்திரமாகிய இவ்வத்தியாயத்தை புஸ்தக ரூபமாய் வீட்டில்வைத்து தினஞ்சோறும் பூசிப்பவர்கட்கு எவ்வித ரோகமுமணுகாது இவ்வத்தியாயத்தின் கதையைப் படிப்பவர்களும், கேட்டவர்களும், அதனை பிறர்பாற் சொன்னவர்களும், சகல சுகங்களையும்பெற்று அந்தியத்தில் மோட்சமடைவார்கள்.

பதினோராம் அத்தியாயம் முற்றும்.

# பன்னிரண்டாம் அத்தியாயம்.

## சங்கர நாராயணர் உற்பவச் சருக்கம்.

கேட்டோர்களே முனிபுங்கவர்களே! திருமழுவாடி ஸ்தலத்திலுள்ள வச்சிரத்தம்பேசுரைத் திருமால்பூசைசெய்த விவரத்தைச் சாங்கோபாங்கமாய் உங்களுக்குரைக்கிறேன். அதை நீங்கள் ஏகமனதாயிருந்து கேட்பீர்களாகவென்று சூதமுனிவர் சொல்லலுற்றார்.

முன்னொருகாலத்தில் முகில்வண்ணன் பாற்கடலின் ஸ்வேதத்வீபத்தின் மத்தியில் ஆதிசேஷனென்னும் படுக்கையின்மீது யோகநித்திரையிலிருந்து எழுந்திருக்குங்கால் அருகிலிருந்து பாதங்களைப்பிடித்துக்கொண்டு உபசாரஞ் செய்துகொண்டிருந்த இலக்ஷ்மிதேவியைநோக்கி ஏதோ மறதியினால் பெயர்மாறி ஹே பூமியே! யென்றழைத்தவுடனே இலக்ஷ்மி மிகுந்த பொறாமையால், கடுங்கோபங்கொண்டு கண்களிரண்டுஞ்சிவக்க, உதடு துடிக்க, புருவத்தை நெறித்துக்கொண்டு கம்பிய குரலுடன் பரந்தாமனை நோக்கி ஹே கமலக்கண்ணரே! உமது வஞ்சனையை கண்டுணர்ந்தேன், உமக்குப்பூமியின் மீதே பக்ஷமதிகமென்பது யானறிவேன், அப்படிக்கு தங்கள் பக்ஷத்தோடு பூமியுடன் சுகித்திருப்பதற்கிடையூறாக நான் இங்கிருப்பது ந்யாயமல்லவென்று, படுக்கையைவிட்டெழுந்து அப்புறஞ்செல்ல, வனமாலியும் ஹே இலக்ஷ்மீ! நித்திரையின் மயக்கத்தால் பெயர் மாறியழைத்தேனேயொழிய உண்மையாக அப்பூமியின்மீது பக்ஷமெனக்கில்லை, யென்று பலவாறாக சமாதானப்படுத்தியும் கேளாதிருந்ததால் அவ்விடமிருந்த அரம்பை, ஊர்வசி, முதலிய தேவமாதர்கள், இலக்ஷ்மியின் பாதமலர்களை வணங்கி அன்னையே! தாங்களிப்படி கோபிப்பது சரியல்ல, நாராயணருக்குத் தங்கள்மீதே அதிகவிருப்பமென்பதற்கையமில்லை; எவ்வளவோ அன்புடன் ஒருவரையொருவர் பிரி



யாதிருந்தும் இப்பொழுது உபேந்திரனைவிட்டுப்பிரிவது சரியல்ல, என்று பலவாறு சமாதானப்படுத்தியும் கேளாது, மென்மேலும் கோபம் மீறி, என் நாதன் என் மீதே மிகுந்த விருப்பங்கொண்டிருக்கும்படி அருந்தவம்புரிந்து வசமாக்கிக்கொள்ளுகிறேனென்று கூறி புறப்பட்டு அநேக சிவஸ்தலங்களையுமடைந்து, ஒவ்வொரு ஸ்தலத்திலுமுள்ள தீர்த்தங்களில் மூழ்கியும், மூர்த்திகளை தரிசித்தும், அர்ச்சித்தும், வணங்கியும், பயன்படாமையால்கடைசியாய் *திருத்தவத்துறையென்னும் தலத்தையடைந்து தன் மனோரதம் நிறைவேறுவதின் பொருட்டாய்த்தவஞ் செய்துகொண்டிருந்தனள்.

இவ்வாறு தன்னைப்பிரிந்த இலக்ஷ்மியின் விரகதாபத்தால் மனந்தளர்ந்து, உடல்மெலிந்து, மெய்சோர்ந்து, வருத்தமுற்றிருக்குந்தருவாயில், மென்காற்று வீசுதலாலும், கிளிகள் சப்திப்பதாலும், குயில்கள் கூவுவதாலும், வண்டுகள் ரீங்காரஞ்செய்வதாலும், சமுத்திரம் இரைதலாலும், நிலவின்குளிர்ச்சியினாலும், மனந்தளர்ந்து கஷ்டப்பட்டுக்கொண்டிருக்குஞ் சமயத்தில் மன்மதன் தன் கருப்புவில்லில் வண்டு நாணைப்பூட்டி, தாமரை, மாப்பூ, அசோகு, முல்லை, ஆகிய மலர் பாணங்களையெய்ய மயக்கமுற்று அங்கமெலாம் நொந்து, தான் நோக்குமிடங்களெல்லாம் இலக்ஷ்மியாக வேதோற்ற காமநோய் மிகுதியால் மனத்துள் ஆலோசிக்கலாயினார். என்னிடத்தன்பு மிகுந்த இலக்ஷ்மி யென்பக்கத்திலிருக்கவென் பூமியின் பெயரைப்புகன்றேன்? அந்த இலக்ஷ்மி யென்னுடன் கோபித்துக்கொண்டு என்னைவிட்டகன்றனளே! என்றுபலவாறாய்ச்சிந்தித்து, அவள் ஞாபகமேயதிகமாகி, ஒருவாறு மனத்துள்ளே தேற்றிக்கொண்டு நம்மிடங் கோபங்கொண்டு சென்ற இக்கமலை நம்மினுமுயர்ந்த எந்த தெய்வத்தைக்குறித்துத்தவஞ் செய்வாள். ஈசனொருவனன்றோ! அத்தவத்திற்கிறங்கி வரங்கொடுப்பவர். அவ்வீசனும் நாமும்வேறன்றே! அவரைக்குறித்துத்தவஞ்செய்யவன்றோ சென்றிருக்கின்றனள். எங்களிருவருக்கும்பேத

*திருத்தவத்துறை = லாலகுடி.

பிக்கை யென்பதை இவள் உணர்ந்திலளோ! எங்களிருவருக்கும் பேதமுண்டென்று நினைப்பவர்கள் மகா பாதகர்களாய்க் கொள்ளாகி அழியாத நரகத்தை யடைவார்களென்று புராணங்கள் முறையிடுகின்றனவே! இந்த நிலைமையிலும், மற்றுமுண்டான பூவுலகவாசிகளாகிய ஜனங்களுக்கும் எங்களிருவருக்கும் பேதமில்லை யென்பதை யுணர்த்தவேண்டியோர் தவள், அச்சிவபிரானது தேகத்தின் பாதியை யென்னு தேகத்தின் பாதியுடன் பொருத்தி இருசரீரமும் ஒன்றேயென்பதை உலகத்தோர்க்குணர்த்துகிறேனென்று நிர்மாணித்துக்கொண்டு தன் பிரிய சுந்தரியாகிய இலக்ஷ்மியையும், பரமசிவம் சரீரத்தின் பாதியையும் ஒரே காலத்தில் அடையவெண்ணி நாராயணன் [illegible] யென்னுந் தலத்தையடைந்தனர்.

அதன்பின்னர் அத்தலத்திலுள்ள சிவகங்கை யென்னும் புண்ய தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து வச்சிரதரேசுவரரை பூசித்துக்கொண்டு தன் மனோரதம் நிறைவேறுவதற்காக அநேகவருடகாலம் காத்திருந்தனர். ஒருநாள் பரமசிவனும் சுந்தரநாயகி யென்னும் தேவியுடன் விருஷபத்தின்மீதேறி நாராயணன் முன்னிலையில் பிரசன்னமாகி நிற்க மாதவன் ஆனந்த பரவசனாகி கண்களிலானந்தக் கண்ணீர் ததும்ப உடலெங்கும் புளகிக்க வலம்வந்து நமஸ்கரித்து வைத்தியநாதாஷ்டகமென்னும் எட்டு சுலோகங்களால் துதித்து நிற்க வஜ்ரதரேசுவரரான பகவான் ஹே லக்ஷ்மிகாந்தா! உனது பூசையால் அளவற்ற ஆனந்தங்கொண்டேன் உன் மனோரதமெதுவாயினும் பூர்த்திசெய்கிறேன் என்று கூறுகிற்க மதுசூதனனும் ஹே பகவானே! தாங்கள் பிரசன்னமாகி செய்யும் அனுக்கிரகத்தைக்காட்டிலும் மேலான மனோரதம் யாதுளது ஆயினும் இச்சமயம் எனக்கு இரண்டு வரங்கள் தந்தருளவேண்டும். அதாயாதெனில் தங்களுக்குமெனக்கும் பேதமில்லாதிருந்தும் மூர்த்திபேதத்தால் சிலர் பேதமுண்டென்று நினைக்கிறார்களாகையால் நாமிருவரும் ஒன்றேயென்பதை உலகோர் அறியும்படி தங்கள் தேகத்தின் பாதியை யெனக்குக்கொடுத்தருள்வீரென்றதைக்கேட்ட பரமசிவன் புன்சிரிப்புடன் தன் சரீரத்தின் வலது பாதியை தந்தருளி ஹே விஷ்ணுவே! இனி இச்சரீரமிரண்டும் ஒன்றாகிய மூர்த்தியை சங்கரநாராயணரென்று உலகத்தோர் கூறட்டும். இச்சங்கரநாராயண ரூபமாகிய நாமிருவரும் இத்தலத்தினின்றும் ஆக்கினேய பாகத்தில் ஆறேகால் குரோச (பத்து மயில்) தூரத்திலுள்ள தஞ்சைபுரியில் இங்கு நமது சன்னிதியிலுள்ள சிவகங்கையைப்போல் பரிசுத்தமான சிவகங்கையென்னும் தீர்த்தக்கரையில் யிடைவிடாது சான்னித்தியம் பெற்றிருப்போம். அத்தலத்தில் சங்கரநாராயண மூர்த்தியாகிய நம்மைத்துதிப்பவர்கள் மகாபாதகங்களினின்றும் விமுக்தராகி இம்மையில் புத்திர மித்திர களத்திராதி சகல வைபவங்களையும் பெற்று மறுமையில் [illegible]ஜ்யும் பெறுவார்கள். என்று திருவாய்மலர்ந்தருளி பின்னும் ஹே கேசவா! உனது மற்றொரு வரம் யாதென்று வினவிய பகவானை நோக்கி கோவிந்தன் எனது பிரிய நாயகியாகிய லக்ஷ்மி பிரணய கோபத்தால் என்னைப்பிரிந்து திருத்தவத்துறையில் தங்களைக்குறித்துத் தவஞ்செய்கிறபடியால் இனி என்னைவிட்டு பிரியாமல் என்மார்பிலேயே யிருக்க அனுக்கிரகிக்கவேண்டும் என்று தனதிரண்டாவது வரத்தையும் கோரி நின்ற முகுந்தனை நோக்கி ஸ்ரீ சங்கரன் அந்த லக்ஷ்மியும் உன்னைவிட்டுப் பிரியாதிருத்தல் வேண்டுமென்றே தவஞ்செய்வது உண்மையே, அவளை இப்பொழுதே யிங்கு வரவழைக்கின்றேன். என்று கூறி முடிவதற்கு முன்னமே அவ்விடம் வந்து பரமசிவனையும் தனதுபதியையும் சுந்தரநாயகியையும் அடிபணிந்து வணங்கி நின்ற லக்ஷ்மியை நோக்கி பினாகபாணி உரைக்கின்றனர்.



ஹே ஸ்ரீதேவி உன் நாயகனாகிய முகில்வண்ணன் நீயென்றும் தன்னைவிட்டு நீங்காதிருக்கவேண்டி இத்தலத்தில் என்னைப் பூசித்துவந்தனர். நீயும் அவ்வாறே தவஞ்செய்தாயாதலின் இனி யவர் மார்பிலேயே எப்பொழுதும் வசிப்பாயாக என்று கூறி திரும்

பவும் தாமோதரனை நோக்கி உனது வாயிரண்டையும் கொடுத்தருளினேன். மார்பை விட்டகலாத இலக்குமியுடன் வைகுண்டஞ்சென்று சுகமே வாழ்வீர்களாக என்றநுக்கிரகித்து வச்சிர லிங்கத்துட் பிரவேசித்தனர்.

கேளுங்கள் தபோதனர்களே அது முதல் விஷ்ணுவுக்கு சக்கரநாராயணனென்றும், பாற்பிறந்த இலக்குமியையுடையவனென்றும், பெயர் வாய்ந்தது. இவ்வத்தியாயத்திலுள்ள விஷ்ணுவின் பூஜையையும், சங்கரனாருடைய மகிமையையும் படித்தவர்களும், கேட்டவர்களும், அதனைப் பிறர்பால் எடுத்துச் சொன்னவர்களும் இம்மையில் சகல போகங்களையும் பெற்று மறுமையில் மோக்ஷ சாம்ராஜ்ஜியத்தை யடைவார்கள்.

பன்னிரண்டாம் அத்தியாயம்.

முற்றிற்று.

## பதின்மூன்றாம் அத்தியாயம்.

### அக்கினிப் பூஜைச் சருக்கம்.

கேளுங்கள் தவமுனிவர்களே! வச்சிரலிங்கத்தை அக்கினி பகவான் பூசித்து அப்பூசையால் தன்சாபத்தை நிவர்த்தி செய்துக் கொண்ட சரிதையை உங்களுக்குரைக்கிறேன் என்று சூதபுராணிகர் சொல்லத் தொடங்கினார்.

சில காலங்களுக்கு முன்பாக பரத்வாசரென்னும் மகாமுனிவருக்கு பத்திரையென்னும் ஓர் புத்திரியிருந்தாள். இவள் சர்வ லக்ஷணத்தோடுங்கூடி நாளுக்குநாள் யௌவனத்தை யடையும் வண்ணம் விருத்தியாகிவரும் நாளில், மூகனென்னும் ஓர் அசுரனானவன் பரத்வாசரிடம் வந்து இவரை வணங்கித் தோத்தரித்து தங்கள் பாலுற்ற பத்திரையென்னும் கன்னிகையை எனக்குக் கலியாணஞ் செய்து கொடுத்தருள வேண்டுமென்று வேண்ட மகரிஷியானவர் தன் மனதுக்குள் யோசித்தவராய் இவனோ அசுரஜாதியையுடையவன், கன்னிகையோ மனுஷஜாதியையுடையவள் ஆகையால் அசுரருக்கும் மனுஷருக்கும் பொருந்தாதாகையாலும், கன்னிகைமிக்க சுகுமார சரீரத்தையுடைத்தானவளாதலாலும், இந்த முரடனான அசுரனுக்கு இந்தக்கன்னிகையை விவாகஞ் செய்து கொடுப்பது தகுதியற்றதென்று தீர்மானித்து, அசுரனைப்பார்த்து ஓ அரக்கனே! உனக்கு இந்தக் கன்னிகையை கொடுக்கமாட்டோம் நாம் இந்தக் கன்னிகையை மிகுந்த அன்போடு வளர்த்து வருவதால் உனக்குக் கொடுக்க இஷ்டமில்லையென்று சொன்னதைக் கேட்ட அசுரன் ஆனால் சரியென்று தன்னிருப்பிடத்தை நோக்கிச்சென்றான். அதன்பிறகு பரத்வாசமுனிசிரேஷ்டரானவர் தனக்குக் கல்யாணமில்லாமல் பிரமசாரியாயிருப்பதினால் அநேக காரியங்களுக்கிடையூறாயிருக்குமென்றெண்ணி பரத்துவாச முனிவரிடம்

வந்து கன்னிகையை யாசிக்க இவ்விருவர்களின் குணத்தையும் நோக்கி யிருவருக்கொருவர் சமானமாயுள்ளவர்களென்று மனதின் நிர்மாணித்து பத்திரையை பார்க்கவ முனிவருக்கு அக்கினி சாக்ஷியாய் கன்னிகாதானஞ்செய்து கொடுத்தனர்.

இவ்வாறு கன்னிகாதானம்பெற்ற பார்க்கவ முனிவரானவர் தனதுபர்ணசாலையையடைந்து அக்கினிஹோத்ரம், ஔபாசனம், தேவபூஜை, பிதுர்பூஜை, முதலியவைகளைச்செய்து சந்தோஷமாய் இல்லறம் நடாத்திவரும் நாளையில் பத்திரை கர்ப்பவதியாகி நாளுக்குநாள் கர்ப்பம் வளர்ந்தோங்கிய சந்திரனைப்போல் விர்த்தியடைந்துவரும்பொழுது பார்க்கவமுனி தனதில்லத்திலில்லாத சமயம்பார்த்து முன்னமே கல்யாணஞ்செய்துகொள்ள விரும்பிய மூகாசுரன் இவளிடம்வந்து ஓ பத்திரையே! நீ சிறுவயதாயிருந்த பொழுதே உன்னை அக்கினி சாக்ஷியாய் விவாகஞ் செய்தேன் அதன்பிறகு பத்திராசர் எனக்குக் கொடுக்கமாட்டேனென்று சொல்லி பார்க்கவமுனிவருக்கு விவாகஞ்செய்துகொடுத்துவிட்டனர். ஆகையால் நான் உன்னை முதலில் விவாகஞ்செய்துகொண்டவனாகையால் நீ யென்னுடன் கூட வரவேண்டும், அது பொய்யென்பதற்கு உன் புருஷன் அக்கினிஹோத்திரசாலையிலுள்ள அக்கினியைக் கேட்டுக்கொள்ளென்று சொல்ல அக்கினியோ ஒன்றும்பேசாது மௌனமாயிருக்கக்கண்ட அசுரன் அக்கினி சாக்ஷி சொல்லமாட்டானென்றுணர்ந்து வெளியில்வந்து பார்க்கவரைப்போல வேடம்பூண்டு பத்திரையின்சமீபமனுக அந்தப்பத்திரை இந்த ஆளையறிந்துகொண்டு அப்புறம்போக யெத்தனிக்க உடனே அவளைப் பலவந்தமாய்த் தூக்கிக்கொண்டு ஆகாயமார்க்கமாய்ப் போய்க்கொண்டிருக்கும்சமயத்தில் பத்திரை பூரண கர்ப்பவதியாகையாலும், அவள் மிகுந்தபயமும், நடுக்கமும் கொண்டமையாலும், வயிற்றிலுள்ள சிசு நழுவி பூமியில்விழுந்தது. அப்படி விழுந்ததினால் அச்சிசுவுக்கு சியவனரென்னும் காரணப்பெயர் வாய்த்தது. இந்த * சியவனரென்னும் குழந்தைக்குத்தன் தந்தையின் தவப்பலன்

* சியவனம்=நழுவுதல்.



கூடியிருந்தபடியால் அக்குழந்தையினின்று மெழுந்த தபோவாக்கினியானது பத்திரையை யெடுத்துப்போகும் மூகாசுரனை யெரித்துவிட்டது. இதன்பின்னர் பத்திரையானவள் பூமியில் விழப்பட்டு தன்பயமும், மயக்கமும் தீர்ந்து தன் குழந்தையைத் தூக்கிக்கொண்டு இல்லம்வந்தடைந்து தன்பதியைச் சுற்றிவந்து நமஸ்கரித்து நடந்த விர்த்தாந்தங்களைத் தாம் சவிஸ்தாரமாய்ச் சொல்ல அவரும் மிக்கக்கோபங்கொண்டு அக்கினியைநோக்கி நீ ஒன்றும் பேசாது மௌனமாயிருந்ததுமன்றி பத்திரையை யெடுத்துக்கொண்டுபோகும்பொழுது பார்த்துக்கொண்டு சும்மாயிருந்தபடியால் நீ சர்வபக்ஷணனுய்ப் போகக் கடவையென்று சபிக்க அக்கினி மிகுந்த துயரத்திலாழ்ந்து ஓ மகரிஷியே! நான் தங்களால் கொடுக்கப்பெற்ற உத்தமமான நெய், பால் முதலியவைகளை வெகுநாளாய்ப் புசித்துக்கொண்டிருந்தும் அறியாமையால் செய்த இச் சிறு குற்றத்திற்காக இவ்வாறு பெருஞ்சாபம் தந்தருளினீர். நானிதனை எவ்வாறு ஏற்றுக்கொள்வேன். ஆகையால் தாங்கள் என்மீது கருணைகூர்ந்து பிரதிசாபமளிக்க வேண்டுகிறேனென்று பலவாறுப் யிரஞ்சுகின்ற அக்கினியைநோக்கி ஹே அக்கினியே! ஆனால் உனக்கு பிரதிசாபமளிப்போமென்று பார்க்கவமுனிவர் சொல்லத் துடங்கினர்.

சோழமண்டலத்தின் வட கரையில் மகா உத்கிருஷ்டம் பொருந்தியதும், * சர்வபாவங்களையும் பரிகரிக்கக்கூடியதுமான திருமழுவாடியென்னும் தலத்தையடைந்து வச்சிரலிங்கேசரைப் பூசித்தால் அவர் உன் சாபத்தை தீர்த்தருளுவாரென்று சொல்லக்கேட்டுவணங்கி வுத்திரவுபெற்றுக்கொண்டு திருமழுவாடியையடைந்து சிவகங்கையில் தோய்ந்து பகவானை வேதோக்தமான மந்திரங்களைச்சொல்லி, விதிப்படிசகலவபிஷேகதிரவியங்களோடு அபிஷேகித்து, வஸ்திரபூஷணுலங்காரஞ்செய்து சந்தனம், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, பச்சைகற்பூரம், புனுகு, ஜவ்வாது முதலிய வாசனை திரவியங்களையும் பூசி, பாரிஜாதம், பன்னீர்

அரளி, மந்தாரை, சண்பகம், விச்சி, கொன்றை, குருவேர், செவ்வந்தி, மல்லிகை, முல்லை, இருவாக்ஷி, ரோஜா, தாமரை, நீலோற்பலம், முதலிய புஷ்பங்களாலும், மரு, கொழுந்து, வில்வம், கதிர்ப்பச்சை, மாசிப்பச்சை, முதலிய பத்திரங்களாலும் அலங்கரித்து, சகஸ்திரநாமங்களாலர்ச்சித்து ஷட்ரசங்களோடுங்கூடிய உண்டிகளையும், அநேக பழவகைகளையும் நைவேதித்து, தூப, தீபங்கொடுத்து, சோடசோபசாரங்களினையும் செய்து, வைத்தியநாதப்ரசாதத்தால் அசித்து, எழுமுறைவலம்வந்து நமஸ்கரித்து நிற்கையில் பகவான் வைத்தியநாதரும் அக்கினியைநோக்கி ஹே அக்கினியே! உன்பூசையால் சந்தோஷித்தோமாகையால் உனக்கு நேர்ந்திருக்கிற சாபமானது நீங்குவதுந்தவிர, தேவர்கள் உன்முகமாகவே ஹவிர்பாகம் பெறும்படி நேரும்; அதற்கடையாளமாய் சுவாஹாகார, ஸ்வதாகாரங்களை நீ பத்தினியாக அடைந்து வாழக்கடவையென்று வரமருளி இலிங்கத்துள் மறைந்தனர்.

ஓ மாதவத்தையுடைய முனிவர்களே! இவ்வத்தியாயத்திற் கூறப்பட்டுள்ள அக்கினிபகவான் பூசித்தவிஷயத்தை படித்தவர்களும், கேட்டவர்களும், அதனைப் பிறர்பால்லெடுத்துரைத்தவர்களும் இம்மையில் சகலசுகங்களையும்பெற்று மறுமையில் மோக்ஷமடைவார்களென்பதும் நிச்சயம்.

பதின்மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

—:o:—

# பதிநான்காம் அத்தியாயம்.

## துர்க்கைப்பூசனைச்சருக்கம்.

கேட்பீர்களோ ஞானமுணர்ந்த முனிவர்களே! இவ்வசிரஸ்தம்பேசுவரர் அநுக்கிரகத்தால் துர்க்காதேவியும் அசுரர்களை சம்மரித்ததாலுண்டாகிய குரோதத்தையும், அவர்கள் ரத்தக்தைபானஞ் செய்ததனாலுண்டான தோஷத்தையும், நிவர்த்தி செய்துகொண்ட சரித்திரத்தை உங்களுக்குரைக்கிறேனென்று சூதபுராணிகர் சொல்லத்தொடங்கினார்.

முற்காலத்தில் மகிஷாசுரனென்னும் ஓர் அசுரனிருந்தான். அவன் பல்லாயிர மாண்டு பிரமனைக்குறித்து தவஞ்செய்து எந்த தேவர்களாலும், யக்ஷ, சித்த, வித்தியாதரர் முதலியவர்களாலும், பிர்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகிய திரிமூர்த்திகளாலும், ஜயிக்கவொண்ணா பரிபூரண வரத்தையடைந்து சகல முனிவர்களையும், சகல தேவர்களையும், இடைவிடாது உபத்திரவித்து வருகையில் இந்திரன் முதலிய தேவர்களனைவரும் அவனோடு யுத்தஞ்செய்தும் பயன்படாதிருந்ததைக்கண்டு பரமசிவமூர்த்தியின் வாமபாகத்திலிருக்கும் பார்வதிதேவி தனது சிம்மவாகனத்தின்மீதேறி நீலநிறம் பொருந்தி, கத்தி, கதை, வில், பாணம், பரிகம், சூலம், சங்கம், சக்கிரம், இவைகளைத்தரித்த எட்டுக்கைகளும், சிங்கப்பற்களும், சிரமாலைகளும், நெருப்புப்பொறிகள் வெழாநின்ற கண்களும் தாங்கி, திவ்யயோகினி, மகாயோகினி, சித்தயோகினி, கணேஸ்வரி, ப்ரேதாசி, டாகினி, காளி, காளராத்திரி, நிசாசரி, ஹுங்காரி, ஊர்த்வவேதாளி, பிசாசி, பூதடாமரி, ஊர்த்வகேசி, விரூபாக்ஷி, சுஷ்காங்கி, நரபோஜினி, பைரவி, த்வம்சினி, க்ரோதி, துர்முகி, ப்ரேதவாஹினி, கட்வாங்கி, தீர்கலம்போஷ்டி,

மாலினி, மந்திரயோகினி, பட்காரி, வீரபத்ரேசி, தாம்ராக்ஷி, கலகப்பிரியை, கண்டகி, நாடகி, மாரீ, இயமஜாதி, கராளினி, சஹஸ்ராக்ஷி, காமலோலை, காகதம்ஷ்டிரி, அதோமுகி, கௌசிகி, மர்த்தினி, யக்ஷி, ரோமஜங்கா, பரகாமினி, ப்ராமரி, ருத்ரவேதாளி, பீஷ்கரி, திரிபுராந்தகை, காலாக்னினி, கிராமணி, சக்ரீ, கங்காளி, புவனேஸ்வரீ, தார்ஜுரு விகடா, கோரி, கபாலி, விஷலங்கினி, ராக்ஷசி, கோரரக்தாக்ஷீ, விஸ்வரூபி, பயங்கரீ, ஆகிய அறுபத்து நான்கு யோகினிகளோடு காலன், பிடாலன், காராளன், உக்கண்டன், திரிநேத்ரன், துர்முகன், துர்த்தர்ஷன், தாம்ராந்தகன், உக்கிரவீர்யன், ஆகிய நவசேனாபதிகளோடும், சாமுண்டி, வாராஹி, ஐந்திரி, கௌமாரி, வைஷ்ணவி, ப்ராம்ஹி, மாஹேஸ்வரி, வஜ்ரஹஸ்தா, ஆகிய அஷ்டமாதர்களோடும், அஸிதாங்க, ருரு, சண்ட, குரோத, உன்மத்த, கபால, பீஷண, கால என்னும் அஷ்டபைரவர்களோடும், கூடி துர்கையென்னும் பெயரைவகித்து மகிஷனென்னும் அசுரனை அவனது சைன்னியங்களுடன் சங்கரித்தனள்.

இவ்வாறு மகிஷாசுரனையும் அவனது சைன்னியங்களையும் சங்கரித்துவரும்பொழுது அசுரசேனாபதிகளுள் ஒருவனாகிய ரக்தபீஜனென்பவன் தனது தேகத்தினின்றும் பூமியில் விழுந்த ரக்தத்தின் ஒவ்வொரு துளியும் பல்லாயிரம் அசுரர்களாக விருத்தியாகும்படி வரம்பெற்றிருந்தமையால் அவன் இரத்தத்தைமுழுதும் துர்கை தானே குடிக்கும்படி நேரிட்டது. அந்த ரக்தபானத்தினால் சம்பவித்த மகாதோஷத்தையும், அசுரர்களோடு யுத்தஞ்செய்ததாலுண்டாகிய குரோதத்தினாவேசத்தையும், நிவர்த்தி செய்துகொள்ளக்கருதி தனது நாயகனாகிய பரமசிவமூர்த்தியை பிரார்த்தித்து ஹே பிராணேசா! மகிஷாசுர வதம் செய்தகாலத்தில் எனக்குச்சம்பவித்த ரக்தபான தோஷத்தையும், குரோதாவேசத்தையும், போக்குவதற்கு, ஒருபாயம் சொல்லவேண்டுமென்று விண்ணவ ஜகதீசுவரரான ஏகலைநாதன் பூமியில் விளங்காநின்ற



காவிரியின் வடகரையிலுள்ள திவ்ய சிவஸ்தலங்களில் மகாமேன்மைதங்கிய திருமழுவாடி யென்னுந் தலத்தையடைந்து அதிலுள்ள பரிசுத்தமான சிவகங்கை தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து என் மூர்த்தியாகிய வச்சிரலிங்கேசரைப்பூசித்து சிலகாலம் அந்த தலத்தில் வசித்துவருவாயானால் உனக்கு நேரிட்டிருக்கும் யிடையூறுகளனைத்தும் நீங்கிவிடுமென்று சொல்லக்கேட்ட துர்கையானவள் பூமியிலுள்ள திருமழுவாடியென்னும் திவ்யக்ஷேத்திரத்தையடைந்து சிவகங்கையில்மூழ்கி வச்சிரலிங்கேசரை விதிப்படிப் பூசித்து, அர்ச்சித்து, தோத்திரஞ்செய்து, நமஸ்கரித்துவந்தனள். இவ்வாறு துர்கையானவள் மூவாயிரவருடகாலம் பிரதிதினமும் சூர்யோதயத்திலும், மத்யானத்திலும், பிரதோஷ காலத்திலும், பூசை செய்துவரவே ஒரு நாள் அவ்வச்சிரத்துாணிலிருந்து பகவான் பிரத்தியக்ஷமாகி துர்கையை நோக்கி ஹே துர்கே! உனது பூஜைக்கு அகமகிழ்ந்தோம் நீ அசுர ரக்தபானம் செய்ததோஷத்தையும் அவனை சங்கரித்ததனாலுண்டாகிய குரோதத்தையும், நிவர்த்தித்தேன். உனக்கு இன்னும் யாது வரம்வேண்டுமென் றுரைத்த பரமசிவன் மொழிகளைக்கேட்ட துர்கையானவள் மனதில் சந்தோஷித்து வரம் கேட்பாளாயினள். ஹே லோகநாயகா! நான் மிக்க பிரயாசையுடன் தேவர்களுக்கும், ஜனங்களுக்கும், இடையூறுகளைச்செய்துகொண்டிருந்த மகிஷாசுரனை சங்கரித்தேனாகையால் தேவலோகத்தவரும், பூலோகத்தவரும், யென்னைப்பூசிக்கும்படி வரந்தர வேண்டுமென்றுரைத்த மொழிகளைக்கேட்ட பரசுபாணியானவர் ஹே துர்கே! உன்னை *ஆஸ்வீஜமாதத்தின் சுக்கிலபக்ஷ பிரதமைமுதல் தசமிபர்யந்தம் தேவர்களும், ரிஷிகளும், மற்றுமுள்ள சர்வஜனங்களும், சண்டிகை யென்ற நாமத்துடன் பூஜிப்பார்களேயாகில் அப்பூஜையால் இம்மையில் சத்துருக்களின் இடரையொழித்து, சகல சம்பத்துகளையுமடைந்து, சகல

* ஆஸ்வீஜமாசம் = புரட்டாசி மாசத்தின் அமாவாசைக்குப்பிறகு சாந்திரமானப்படி ஆஸ்வீஜமாசமெனப்பெயர்.

வித்தைகளிலும் பரிபூரணராகி மறுமையில் மோக்ஷசாம்பிராஜ்ஜியத்தையடைவார்கள் என்றுதிருவாய்மலர்ந்தருளி, இலிங்கத்தோட் பிரவேசித்துவிட்டனர். கேட்பீர்களோ முனிவர்களே! பிரசாபாணியானவர் அர்ச்சகர்களுக்கும் தக்ஷிணையுடன் போசனஞ்செய்வித்தவர்களுக்கும், ரிஷிகளுக்கும், மந்திரிகளுக்கும், நகரத்திரிகாலத்தில் சண்டிகைளைப் பூசிக்கவேண்டியசகலமுமாமென்று சூதபுராணிகர் சொல்லிமுடித்து பின்னும் சொல்லாராயினர். ஹே முனிபுங்கவர்களே!

இவ்வத்தியாயத்திற் கூறியுள்ள வச்சிரலிங்கேசுரரை சண்டிகையாயினர்களைபூசித்துவரம்பெற்றதைப்படித்தவர்களும், கேட்டவர்களும், பிறரைக்கேட்கும்படி செய்பவர்களும், இகத்தில் சகல வித்தைகளையும், சத்துருஜெயத்தையும் சகலசம்பத்துக்களையும், பெற்று மறுமையில் மோக்ஷமடைவார்கள்.

## பதினான்காம் அத்தியாயம்.

முற்றிற்று.

## பதினைந்தாம் அத்தியாயம்.

):o:(

### பத்ரகாளி பூசனைச் சருக்கம்.

ஹே முனிவர்களே! கேட்பீர்களாக வச்சிரலிங்கேசுரரைப் பத்ரகாளி பூசைசெய்துத் தன் அகந்தையையொழித்துக்கொண்ட கதையினை உங்களபால் உரைக்கிறேன் அதனையிருந்த ஆதரவுடன் கேளுங்கள் என்று சூதமுனிவர் சொல்லத்தொடங்குகின்றார்.

முன்னொருகாலத்தில் ஆதிசக்தியாகிய மகாகாளி மஹேசுவரருடன் விளையாடிவருகையில் அம்மையானவள் ஹே நாதா! நர்த்தனஞ்செய்வதில் எனக்கிணையானவரியாவது, புருஷனாவது மூவுலகத்திலுமில்லையல்லவா? என்று தற்புகழ்ச்சி செய்துரைத்த பத்ரகாளியின் மொழிகளைக்கேட்ட மஹேசுவரர் புன்சிரிப்புடனே பெருமாபத்தியையசைத்து இவளது கர்வத்தை அடக்கவேண்டுமென்றெண்ணி ஹே காளியே! உன் கருத்தின்படி நடனஞ்செய்ய யாவராலும் கூடாது. ஆயினும் எனக்குத் தெரிந்தவரையில் கொஞ்சம் நடனஞ்செய்கிறேன். என்னை யநுசரித்து நடனஞ்செய்வாயாக என்று கூறி நடனத்தை ஆரம்பித்தனர். இவ்வாறு ஆரம்பித்த நடனம் செய்வதைநோக்கி புன்சிரிப்புடன் பத்ரகாளியானவள் இவர் என்னை ஜயிக்கப்போகின்றாரா வென்று மனதில் அகந்தை மேலிட்டுக்கொண்டவளாகி தானும் கூடவே நர்த்தனஞ்செய்தனள். இவ்வாறு ஒருவருக்கொருவர் தோற்காமல் நடனஞ்செய்ய ஆனந்தத்தாண்டவமூர்த்தியாகிய சிவன் இவளை வெல்ல தாண்டவத்தால் ஜயிப்பதென்று மனதிலாலோசித்து இவள் பெண்பால் ஆனபடியால் *தண்டபாதமென்னும்

*தண்டபாதம் = ஒரு பாதத்தை ஆகாயமார்க்கத்தை நோக்கி தண்டம் போல் நீட்டி ஆடுதல்.

நடனத்தை செய்தாலொழிய ஜயிப்பதரிதென்று யோசித்து தண்டபாதமென்னும் ஊர்த்வ நடனத்தை செய்ய வாரம்பித்தனர். இப்படி நர்த்தனஞ்செய்யவே மகாகாளியும் பெண்பாலானபடியால் ஊர்த்வ நடனஞ் செய்யக்கூடாதவளாகி நின்றனள். அதைக்கண்ட சிவபெருமான் ஹேகாளியே! நீயும் என்னைப்போல் ஊர்த்வ நடனஞ் செய்யாமல் நின்றுவிட்டபடியால் சம நடனஞ் செய்யாமல் தோற்றவளானதும் தவிர உனக்கு அகந்தை மேலிட்டு பதியென்றெண்ணாமல் விருமாப்படைந்தமையால் பதியினிடத்தில் அகந்தையை காட்டின தோஷத்திற்குட்படுவாயென்று சொன்ன மொழிகளைக்கேட்ட காளியானவள் மனதிற்றுக்கமடைந்தவளாய் ஹே நாதா! நான் அறியாமையால் செய்த விஷயத்திற்காக கோபங்கொண்டு தோஷமடையும்படி தங்கள் வாக்கினாற் சொன்னமையால் அத்தோஷமானது தீரும் உபாயத்தையுந் தாங்களே சொல்லியருளவேண்டுமென்று பலவாறாகத் துதிக்கக்கேட்ட பரமசிவன் வாராய் காளியே நீ பூமியில் காவிரியின் வடகரையிலுள்ள மகாபாபங்களையும் போக்கடிக்கக்கூடியதுமான திவ்யஸ்தலமாகிய தாலவனமென்றும், திருமழுவாடியென்றும், சொல்லப்பட்ட க்ஷேத்திரத்தையடைந்து சிவகங்கை தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து என்னைப்பூசித்துவருவாயானால் உன்தோஷம் நீங்கும் இல்லாவிட்டால் தீராதென்றுரைத்த பகவான் மொழிகளைக்கேட்டுச்சந்தோஷமடைந்து காளி மழுவாடியையடைந்து சிவகங்கையில் மூழ்கி விதிப்படிப்பூசித்து அர்ச்சித்துவருகையில் பரமசிவன் பிரதியக்ஷராகி ஹேகாளி! உன் பூசைக்குமெச்சினேன்! உன் தோஷமெல்லாந்தீர்ந்தது நீ பரிசுத்தமானாயென்று சொல்லி இலிங்கத்தில் மறைந்தனர். இவ்வாறு கடவுள் வரமளித்து மறைந்த பிறகு காளிதேவி பின்னும் சிலநாள் ஆங்குவாசஞ்செய்து கடவுளைப்பூசித்துக்கொண்டிருந்துதன் இருப்பிடஞ்சேர்ந்தனள்.

இவ்வத்தியாயத்திற் சொல்லிய பத்ரகாளியாற் செய்யப்பட்ட ஈஸ்வர பூசையை படித்தவர்களும், கேட்டவர்களும், பிறர்பாலெ



டுத்துரைத்தவர்களும், இம்மையில் சகல சுகபோகங்களையுமனுபவித்து, மறுமையில் மோக்ஷசாம்பிராஜ்யத்தையடைவார்கள்.

பதினைந்தாம் அத்தியாயம்.

முற்றிற்று.

# பதினொராம் அத்தியாயம்.

## குமாரர் பூசனைச் சருக்கம்.

கேட்பீர்களாக! சகலசாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த முனிவர்களே! வச்சிரலிங்கத்தை ஸ்ரீசுப்பிரமணியக் கடவுளானவர் பூசித்துத் தாரகாசுரன் முதலிய அசுரர்களைக் கொன்றதனாலுண்டாகிய வீரஹத்திதோஷத்தை நிவர்த்தி செய்துகொண்ட சரித்திரத்தை உங்களுக்கு சொல்லுகிறோமென்று சூதமுனிவர் சொல்லத் தொடங்கினார்.

முற்காலத்தில் தாரகாசுரன், சிங்கமுகாசுரன், பத்மாசுரன், பானுகோபன், முதலிய அசுரர்கள் கடுமையான தவத்தைச் செய்துப் பிரமதேவரைப் பிரத்தியக்ஷமாக்கி அநேக வரங்களையும் பெற்றுக்கொண்டு ஆயிரமண்டங்களுக்கு அதிபதிகளாயும், அசுரகுல சக்கிரவர்த்திகளாகவுமிருந்து இடைவிடாது தேவர்களுக்கு உபத்திரவமுண்டாக்கி வந்தார்கள். இப்படியிருக்க பிரமாதிதேவர்கள் இவர்களின் இம்சைகளை சகிக்கமுடியாதவர்களாய் பரமேசுவரரிடஞ்சென்று அவரடி வணங்கித் தோத்தரித்து தங்களுக்குண்டான இடையூறுகளைச் சொல்லி அதை நிவர்த்திக்கவேண்டுமென்று இரஞ்சினர். சர்வேசுவரர் தேவர்களை நோக்கி அந்த அசுரர்கள் பிரமனுக்கிரகத்தால் இப்போதுள்ள ஒருவராலும் கொல்லப்படார்கள். ஆகையாலிவர்களைச் சம்ஹரிக்க வல்லமையுள்ள மகாவீரனொருவனை யானுண்டாக்கவேண்டும். அப்படியேயோர் வீரனை யெனது புத்திரனாகப்பெற்று இவர்களைச் சம்ஹரிக்கச்செய்கிறேன் என்றுகூற பிரமாதிதேவர்கள் மகிழ்ந்து வணங்கி உத்திரவு பெற்றுச் சென்றவுடன் சதாசிவன் பார்வதியிடத்தில் முருகக்கடவுளை உற்பத்திசெய்து அவரை தேவர்களுக்குச் சேனா



திபதியாக்கி யுத்தத்துக்கனுப்ப, சுப்பிரமணியர் தேவசைன்னியத்தோடுஞ்சென்று தாரகாசுரன் முதலியவர்களோடு யுத்தஞ் செய்து மஹாசக்தியென்னும் வேலினால் சம்ஹரித்தனர். இவ்வாறு அசுரர்களையொழித்து முருகக்கடவுள் தேவசைன்னியத்துடன் திரும்பிவரும்பொழுது மகாவீரர்களாகிய அசுரர்களைக் கொன்றதனாலுண்டாகிய வீரஹத்தியானது இவரைப்பின்தொடர்ந்து கைலாயமலைவரையில் வந்து பரமசிவனிடத்திலுள்ள பயத்தினால் வாசற்படியிலேயே நின்றுவிட்டது.

அதன்பின்னர் ஆறுமுகக்கடவுள் வெளியேறிச்செல்லுகையில் வீரஹத்தியும் கூடத்தொடர்ந்துவர அதைக்கண்டு மிக்க பயந்தவராய் இவ்வீரஹத்தியினது துஷ்டசுபாவமுள்ளதாதலால் நம்மை ஒருக்கால் உபத்திரவம் செய்தாலுஞ்செய்யும் என்று யோசித்து அதனை ஒழிக்கக்கருதி உலகத்திலுள்ள பலஸ்தலங்களையும் நாடி, புண்ணியதீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து சிவாராதனைச்செய்தும், தரிசித்தும், வீரஹத்தி யொழியாதிருப்பதைக் கண்டு முடிவில் காவிரியின் கரையிலுள்ள திருமழபாடி யென்னும் புண்ணியஸ்தலத்தின் எல்லையை மிதித்தவுடன் அவ்விடத்திலேயே வீரஹத்தி தங்கிவிட்டதைக்கண்டு சுப்பிரமணியர் நாம் இதுவரையில் எத்தனையோ ஸ்தலங்களைச்சுற்றினோம். இந்த வீரஹத்தியானது அந்தந்த ஸ்தலத்திற்குள்ளும் நம்முடன் கூடவே வந்துகொண்டேயிருந்தது. ஆயினும் தீர்த்தங்களில் தங்காமலும் கோவிலினுள்ளே பிரவேசிக்காமலுமிருந்தது. ஆனால் இத்திருமழபாடியின் எல்லையை மிதித்தவுடன் இவ்வீரஹத்தியானது இவ்வெல்லையைத் தாண்டிவர முடியாமல் நின்றுவிட்டதால் இது மகாபுண்ணியஸ்தலமென்பதற்குக் கொஞ்சமேனுந் தடையில்லை. ஆகையால் அந்தஸ்தலத்திற்குப்போய் பூசித்தால்தான் இந்த வீரஹத்தி நீங்குமென்று நினைத்துத் திருமழபாடியென்னும் க்ஷேத்திரத்திற்குப்போய் அங்கிருந்த பரிசுத்தமான தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து வச்சிரலிங்கத்தைப் பூசித்துவருகையில் ஒரு

நாள் ஈசன் பிரத்தியக்ஷராகி ஹே சுப்பிரமண்யா! நீ செய்தபூசையால் சந்தோஷமடைந்தேன் உன்வீரஹத்தியானது இந்தஸ்தலத்தை நீ மிதித்தமாத்திரமே பயந்து எல்லைச்சப்புறமே நின்றுவிட்டது என்னைப் பூசிக்கத் தொடங்குபொழுதே வீரஹத்தி காவிரியில்வீழ்ந்து நாசமாகி கடலில் சேர்ந்துவிட்டது. ஆகையால் நீ பரிசுத்தனானாய். உனக்குக்கொடுத்திருந்த தேவசேனாதிப்பட்டத்தைப்பெற்று சுகமாய் வாழக்கடவையென்று கடவுள் திருவாய் மலர்ந்தருளி இலிங்கத்தில் பிரவேசித்தபின்னர் முருகக்கடவுள் தன் இருப்பிடத்தையடைந்து சுகமாயிருந்தனர்.

கேட்பீர்களோ முனிவர்களே! வச்சிரலிங்கத்தை முருகக் கடவுளானவர் பூசித்து வீரஹத்தியைத் தீர்த்துக்கொண்ட சரித்திரத்தை படித்தவர்களும், கேட்டவர்களும், பிரார்த்தித்துச் சென்றவர்களும், இம்மையில் சகல சுகபோகங்களையும் பெற்று சத்ருக்களைச்சயித்து மறுமையில் மோக்ஷமடைவார்கள்.

பதினாறும் அத்தியாயம்

முற்றிற்று.

## பதினேழாம் அத்தியாயம்.

### காவிரி பூசனைச் சருக்கம்.

கேளுங்கள் முனிகுமாரர்களே! வச்சிரலிங்கத்தைக் காவிரியானது பூசித்து சகலநதிகளாலும் தன்னைப்பூசிக்கப்படும் கௌரவத்தையும், சகலபாபங்களையும் போக்கும் திறமையையும், அடைந்த சரித்திரத்தை உங்களுக்கு மொழிகிறேனென்று சூதர் சொல்லத் தொடங்கினர்.

குடகுமலையில் அகத்தியருடைய கமண்டலத்திலுள்ள ஜலத்தை காக்கையுருவெடுத்து விநாயகர் கவிழ்க்க அக்கமண்டலஜலம் *காவிரியென்ற பெயருடன் பிரவாகித்ததென முன்னமே உங்களுக்கு கூறியிருந்தோமல்லவா? அக்காவிரி நதியானது கங்கை, யமுனை, கிருஷ்ணை, கோதாவரி, துங்கபத்திரை, தாம்பிரபரணி, நர்மதை, சிந்து சரஸ்வதி, முதலிய நதிகள்யாவும் வணங்கும்படியான மேலானகௌரவத்தையும், மற்றநதிகளிடத்து ஜனங்கள் ஸ்நானஞ்செய்வதாலேற்படுகிற பாபத்தையும், அவைகள் தன்னிடத்தில் ஸ்நானஞ்செய்து தீர்த்துக்கொள்ளக்கூடியவிசேஷபுண்ய பலத்தையும்பெறுவதற்குத்தேசித்து இவ்வுயர்ந்தவரத்தை எனக்குக்கொடுப்பவர்யாரென்று மனத்துள்ளாலோசித்துக் கடைசியாய்த் தனதுவடகரையிலுள்ள வச்சிரத்துணேசரே தமது கோரிக்கையைநிறைவேற்றவல்லரென்று தீர்மானித்துத்திருமழுவாடி என்னும் தலத்தையடைந்து சிவகங்கையில் ஸ்நானஞ்செய்து சுயம்புலிங்கமாகியவச்சிரத்துணேசரையும், சுந்தரநாயகியம்மையையும் விதிப்படி மந்திரபூர்வகமாய் அபிஷேகித்து, அலங்கரித்து, மற்றுமுள்ள ஷோடசோபசாரஞ்செய்து, துதித்து, கிறகையில் பகவான் கோடி

*கா + விரி = காதலையால்விரிவானது = காவேரியெனமருவியது.

சூர்யப்பிரகாசமான தேஜோமயத்தோடு சுந்தரநாயகியும், காமு மாக, முருகன், கணபதி இருவர்களும் இருபக்கத்தில் விளங்க விருஷப வாகனத்தின் மீதாரோகணித்து மலர்ந்த தாமரையிதழ் களையொத்த நேத்திரங்களும், கங்கையும் சந்திரனும் விளங்கிய சடைமுடியும், கரங்களிற்றுங்கிய மான், மழு, அபயம், வரதம் முதலிய ஹஸ்தங்களையும், ஆதிசேடன் றலையில்விளங்கும் மணி களாலிழைத்த குண்டலங்களும் உடையவராய் பிரத்தியக்ஷமாகி நிற்கக் காவிரியும் பகவானைக்கண்டு சர்வாங்கங்களிலும் புளகம் நிறைய, கண்களில் ஆனந்தக்கண்ணீர் ததும்ப ஹே தீனதயாளா! தேஜோரூபியே! யென்று துதித்து வலம்வந்து நமஸ்கரித்து மிருந்தவளைக் கடாக்ஷிக்கையில் சாலவும் களிகூர்ந்து ஹே காவிரீ! உன் பூஜைகளாலும், ஸ்தோத்திரத்தாலும், நாம் சந்தோஷமடைந் தோம், ஜகத்தில் எத்தனையோ ஸ்தலங்களிருந்தாலும் உன்னி டமுள்ள அன்பின் மிகுதியால் உன்னுடைய வடகரையிலுள்ள இம் மழபாடியென்னும் தலத்திலுறைந்து வசித்துவருகிறோம். உனக்கி ஷ்டமான வரம் யாதாகிலும் கேட்பாயாகில் அதனையும் கொடுத் தருளுகிறோமென்று கூறிய மொழிகளைக்கேட்டு காவிரி தங்கள் சான்னித்தியத்தாலல்லவா காசியிலுள்ள கங்கை மகிமையைப்பெ ற்றனள். அக்கங்கையின் வடக்கு நோக்கிய பிரவாஹத்தை மணி கர்ணிகையென்றும், அதில் ஸ்நானஞ்செய்பவர்களுக்குத் தர்மம் அர்த்தம், காமம், மோக்ஷம், ஆகிய நான்கு புருஷார்த்தங்களும் சித்திக்குமென்று தாங்களே கூறியிருக்கின்றீர்கள். அக்காசியி லுள்ள கங்கையும், மற்ற தீர்த்தங்கள் யாவும் என்னை வந்தடை ந்து தங்கள் தங்கள் பாபங்களைப் போக்கிக்கொள்ளும்படிக்கும், சகல தீர்த்தங்களுக்கும் மேலான தீர்த்தமென்றபெயர் எனக்கே சித்திக்கும்படிக்கும், பதியாகிய சமுத்திர ராஜனையடைந்து நான் குறைவின்றி வாழும்படிக்கும் அநுக்கிரகிக்க வேண்டுகின் றேன், என்னவைத்த மொழிகளைக்கேட்ட பகவான் ஹே கல்யாணி! உன்மனதிலுள்ள அபிப்பிராயங்க ளனைத்தும் யாமுணர்ந்தோம்



உன்மனோரதங்கள் நிறைவேறுவதில் யாதும் தடையில்லை. காசி யில் சொல்லுகின்ற கங்கையும் என் சடையிலிருப்பவள்தான் என்றாலுமே இத்தலத்தில் விளங்கும் சிவகங்கையும் என் சடை யிலுள்ள கங்கையால் நிறைப்பெற்றதுதான் ஆதலின் இச்சிவ கங்கையில்மூழ்கி என்னைப் பூசித்துத் துதித்தபடியால் நீ கங்கை யினும் மேன்மையை யடையக்கடவாய். அக்காசியிலுள்ள கங் கை, யமுனை முதலிய இதர நதிகளுடன் கலந்து உன்னையடை ந்து வடக்கு நோக்கிய பிரவாஹத்தை உனக்குண்டாக்கி இங் கிருந்து அரைக்குரோசதூரம் வடக்கேபோய் பின்பு கிழக்கு முகமாய்த் திரும்பி சமுத்திரத்தை யடையக்கடவாய். அப்படி அகண்டமான பிரவாகத்தையுடைய உன்னை சமுத்திர ராஜன் பட்டமகிஷியாகச் செய்துகொண்டு கங்கையிடத்திலுள்ள விசுவா சத்தைக்காட்டிலும் உன்னிடமிருந்த விசுவாசமுடையவனாயிருக் கட்டும். சகலநதிகளுக்குமுண்டாகும் பாபங்களெல்லா மித்தலத் தில் வடக்கு முகமாய் வோடுகிற உன்னையடைந்த மாத்திரத்தில் நிவர்த்தியாகட்டும். ப்ரயாகையிலுள்ள திரிவேணி சங்கமத்தில் ஸ்நானஞ்செய்பவர்களுக்கு எந்தபலன் கிடைக்குமோ அப்பலன் உத்தரவாஹினியாயென்முன்னிருக்கிறவுன்னிடம் ஸ்நானஞ்செய் பவர்களுக்குங்கிடைக்கட்டும். உன்கரையிலுள்ளவச்சிரஸ்தம்பே ச்வராகியயாம் விசுவேசரேயாதலாலும், இத்தலத்தில்விளங்கும் சுந் தரவிநாயகரே டுண்டிவிநாயகராதலாலும், அச்சுந்தரநாயகியே விசாலாக்ஷியாதலாலும், இவ்வாறமர்ந்த கன்னிகையே அன்னபூரணி யாதலாலும், உனக்கென்றும் தக்ஷிணகங்கையென்றபெயர் விளங் கட்டும்" என்றுகூற காவிரி மிகுந்தசந்தோஷத்துடன் ஹே! வச் சிரஸ்தம்பேஸ்வரா! தங்களனுக்கிரகத்தால் சகலமனோரதத்தை யுமடைந்தேனாயினும் இங்குக்கிழக்குமுகமாயோடிக்கொண்டிருக் கிற நான் எப்பொழுது உத்தரவாஹினியாவேனென்ற காலத் தைச் சொல்வதுடன் சீக்கிரமாய் அவ்விதமாக அநுக்கிரகிக்க வேண்டுமென்றும் பிரார்த்திக்க பனங்காட்டுறைவன் கருணையை

மனதில் நினைத்து ஹே வருணா! சர்வ தீர்த்தங்களோடும் நீ காவிரியையடைந்து பூர்ணப்ரவாஹமாய் என் சந்நிதிமுன் வடக்கு நோக்கி வோடுவாயாகவென்று ஆக்ஞாபிக்க அவ்வண்ணமே காவிரிக்கும் உத்தரவுசெய்து இதுவே புண்யகால சமயமென்று கூறி லிங்கத்துள் மறைந்தனர்.

இவ்விதம் வரத்தையடைந்த காவிரிநதி தன்னிடமடைந்த வெல்லாநதிகளுக்கும் பாபவிமோசனத்தை செய்தும் தன்னிடம் மூழ்கிய பிரஜைகளுக்கு இஷ்டமானவரங்களை யளித்தும் காசியிலுள்ள கங்கையைப்போல் என்றென்றும் வற்றாமல், உத்ரவாஹினியாய்பரிசுத்தம்பொருந்தி வச்சிரத்தூணேசரின் முன்பாக இன்றும்விளங்குகிறது.

கேளுங்கள் முனிவர்களே! காவிரிக்கு வச்சிரத்தூணேசர் வரமருளிய கதையைப் படிப்பவர்களும், கேட்பவர்களும், அதனைப்பிறர்பாலெடுத்துரைப்பவர்களும், இம்மையில் சகலபோகங்களையு மநுபவித்து மறுமையில் மோக்ஷமடைவார்களென்பது நிச்சயம்.

பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

# பதினெட்டாம் அத்தியாயம்.

## பிரவாகமடக்கியச்சருக்கம்.

கேளுங்கள் முனியோர்களே! திருமழுவையிலுள்ள வச்சிரத்தூணேசரைப்பூசித்து வரம்பெற்றுக் காவிரி வடமுகமாய் ஓடிய கதையையும், சுந்தரவிநாயகர் அக்காவிரியின் பிரவாகத்தை அடக்குவதற்காக காவிரியின் கரையில் தென்முகமாக வந்துற்ற கதையையும் உங்களுக்குரைக்கிறேன் " கேளுங்களென்று சூதமுனிவர் சொல்லத்துடங்கினர்.

இவ்வாறு வரம் பெற்ற காவிரிநதியானவள் வடமுகமாய்ப் பிரவேசிக்க ஆலோசித்துக்கொண்டிருக்கையில் வச்சிரத்தூணேசராக்ஞையால் வோர் பெருங்காற்றுக்கிளம்ப அவ்வாயுவுடன் கூடிய வருணனும் இதர நதிகளுடன் கலந்து பெருமழையாய்ச் சொரிந்து காவிரியிற் கலந்து அக்கரையிலுள்ள மா, பலா, தெங்கு, பனை, தேக்கு, கொய்யா, சந்தனம், அகில், தேவதாரு, அடம்பு, மகிழ், வேம்பு, கருங்காலி, உதிரவேங்கம், அழிஞ்சில், குங்குமம், ஆல், அரசு, அத்தி, புங்கு, கொன்னை, புளி, புன்னை, பலாசு, அசோகு, மந்தாரை, முதலிய மரங்களை முறித்துக்கொண்டும் ஒளிபொருந்திய இரத்தின கற்களை வறன்றிக்கொண்டும், முத்துக்களை வாரிவீசிக்கொண்டும், அலைகளோடுங்கூடி மிகுந்த ஆரவாரத்துடன் தனது வடகரையின் ஓர் புறத்தை உடைத்துக்கொண்டு நுரைகளோடும், மீன்கள், முதலைகள், மற்றுமுள்ள ஜலசரங்களுடன் அதிவேகமாய் வடக்குமுகம் நோக்கிச்செல்லவாரம்பித்தது. இவ்வாறு காவிரியின்பிரவாகமானது வடமுகமாய்த்திருப்பவே மழுவாடியிலுள்ள பிர்ம்ம, க்ஷத்திர, வைசிய, சூத்திரர்களாகிய நான்கு வருணத்தவரும், அங்குள்ள முனிசிரேஷ்டர்களும், பிரவாகத்தைக்கண்டு பயந்து, சுந்தரவிநாயகரின் சன்னிதி

யையடைந்து மந்திரபூர்வகமாய் விதிப்படி அபிஷேகஞ்செய்து, தூப, தீப, நைவேத்தியங்கொடுத்து, நூற்றுக்கணக்கான தேங்காய்களையுடைத்து, மோதகம், எள்ளுருண்டை, தேங்காய்ப்பருப்பு, முதலியவைகளையும் நிவேதித்து பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து ஹே கஜானனா! மூஷிகவாகனனே, வாமனனே, ஒற்றைக்கொம்பனே, பாசாங்குசதரனே, இக்காவிரியின் பிரவாகத்தால், இன்னகரமே யழிந்துவிடும்போலிருக்கின்றதே. ஆகையால் இந்த காவிரியின் பிரவாகத்தையடக்கி யெங்களை ரக்ஷித்தருளுவீரென்று இருகரங்களையுஞ் சிரமேற்குவித்து நிற்க மஹேசுவர புத்திரரான சுந்தரவிநாயகரும் ஞானதிருஷ்டியாலாலோசித்துணர்ந்து "ஹே ஜனங்களே! என் பிதாவாகிய வச்சிரத்தூணேசராக்ஞையால் வடக்கு முகமாய் காவிரி பிரவாகித்தோடி வருகிறாள். இக்காவிரியின் வடக்குமுக பிரவாகமானது ஸ்நான மாத்திரத்தால் உங்களுடைய சகல பாபங்களையும் நிவர்த்திசெய்துவிடும். ஆயினும் மிகுதியான பிரவாகத்தையடக்கி உங்கள் பயத்தை நிவர்த்திக்கிறேன்" என்றுகூறி தனதங்குசத்தினால் காவிரியில் தெற்கு முகமாயவதரித்து வடக்கு நோக்கி வரும் காவிரியைப்பார்த்து ஹே சஹ்யகன்னிகையே! ஈசனனுக்கிரகத்தால் நீ வடமுகமாய் மாத்திரம் ஓடவேண்டுமேயல்லாது பிரஜைகளுக்குப் பயமுண்டாகும்படி மிதமிஞ்சிய வெள்ளத்தோடு பிரவாகிப்பது ஞாயமல்ல, ஆகையால் உன் பிரவாகத்தை அடக்கிக்கொண்டு வடக்குமுகமாயோடி சர்வபாபங்களையும் போக்கவும், சர்வமங்களங்களை யளிக்கவும் மகிமைவாய்ந்து உன் பதியாகிய சமுத்திரராஜனை யடையக்கடவாய் யென்றுக்ஞாபிக்க காவிரியும் பிரவாகமடங்கி கணபதியாற்கட்டுப்பட்டு வடக்கு நோக்கி அரைக்குரோச தூரம்போய் கிழக்குமுகமாய்த் திரும்பிவிட்டனள்.

கேளுங்கள் முனிவர்களே! அன்றுமுதல் சுந்தரவிநாயகரும் காவிரியின் கரையில் தெற்கு முகத்தோடிருந்து அகிலவுலகங்களையும் காப்பாற்றிவருகின்றார்.



இவ்விதம் உத்தரவாஹினியாய் ஓடுகின்ற காவிரியில் ஸ்நானஞ்செய்கின்றவர்கள் இம்மையில் சகல வைபவங்களையுமடைந்து மறுமையில் மோக்ஷமடைவார்கள். இன்னும் பிரமாதிகளான தேவர்களும், யக்ஷர், கின்னரர், கிம்புருடர், சித்தர், வித்யாதரரும், நாரதாதிகளாகிய தேவரிஷிகளும், அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை, க்ருதாசி முதலிய தேவமாதர்களும், இக்காவிரியின் வடக்குப்பிரவாஹத்தில் ஸ்நானஞ்செய்து வச்சிரலிங்கத்தைப்பூசித்ததினாலேயே தங்கள் மனோரதம் நிறைவேறி சுவர்க்க அங்கத்தை யடைந்தனர். ஆதலின் வடக்கு நோக்கிய அக்காவிரியில் செய்யும் ஸ்நானமானது பல ஜனனங்களிற் செய்த புண்ணியங்களாற்றான் கிடைக்கும். அந்த உத்தரவாஹினியில் வச்சிரத்தூணேசர் சன்னிதியில் செய்யப்படும் தானங்களும், மந்திர ஜபங்களும், பிதுர்க்களுக்குச்செய்யுந்தர்பணங்களும், கோடிமடங்காகப்பாவிக்கப்படும். வச்சிரத்தூணேசர் சன்னிதியில் தவங்களைச்செய்தாலும், தியானஞ்செய்தாலும், சிவநாமங்களையுச்சரித்தாலும், சிவனைப் பூசித்தாலும், அவர்களிடத்துக்கருணைகூர்ந்து சாமீப்யம் கொடுத்து ரக்ஷிக்கிறாரென்பது நிச்சயம். வச்சிரத் தூணேஸ்வரர் ஆலயத்தின் திருப்பணிகளையும், உழவாரப்பணிவிடைகளையும், சன்னிதியிலுள்ள காவிரியின் படித்துறை முதலானவைகளையும், காவிரியின் வேகத்தையடக்க தென்முகமாயெழுந்தருளிய விநாயகரது பணிவிடைகளையும் செய்பவர்களும், அதனைச்செய்யும்படிப் பிறர்பால் வாக்கு சகாயஞ்செய்பவர்களும், முயற்சிப்பவர்களும், இகத்தில் அவர்கள் மனோரதமெல்லாம் நிறைவேறும். அந்தியத்தில் சர்வோத்கிருஷ்டமான மோக்ஷத்தையடைவார்கள். இதுவன்றி இவ்வச்சிரத்தூணேசர் ஆலயத்திருப்பணிக்கு இடையூறு செய்பவர்களும், இவ்வச்சிரத்தூணேசரின் தர்மத்துக்கேற்படுத்திய சிவசொத்தை அபகரிப்பவர்களும், புத்திர பௌத்திரர்களையும், சகல சம்பத்துக்களையும், இழந்து மகாரோகத்திலாழ்ந்து ரௌரவாதி நரகத்தையடைவார்கள்.

இவ்விதமாக காவிரி வடக்கு முகமாக பிரவேசித்த கதையையும், அக்காவிரியில் ஸ்நானஞ்செய்பவர்களுக்குக் கூடியிருக்கும் பலன்களையும், படித்தவர்களும், கேட்டவர்களும், அதனைக் கேட்கும்படி பிறரை வற்புறுத்தியவர்களும், இம்மையில் சகல வைபவங்களையுமடைந்து மறுமையில் மோக்ஷ சாம்பிராச்சியத்தையடைவார்கள்.

பதினெட்டாம் அத்தியாயம்.

முற்றிற்று.

# பத்தொன்பதாம் அத்தியாயம்.

—):0:(—

## அகத்தியர் பூசனைச் சருக்கம்

கேளுங்கள் மகரிஷிகளே! வச்சிரலிங்கத்தைப் பூஜித்து அகஸ்திய மகாமுனிவரானவர் விந்தியபர்வதத்தினிடம் பொய்யுரைத்த பாபத்தை தீர்த்துக்கொண்ட வரலாற்றை உங்களுக்குரைக்கிறேன். நீங்கள் கேளுங்களென்று உரைப்பாராயினர்.

முன்னொருகாலத்தில் குறுமுனியென்பவர் இமயமலையில் தவஞ்செய்துக் கொண்டிருந்து தனது பத்தினியாகிய லோபாமுத்திரையுடன் *ஸாஹ்யபர்வதத்தை நாடிவந்துக்கொண்டிருக்கும் வழியில் விந்தியபர்வதமானது மகாஉன்னதமாய் ஆகாயத்தையளாவி நின்றதைநோக்கி இந்தமலையானது தேவர்கள் ஆகாயத்தில் சஞ்சரிப்பதற்கும், நம்போன்ற முனிவர்கள் சென்றுவருவதற்கும், மற்றுமுள்ள ஜனங்கள் சஞ்சரிப்பதற்கும் இடைஞ்சலாக இருப்பதனால் இதன் உயரத்தைக் குறைத்துவிட வேண்டுமென்று மனதில் நினைத்து ஹே விந்தியபர்வதமே! நான் உன்னைத்தாண்டி அப்பால் செல்லவேண்டியதாயிருப்பதனால் நானிவ்விடம் திரும்பிவருமளவும் தரைமட்டமாயிருக்க வேண்டுமென அதைக்கேட்ட பர்வதமானது தரைமட்டமாய்விட்டது. உடனே தாமும், தம்பத்தினியுமாய் சாஹ்யபர்வதமடைந்து சௌக்கியமாய் வாழ்ந்திருந்தார்கள். அதன்பிறகு சிலநாட் சென்றபின்னர் அகத்தியமுனிவர் லோபாமுத்திரையை நோக்கி வாராய் பிரியசுந்தரி! நான் விந்தியபர்வதத்தினிடம் திரும்பிவருவதாய்ச் சொல்லி அவ்விடம் போகாதபடியால் பொய்சொன்ன தோஷமானது எனக்குச்சம்பவித்துவிட்டது. ஆகையால் நாம் இந்தபாவத்தைத்

*ஸாஹ்யபர்வதம் – குடகுமலை.

தீர்த்துக்கொள்ள பல சிவஸ்தலங்களையுமடைந்து பூசித்து அப்பேர்ப்பட்ட பாவத்தைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமாதலால் நாம் செல்வோமென்று பல சிவஸ்தலங்களினும் சென்று ஆங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து மூர்த்திகளைத் தரிசித்து கடைசியாக திருமழுவாடியென்னும் க்ஷேத்திரத்தை யடைந்து அதிசயித்து மனத்துள்ளாலோசிக்கலாயினர். நாம் இந்த சிவஸ்தலத்திற்கு முன்னொருகால் வந்திருந்தபொழுது இந்தக் காவிரியானது கிழக்குமுகம் நோக்கிச் சென்றுகொண்டிருந்ததே இப்போது வடக்குமுகம் நோக்கிச் செல்லக் காரணமென்னவென்று தன் ஞானதிருஷ்டியால் நோக்க சர்வேசுவரனும், அகிலலோக நாயகனுமான பரமசிவனது திருவருளால் இந்த காவிரியானது கங்கை, யமுனை, முதலிய பலபுண்ணிய தீர்த்தங்களோடும் பொருந்தி உத்திரவாஹினி யென்னும் பெயரோடு வடக்குமுகம் நோக்கிச்செல்லுகின்றது. இந்த நதியானது காசியிலுள்ள கங்கையில் ஸ்நானஞ்செய்தால் கிடைக்கப்படுமோ அந்தப் பலனையடைவார்கள் என்பதில் தடையில்லை. எப்படிக் காசியில் விசுவேசர்சந்நிதியில் கங்கை வடக்கு முகமாய்ச் செல்லுகிறதோ இத்தலத்திலும் வச்சிரலிங்கத்தின்முன் இந்தக் காவிரிசெல்லுகிறபடியால் இத்தலத்தினை தெக்ஷிணகாசியெனலாம். வைகுண்டத்தில் ஸ்ரீநாராயணன்முன் விரஜாநதி ஓடுகிறது. இதுபோலவே யோகநாயகன்முன் இக்காவிரியும் ஓடுகிறது. இதை வைகுண்டமென்றுஞ் சொல்லலாம் ஆகையால் இந்நதியின் விசேடத்தை ஒருவராலும் சொல்லத்தரமன்று. காசியிலுள்ள விஸ்வநாயகரே சுந்தரவிநாயகராகவும், அன்னபூரணியே மாதுர்க்க சுந்தரியாகவும், விசாலாக்ஷியம்மையே சுந்தரநாயகியாகவும், விசுவேசுவரரே வச்சிரலிங்கேசுவரராகவும், அமர்ந்திருக்கின்றனர். ஆதலின் நாம் இத்தலத்தில் சிலகாலமிருந்து நமது பாவத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டுமென்று நிச்சயித்து தன் பத்தினியுடன் காவிரியினும், சிவகங்கையினும், ஸ்நானஞ்செய்து சுந்தரவிநாயகரையும், வச்சிரலிங்கேச



ரையும், சுந்தரநாயகியையும் விதிபூர்வகமாய் அபிஷேகித்து சோடசோபசாரம்செய்து தியானித்தும், துதித்தும் நிற்கையில் பஞ்சாக்ஷரஸ்வரூபியாகிய கைலாசநாதன் பார்வதியுடன் விருஷபவாகனரூடராய் பிரத்தியக்ஷமாகி ஹே அகஸ்தியனே! உனது பூஜைக்கு மிக்க சந்தோஷமடைந்தோம். உனக்கு வேண்டிய வரத்தைக் கேளுமென்று ஈசுவரனை பன்முறை வணங்கி ஹே தேவதேவோத்தமா! நான் விந்தியபர்வதத்திடம் பொய்சொன்ன பாவந்தீர வைத்தருள வேண்டுமென்று இரந்துநின்ற அகத்தியரை நோக்கி குறுமுனியே உன் பூஜைக்கு மெச்சினேன். நீ சகல தேவதைகளுக்கும் நன்மை உண்டாக்க விந்தியபர்வதத்தை பூமியிலாழ்த்தியதால் நீ அதனிடம் சொன்னவார்த்தையால் பொய்யென்னும் பாபமாகமாட்டாது, அப்படி பாபமாயிருந்தாலும் என் சந்நிதியிலுள்ள கங்கை, காவிரி, நதிகளில் ஸ்நானஞ்செய்து என்னைப் பூசித்தபடியால் அந்தபாபங்களெல்லாம் பெருந்தீயிற்பட்ட பஞ்சுபோலாயின வென்று திருவாய்மலர்ந்தருளி இலிங்கத்துள் மறைந்தனர்.

இவ்வாறு சென்றபின்பு குறுமுனியாகிய அகத்தியரும் அவர்பத்தினியாகிய லோபாமுத்திரையும் சிலநாள் அங்கு வசித்திருந்து பிறகு பொதிகைமலையையடைந்து சுகமாயிருந்தார்கள்.

இந்த அத்தியாயத்திற் கூறிய குறுமுனியாகிய அகத்தியர் செய்தபூஜையின் விசேஷத்தைப்படித்தவர்களும், கேட்டவர்களும் அதனைப் பிறருக்கெடுத்துச் சொன்னவர்களும், இம்மையில் சகல வைபவங்களையுமடைந்து மறுமையில் மோக்ஷமடைவார்களென்பது நிச்சயம்.

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

# இருபதாம் அத்தியாயம்.

## கனகன் மனோரதம் நிறைவேறியச் சருக்கம்.

கேளுங்கள் சகல பாபத்தையுமொழித்த முனிவர்களே வச்சிரலிங்கத்தின் மகிமையால் பிராமணபுத்திரனும், பிராமணபுத்திரியும் தங்கள் தங்கள் மனோரதம் நிறைவேறி நற்கதி பெற்ற கதையை உங்களுக்குரைக்கிறேனென்று சூதமுனிவர் சொல்லலாயினர்.

முற்காலத்தில் தர்மபுரியென்னும் ஓர் ஊரில் வசித்துக்கொண்டிருந்த தர்மராஜனென்னும் ஓர் பிராமணனுக்கு கனகனென்று ஓர் புத்திரனும், கனகியென்னும் ஓர் புத்திரியுமிருந்தார்கள். இவர்களில் கனகியென்பவளைத் தகுந்தவரனைத்தேடி கல்யாணஞ்செய்து கொடுத்தபின்னர் அவளும் பருவத்தையடைந்து தன்பதியுடன் சுகமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் நாளையில் ஓர் நாள் தர்மராஜனென்பவன் தன்குமாரனைநோக்கி உன் தங்கையைப் போய் அழைத்துவாவென்ன, கனகனும் அவ்வாறே தன் தங்கை வீட்டையடைந்து அவளை யழைத்துக்கொண்டு வரும் வழியிலுள்ள திருமழுவாடியென்னும் தலத்தையடைந்து அங்குள்ள நதியிலும் தீர்த்தத்திலும் ஸ்நானஞ்செய்து வச்சிரலிங்கேசரைப் பூசித்துச் செல்லுகையில் காவிரி பிரவாகமாயிருந்ததால் ஒருவர்கையை ஒருவர்பிடித்துக்கொண்டு நதியைத்தாண்ட முயன்றனர். இவ்வாறு ஒருவர்கையை ஒருவர் பிடித்தவுடன் அவ்விருவர்களுக்கும் நாம் சகோதரர்களாகப் பிறவாதிருப்போமானால் ஒருவரையொருவர் மணந்துகொள்ளலாமே என்று மனதிலெண்ணமுண்டாய் அப்பால்நடக்கையில் காவிரியில் [illegible]யிருந்ததால் தவறிவிழுந்து தங்கள் உயிரையிழந்தனர். இவ்வாறாய் தாங்கள் அகஸ்மாத்தாய் காவிரியின் மடுவில் உயிரைவிடவே கைலாயபதி தன்கணங்களைநோக்கி



நீங்கள் நமது தலத்திற்கெதிரிலிருக்கும் காவிரியில் இறந்துபோன சகோதரர்களிருவரையும் நம்முன் கொண்டுவருவீர்களென்றாக்ஞாபிக்க கணங்கள் ஓடோடியும்வந்து பிராமணனையும் அவன் சகோதரியையும் திவ்யவிமானமேற்றி கைலைகொண்டுசேர்த்தனர். இவ்வாறு கைலைசேர்ந்த இவ்விருவர்களையுங்கண்ட ஈசன் சந்தோஷித்து பிரமனை நோக்கி ஹே பிரமதேவா! இவ்விருவர்களையும் முன் ஜன்மத்தில் சகோதரராக சிருஷ்டித்தாய் இப்போது நீ சதிபுருஷராகும்படிச்செய்வீரென்று உரைத்த சிவனதுமொழிகளைக் கேட்டபிரமன் இவ்விருவர்களையும் மயில்களாய் சிருஷ்டித்தனர். அப்படி சிருஷ்டித்த மயில்களிரண்டும் பூமியிலுள்ள திருமழுவாடியென்னும் திவ்யஸ்தலமடைந்து பகவான் திருக்கோவிலில் வசித்து ஒன்றையொன்று பிரியாமற் சுகித்திருந்து அந்தியத்தில் பகவான் சாமீப்யம்பெற்று வாழ்ந்திருந்தார்கள்.

ஆகையால் அத்தலத்தில் மயிலினங்களைக்கோவிலில் வளர்ப்பவர்களையும், அப்படி வளர்க்கும் மயில்களுக்கு உணவுகளை கொடுப்பவர்களையும், பகவான்றன் அடியார்களுள் ஒருவராய் எண்ணுகிறார்.

இவ்விதமாய் பிராமணசகோதரர்கள் வச்சிரலிங்கத்தைப்பூசித்து காவிரியில் வீழ்ந்திறந்து சாமீப்யம்பெற்ற கதையை படித்தவர்களும், கேட்டவர்களும், அதனை பிறர்பால் எடுத்துரைத்தவர்களும் இம்மையில் சகலபோகங்களையுமனுபவித்து மறுமையில் மோக்ஷ சாம்ராஜ்யத்தையடைவார்கள்.

இருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

# இருபத்தொன்றாம் அத்தியாயம்.

## பீமசேனன் பூசனைச் சருக்கம்.

கேளுங்கள் மகாஞானத்தையுடைத்த தவசிரேட்டர்களே! பீமசேனனானவன் வச்சிரலிங்கத்தைப் பூசித்துத் தன் ஞாதிகளைக் கொன்ற தோஷத்தையும் அதனாலுண்டாகும் லோகாபவாதத்தையும் நிவர்த்தித்துக்கொண்ட சரித்திரத்தை யுங்களுக்குரைக்கிறேன். இதனைச் செவியுற்று சந்தோஷத்தையடையுங்களென்று சூதபுராணிகர் சொல்லத் தொடங்கினர்.

முன்பு துரியோதனாதிகளாலும், சகுனியாலும் ஒருங்கே சேர்ந்து வஞ்சிக்கப்பட்டு நகரங்களைத் தோற்ற தர்மராஜன், பீமசேனன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் முதலிய பாண்டவர்கள் தர்மசிந்தையோடு சபையிலுள்ள பெரியோர்களின் சொற்படிக்கும், * ஞாதிகளின் சொற்படிக்கும் பன்னிரண்டுவருடம் வனவாசமும் ஒருவருடம் அஞ்ஞாதவாசமுஞ்செய்து திரும்பிவரினுந் தங்கள் நகரங்களைத் திரும்பக்கொடுப்போமென்றுரைத்தபடியே பதின்மூன்றுவருடமும் அவர்களுரைத்தவண்ணங் காலங்கழித்துத் திரும்பிவந்து தங்கள்நகரங்களைக்கேட்டுங்கொடாததால ஸ்ரீகிருஷ்ணபகவானைச்சகாயமாய்க்கொண்டு தன் ஞாதிகளாகிய துரியோதனாதிகளை யுத்தத்திற் கொன்று தன் நாடுநகரங்களைக் கைக்கொண்டபின் ஒருநாள் பீமசேனனானவன் தான் வழக்கம்போல் சிவபூசைசெய்து முடிந்தவுடன் ஈசனைத் தோத்தரித்து ஹே லோகரக்ஷக, பசுபதியே, முக்கண்ணிறைவா, நான் ஞாதிகளை மனதாரக் கொன்ற தோஷத்தையும், அதனாலுண்டான அபவாதத்தையும் என்னைச்சாராமலிருக்கும்படி வரந்த

* ஞாதி = தாயாதி.



ருளவேண்டுமென்று இரஞ்சிநின்ற மகாபக்தனாகிய பீமசேனன் முன் பசுபதியானவர் பிரத்தியக்ஷமாகி ஹே பக்தா! நீ எனக்கு மகாப்பிரீதியுடன் தினந்தோறும் விசேஷ பூசைசெய்து வருபவனாதலால் இந்த பூசையே உனக்கு வேண்டிய வரத்தைக் கொடுக்கக்கூடியதாயிருந்தாலும், பூமியில் காவிரியின்வடகரையில் திருமழுவாடியென்னுந் திவ்ய க்ஷேத்திரத்தில் மகா பாபங்களைப் போக்கடிக்கக்கூடியதாய், இஷ்டவரத்தைக்கொடுக்கக்கூடியதுமான தலத்தில் நான் வச்சிரலிங்க ரூபமாய் சாந்நித்தியம்பெற்றிருக்கிறேன். ஆகையால் நீ அத்தலத்தையடைந்து பூசிப்பாயாகில் உன்னிஷ்டப்படி அங்கு பிரத்தியக்ஷமாகி வரந்தருகிறேனென்றுரைத்தமொழிகளைக்கேட்ட பீமசேனன் மனதிற் சந்தோஷத்தோடு காவிரியின் வடகரையிலுள்ள திருமழுவாடியென்னுந் தலத்தையடைந்து காவிரியிலும், சிவகங்கையிலும், லக்ஷ்மிதீர்த்தத்திலும், மந்திரபூர்வகமான சங்கல்பத்துடன் ஸ்நானஞ்செய்து சுந்தர விநாயகரையும், வச்சிரத் தூணேசரையும், சுந்தர நாயகியையும், வாழார்ந்த கன்னியையும் விதிப்படி அபிஷேகித்து வாசனைபொருந்திய சந்தன முதலியதுகளைப்பூசி வஸ்திர பூஷணாலங்காரஞ்செய்து திவ்யமான புஷ்பமாலைகளால் அலங்கரித்து தூபதீப நைவேத்தியஞ்செய்து அநேகவிதமான பத்ரபுட்பங்களால் அர்ச்சித்துத் தோத்தரிக்கத் தொடங்கினன்.

ஹே ஆதிமத்யாந்த ரஹித, அருமறையினுட்பொருளே, ஜோதியே, சுடரே, அகிலரூபியே, ஞானஸ்வரூபியே, நிரஞ்சனனே, பரமதயாளனே, பக்தரைக்காக்கும் பரம்பொருளே, என்றிவ்வாறு தோத்திரஞ்செய்துநின்ற பீமசேனன்முன்பாக முன்னம் வரமருளியபடியே விருஷபவாஹனாரூடராய், சுந்தரநாயகி சமேதராய் ஸ்கந்த கணபதிகளுடனே வச்சிர லிங்கத்திலிருந்து வெளிவந்து ஹே பக்தா! உனதபீஷ்டப்படி வரந்தந்தோம் உனக்கேற்பட்ட ஞாதிகளைக் கொன்ற லோகாபவாதமும், தோஷமும் உன்னைச் சாரமாட்டா. ஆகையால் நீ இன்னுஞ் சிலகாலம் இவ்விடமென்

லைப் பூசித்துக் கொண்டிருந்து பின்பு தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்து கட்டளையிட்டு இலிங்கத்துள் மறைந்தனர்.

இவ்வாறுவரம்பெற்ற பீமசேனனவன்பின்னும் சிலகாலம் அவ்வச்சிர லிங்கத்தையே பூசித்துக்கொண்டிருந்து தன்னிருப்பிடம்போய்ச் சகோதரர்களுடன்கூடி சுகமாய்வாழ்ந்திருந்தனன். இவ்வத்தியாயத்திற்கூறியுள்ள பீமசேனன் பூசையைப் படித்தவர்களும், கேட்டவர்களும், பிறர்பாலெடுத்துச் சொன்னவர்களும், இம்மையில் சகலசுகங்களையும்பெற்று அபவாதம் நீங்கி மறுமையில் சிவசாயுச்சியமடைவார்கள்.

## இருபத்தொன்றும் அத்தியாயம்

முற்றிற்று.

# இருபத்திரண்டாம் அத்தியாயம்.

## அசுவினிதேவர்கள் பூசனைச் சருக்கம்.

கேளுங்கள் முனிகுமாரர்களே! தேவ வைத்தியர்களாகிய அசுவினிதேவர்கள்வச்சிரலிங்கத்தைப்பூசித்துத் தம்பாபங்களைப் போக்கியும் தம்மை நினைப்பவர்களுக்கு எவ்வித வியாதிகளும் தீரும்படிக்கும் வரம்பெற்றதை உங்களுக்கு உரைக்கிறேனென்று சூதமகாமுனிவர் சொல்லுவாராயினர்.

முற்காலத்தில் தேவவைத்தியர்களாகிய அசுவினிதேவர்கள் தாங்கள் உலகத்திலுள்ளவர்களின் வியாதிகளை அவுஷதங்களாலும், அஸ்திரங்களாலும், மந்திரதந்திரங்களாலும், நிவர்த்தித்து வருகையில் மார்க்கண்டமுனிவரின் வயிற்றுவலிக்கு வைத்தியஞ் செய்யும்போது தாங்கள் ஏதோமறதியினால்தவறி கொடுக்கவேண்டியமருந்தைவிட்டு வேறொருமருந்தைக்கொடுக்க அதனால் அந்த நோய்கொண்டவருக்கு நோயதிகரித்தது. பின்னர் தாங்கள் தவறிவிட்டதைக் கண்டுபிடித்து அந்தநோய்க்குத் தகுந்தமருந்தைகொடுத்ததால் சுகப்பட்டு வாழ்ந்திருந்தனர். இவ்விதமாகத் தாங்கள்தெரியாமல் மறதியாகவும், தவறாகவும்செய்த தோஷத்தைத் தீர்த்துக்கொள்ளவேண்டி கைலைக்குச்சென்று பார்வதிரமணரைத்தெரிசித்து வணங்கி தங்களுக்கேற்பட்ட பாபத்தைப் போக்க ஓருபாயம் சொல்லவேண்டுமென்று வேண்ட சாம்பமூர்த்தியானவர் ஓ அசுவினிதேவர்காள்! உங்களுக்கேற்பட்ட பாபம் தீரவேண்டுமானால் பூமியில் காவிரியின்வடகரையிலுள்ள தாலவனமென்னும் திவ்யக்ஷேத்திரத்தையடைந்து சிவகங்கையில் மூழ்கி எம்மை பூசிப்பீர்களேயாகில் அங்குவந்து நாம் வரந்தருளுவோமென்றதைக் கேட்ட அசுவினிதேவர்கள் மகாசந்

தேவசமுடையவர்களாகி காவிரியின் வடகரையிலுள்ள திருமழபாடியையடைந்து சிவகங்கையிலிருந்து வச்சிரலிங்கத்தை விதிப்படிப் பூசித்துவரும்நாளில் ஒருநாள் பிரத்தியக்ஷமாகி ஓ அசுவினிதேவர்காள்! நீங்கள்கோரியபடியே உங்கள் பாபமெல்லாம் ஒழிந்தது. உங்களுக்கு இன்னும் ஏதாவது வரம் வேண்டுமானாலும் அதையும் கொடுப்போமென்ன, தேவவைத்தியர்களும் ஹே தேவதேவா! ஹே தயாளுவே, சர்வபௌமா, தாங்கள் எங்கள் முன் பிரத்தியக்ஷமானதும் வரத்தைப் பார்க்கிலும் வேறுவரம்யாதுள்ளது. ஆயினும் உலகத்தில் எங்கள் பெயரை யார் நினைக்கிறார்களோ அவர்களுக்கு நோயற்றவர்களாயிருக்கவும், நோயாளிகளாகில் அவர்களுக்கேற்பட்ட வியாதி அனுகூலமாகவும் வரத்தைத் தந்தருளவேண்டுமென்றுரைத்த மொழிகளைக் கேட்ட பசுபதியானவர் சந்தோஷத்துடன் ஹே தேவவைத்தியர்காள்! நீங்கள் கோரியப்படியே வரமளித்தோம், உங்களிருப்பிடம்போய்ச் சேருங்களென்று சொல்லி இலிங்கத்துள் மறைந்தனர். இவ்விதம் வரத்தையடைந்த அசுவினிதேவதைகள் அந்தத் தலத்தில் சிலகாலமிருந்து பின் தங்களிருப்பிடஞ் சென்றனர்.

கேட்பவர்களான தபோதனர்களே! இவ்வத்தியாயத்திற் கூறிய தேவவைத்தியர்களாகிய அசுவினிதேவர்கள் பூசைசெய்து வரம் பெற்ற சரித்திரத்தை படித்தவர்களும் கேட்டவர்களும் பிறர்பாலிருந்துச் சொன்னவர்களும் இம்மையில் மகாரோகங்களினின்றும் விடுபட்டு சுகபோகங்களைப்பெற்று அந்தியத்தில் மோக்ஷமடைவார்கள்.

இருபத்திரண்டாம் அத்தியாயம்.

முற்றிற்று.

# இருபத்திமூன்றாம் அத்தியாயம்.

## வசிஷ்டர் பூசனைச் சருக்கம்.

மகாஞானத்தையடைந்த முனிவோர்களே கேளுங்கள். வசிஷ்டமகாமுனிவரானவர் வச்சிரலிங்கத்தைப்பூசித்துத் தன் புத்திரர்களுக்குண்டாக்கிய சாபத்தை நிவர்த்தித்து ஈசன் வரத்தால் ஒருகன்னிகையையும் பெற்ற சரித்திரத்தை, உங்கள்பால் உரைக்கிறேனென்று பின்வருமாறு சொல்லத்தொடங்கினார்.

முன்னொருகாலத்தில் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்து நான்கு கலைஞானம், மற்றுமுண்டான வித்தைகளையும் ஐயந்திரிபறக்கற்றுணர்ந்த வசிஷ்டமகாமுனிவர் தன் பத்தினி அருந்ததியோடு இல்லறம் வழுவாது நடாத்தி ஞானநிஷ்டராயிருந்துவருகிற நாளில் தவத்திற் சிறந்த இராஜரிஷியாகிய விஸ்வாமித்திரருக்கும் தனக்குமிருந்த மாச்சரியத்தினால் வசிஷ்டருடைய பிள்ளைகளெல்லாம் நசித்துப்போகும்படி சாபமிட்டதை முன்னிட்டு அந்தப்பிள்ளைகளெல்லாம் நாளுக்குநாள் க்ஷீணத்தையடைந்தனர். இவ்வாறு புத்திரர்களெல்லாம் க்ஷீணகதியடைந்ததைக் கண்ட வசிஷ்டரிஷி மனம் வருந்தி, தன்புத்திரர்களுக்குண்டாகிய சாபத்தை யெவ்வாறு தீர்ப்பதென்று மனத்துள் ஆலோசித்து, மூவுலகினையும் ஒன்றுகாத்தழிக்கும் முழுமுதற்கடவுளாகிய பரமசிவமூர்த்தியையல்லாது தமது மனோரதம் கிட்டாதென்று நிச்சயித்தவராய், பூமியிலுள்ள அநேகசிவஸ்தலங்களையும் அடைந்து, அவ்வவற்றிலுள்ள தீர்த்தங்களிலும் விதிப்படி ஸ்நானஞ் செய்து மஹாலிங்கங்களை வேதமந்திர பூர்வகமாய் அபிஷேகித்து அலங்கரித்து, அர்ச்சித்து, தூப, தீப, நைவேத்திய முதலான ஷோடசோபசாரங்களைச்செய்து துதித்தும், வணங்கியும் பிரயோஜனமடையாததைக்கண்டு மனம் நொந்து ஏங்கி மகாவிசனத்தோ

இருக்குங்காலில் ஒருநாள் நான்முகன் தன் புதல்வன் வருந்து
வதைப்பார்த்து, மயங்கி, அசரீரியாய் "மானசீசபுத்ரா நீ வருந்
தவேண்டாம், என்னுடைய ஆத்மலிங்கமான வச்சிரலிங்கம், பூமி
யில் காவிரியின் வடகரையில் தாலவனமென்றும், திருமழுவாடி
யென்றுஞ் சொல்லப்பட்ட உத்தமோத்தமமாகிய க்ஷேத்திரத்தில்
விளங்குகிறது. அந்தலிங்கமானது நினைத்தமாத்திரத்தில் சகலபா
பங்களையும் ஒழித்து சர்வாபீஷ்டத்தையுங்கொடுக்கும். அதனை
நான்பூசித்து இஷ்டவரங்களைப்பெற்றதைப்போன்று புத்திரனாகிய
நீயும் பூசித்து உன் மனோரதத்தை நிறைவேற்றிக்கொள்ளென்று
உரைக்க மொழிகளைக்கேட்ட வசிஷ்டமகாமுனிவர் அதிக சந்
தோஷத்துடன் பூமியில் எல்லாவற்றிலுஞ்சிறந்த உத்தரவாஹினி
யாகிய காவிரியைக்கடந்து பனங்காட்டையடைந்து ஆங்கு சந்
நிதியில் விளங்கும் பரிசுத்தம் பொருந்திய சிவகங்கையில் விதி
பூர்வமாகத்தன் பத்தினியாகிய அருந்ததியுந்தானுமாய் ஸ்நானஞ்
செய்து ஆலயத்துட்சென்று சகலவிதமான அபிஷேகசாமான்க
ளினால் பசுபதியாகிய நீலகண்டனுக்கு அபிஷேகித்து வஸ்திரங்
களினாலும், இரத்தினமயமான ஆபரணங்களினாலும் அலங்கரி
த்து திவ்ய வாசனை பொருந்திய சந்தனங்களைப்பூசி அநேக வித
புஷ்பஜாதிகளாலும் வில்வ முதலிய பத்திரங்களாலும் சகஸ்ர
நாமங்களாலருச்சித்து அடியிற்கண்டவாறு தோத்திரஞ்செய்ய
லாயினர்.

ஹே தேவ தேவா, ஜெகந்நாயகா, பிரணவப்பொருளே, திரி
புரசங்காரனே, கங்காளமணிந்தவனே, கங்காதரனே, காமதக
னனே, மறலியை யுதைத்தவனே, பக்தர்களுக்கிரங்கும் பரம்
பொருளே, நித்திய மங்கள மூர்த்தியே, சூலபாணியே, விருஷப
வாகனனே, முக்கண்ணிறைவாவென்று பலவாறாய்த்துதித்து வந்
தனர். இவ்விதம் பிரதிதினமும் காலையிலும், மத்யானத்திலும்,
பிரதோஷகாலத்திலும், அர்த்தசாமத்திலும், இடைவிடாது துதி
த்துவருங்காலில் ஒருநாள் சர்வேஸ்வரனான ஈசனுக்கு மனது



வந்து வச்சிரத்தூணிலிருந்து விருஷபவாகனருடராய் பிரத்திய
க்ஷமாய் எழுந்தருளி வசிஷ்டரைப்பார்த்து "ஹே முனியே! உன்
உத்கிருஷ்டமான பூசனைக்கு நாம் அகமகிழ்ந்தோம், நீ கோரிய
படி உன் புதல்வர்களுக்கேர்ப்பட்ட சாபமானது இன்றோடு நிவ
ர்த்தியாகட்டும். இன்னும் ஏதாவது உனக்குவேண்டுமானவரமி
ருந்தாலும் அதனையுந்தருவோமென்றுரைத்த கைலைநாதன்
மொழிகளைக்கேட்ட முனிபுங்கவர் தேகமெங்கும் புளகாங்கித
ராய் ஆநந்தபாஷ்பம் கண்ணீர்ப்பெருக எழுந்து, துள்ளி, ஆடி,
பாடி, அநேக விதமாய்த்துதித்து பகவானை நோக்கி ஹே பரமத
யாநிதியே! தங்களைக்கண்டபொழுதே என்மனத்திலுண்டான
குறைகள் யாவும் ஒழிந்ததாயினும் நான் இல்லறத்தோடிருந்து
ஞானத்தையடைந்து மோக்ஷமடைவதில் இல்லறதர்மத்தை நட
த்தி வந்ததற்குப்பிரயோசனமாக என் முன்பத்துக்குலங்களும்;
பின்பத்துக்குலங்களும், என் மூலமுமாகிய இருபத்தொரு குலங்
களும் ஈடேறும்படியாயுள்ள ஒரு கன்னிகையைக்கொடுத்தருள
வேண்டுமென்று இரஞ்சினின்ற வசிஷ்டரை நோக்கி ஹே தவ
சிரேஷ்டா! நீ கோரியவாறு சர்வலக்ஷணத்தோடும், நல்லகுணம்,
அறிவு இவைகளோடுங்கூடிய கன்னிகை உனக்குண்டாகக்கடவ
தென்று திருவாய்மலர்ந்தருளி இலிங்கத்துள் மறைந்தனர்.

கேட்பீர் முனிவர்காள் இவ்வண்ணமாய் பரசுபாணியிடம்வரம்
பெற்றுகொண்டு தன் பர்ணசாலையை யடைந்து வாழ்ந்துவரும்
காலில் அருந்ததி கர்ப்பவதியாகி நாளுக்கு நாள் பூர்வபக்ஷத்துச்சந்
திரனைப்போல் கர்ப்பவிர்த்தியாகி பெண்மகவையீன்றவுடன் ஆகா
யத்தினிடமிருந்து அசரீரி "ஹே முனியே! உன் பத்தினியான
அருந்ததியினிடந்தோன்றிய பெண்குழந்தைக்கு ஊர்மிளாவெ
ன்று நாமதேயமிட்டழையும்" என்றுரைத்த மொழியைக்கேட்ட
முனிபுங்கவர் மகாகுதூஹலத்துடன் அவ்வண்ணமே நாமதேய
மிட்டு வளர்த்து எல்லோரும் சுகமேவாழ்ந்திருந்தனர்.

இவ்வத்தியாயத்திற் கூறப்பட்ட வச்சிரலிங்கத்தை வசிஷ்டர் திரிசங்கன் மகனுக்குண்டான சாபத்தை விமோசனஞ்செய்து கொண்டு தான் வரப்பிரசாதியென்றுங் கன்னிகையை புத்திரியாக கொண்ட சரிதையைப்படித்தவர்களும், கேட்டவர்களும், பிறர் பால் செவித்துச்சொன்னவர்களும், புத்திர சம்பத்து பொருந்தி மறுமையில் மோக்ஷத்தையடைவார்கள்.

## இருபத்திமூன்றும் அத்தியாயம்

முற்றிற்று.



# இருபத்திநான்காம் அத்தியாயம்.

## திருமணச்சருக்கம்.

கேளுங்கள் தபோநிதிகளே! வசிட்டர் திருமழபாடியி லுள்ள வச்சிர லிங்கத்தைப்பூசித்து ஊர்மிளையைப் புத்திரியாயடைந்து நந்திகேசுரருக்குத் திருமணஞ்செய்யக்கொடுத்தசரிதையை உங்கள்பாலுரைக்கிறேன் நீங்கள் மனக்களிப்புடன் கேட்கக்கடவீர்களென்று பின்வருமாறு கூறுவாராயினர்.

முன்னொருகாலத்தில் சிலாதகரென்னும் முனிவரானவர் தம் இல்லற தன்மத்துக்குரிய புத்திரப்பேறில்லாக் குறையால் மனக் கிலேசமுற்று பஞ்சநதி க்ஷேத்திரமெனனும் திருவையாற்றிலெழுந்தருளியிருக்கும் பஞ்சாபகேசனைக் குறித்துத் தவஞ்செய்து அவனருளால் நந்திகேசரைப் புதல்வராயடைந்தபின்னர் நந்திகேசருக்கு விதிப்படி ஜாதகர்மம், நாமகர்மம், முதலியவைகளையெல்லாஞ் செய்வித்து, எட்டாம்வயதாரம்பத்தில் உபநயனமுஞ்செய்து சகல கலைகளையும் கற்பித்துவர, நந்திகேசர் சகலகலைகளையும் ஐயந்திரிபறக்கற்று ஈசுரபக்தியுடன் சுகமாய் வாழ்ந்துவந்தனர். இது இவ்வாறிருக்கத் திருமழபாடியில் வச்சிரலிங்கேசர் வரத்தால் வசிஷ்டருக்கும், அருந்ததிக்கும் புத்திரியாயுற்பவித்த ஊர்மிளாதேவியானவள் நாளுக்குநாள் வளர்ந்து சர்வலக்ஷணங்களோடுங்கூடி ரூபவதியாய் எட்டாம்வயது தொடங்கியது. இவ்வாறு ஊர்மிளைக்கு எட்டாம்வயது ஏற்பட்டதைநயந்த வசிஷ்டர் நம்கன்னிகைக்கு மணமுடிக்காது இனி சும்மாயிருப்பதுகூடாது. அவளுக்குத் தக்கவரனை சம்பாதித்து அவ்வரனுக்கு விவாகஞ் செய்து கொடுப்பதே தகுமென்று நிச்சயித்தவராய் நல்லகுலத்தில் உற்பவித்தவரும், சகலகலைகளுணர்ந்தவரும், நற்குணம், நல்

லறிவு, நல்லொழுக்கம், இவைகளோடுங்கூடிய ஓர்பிரம்ம சாரியைத்தேட யெத்தனித்து திருமழுவாடிக்கு ஆக்கினேயதிக்கில் மூன்று குரோச தூரத்திலுள்ள திருவையாறென்னுந் தலத்திலுள்ள சிலாதகமுனியின்பர்ணசாலையையடைந்தனர். இவ்வாறடைந்த வசிஷ்டமுனிவரை சிலாதகர் தன்தம்பதியுடன் எதிர்கொண்டு வரவேற்று அர்க்கிய, பாத்ய, ஆசமனாதிகளைகொடுத்து தகுந்தஆசனத்திலமர்த்தி க்ஷேமலாபங்களை விசாரித்தபின்னர், நந்திகேசருடைய ரூபகுணங்களையும் கல்விமுதலியவைகளையும் கண்டு ஊர்மிளாவுக்கும் இவருக்குமிருக்கும் ரூபமுதலிய யெல்லாக்குணங்களும் பொருத்தமாயிருப்பதைக்கண்டு இவ்விருவருக்கும் விவாகஞ்செய்வதாய் நினைத்து சிலாதகரைநோக்கி ஹே முனிபுங்கவரே! உமது புத்திரன் பிர்ம்மசாரியான நந்திகேசருக்கு எமது புத்ரியாகிய ஊர்மிளாவை கன்னிகாதானஞ்செய்விக்க உத்தேசித் திருப்பதால் அதை ஏற்றுக்கொள்ளச் செய்யவேண்டுமென்றுரைக்க, அதற்கு சிலாதகரும் சம்மதிக்க இருவரும் கன்னிகாதானத்தை நிச்சயித்து வசிஷ்டர் தனதிருப்பிடஞ்சென்றனர். அதன்பிறகு மீனமாசம், சுக்கிரவாரம், சுக்லபக்ஷம், புனர்வசுநக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் நந்திகேசருக்கு ஊர்மிளாவை கன்னிகாதானஞ் செய்விப்பதாய் பத்ரமெழுதி சிலாதகருக்கனுப்பினபின்னர், சிலாதகரும், நந்திகேசரும், பஞ்சாபகேசர்சந்நிதியை யடைந்து லோகநாயகனைத்துதித்துநிற்கையில்பகவான் இவ்விருவர்களுடைய பக்திக்கும் பிரார்த்தனைக்கும் மெச்சித் தன்பத்னியாகிய தர்மசம்வர்த்தனியுடனும், தன் பரிவாரங்களுடனும், கல்யாணமாப்பிளைக்கு விதிப்படிச் செய்யவேண்டியவைகளையெல்லாஞ்செய்து பேரிமுதலான அநேகவாத்தியகோஷங்களோடு நடனமாதர் முன்செல்ல, பக்தர்களெல்லாந் துதிக்க, அந்தணர்வேதமோத, முன்னே நந்திகேசரைநடத்திப் பின் மற்றவர்களெல்லாம் சென்றுதிருமழுவாடியில் உத்தராபிமுகமாயோடுங்காவிரிநதியின் மத்தியில்வந்துசேர்ந்தனர். இவ்விதம்



சம்பந்திஜனங்கள் வருவதையுணர்ந்த வசிஷ்டமுனிவர், வச்சிரத்தாணையசின் சந்நிதியிற்சென்று ஹே தேவதேவோத்தமா, தேவநாசாம்பளா, அகிலாண்டகோடி, பிரமாண்டநாயகா, தீனபக்தா, என்று பலவாறாய்த்துதித்துநிற்கையில் ஈசன் பிரத்தியக்ஷமாகி ஹே பக்தா! எதற்காக என்னை ஸ்மரித்தாயென்ன, வசிஷ்டரும் சந்தோஷமாகி ஹே முக்கண்ணிறைவனே என் சம்பந்தியாகிய சிலாதகரிஷியுடன் திருவையாற்றில் விளங்கும் பஞ்சாபகேசர் தர்மசம்வர்த்தனிசமேதராய் சகலபரிவாரங்களுடனே வருவதைப்போல் தாமும் யெண்ணேறி சகலபரிவாரங்களுடனே புறப்பட்டு அவர்களை எதிர்சென்றழைத்துவரவேண்டுமென்ற மொழிகளைக்கேட்ட பரமன் சந்தோஷிதனாய் தானே சுந்தரநாயகனாய் முத்துச்சிவிகையிலெழுந்தருளி சகலவாத்தியங்களும் முழங்க, நடனமாதர்கள் நர்த்தனஞ்செய்ய, பிராமணர் வேதமோத, சிவனடியார்கள் பண்ணிசையைப்பாட, காவிரிநதிமத்தியில் சம்பந்திஜனங்களை எதிர்சென்றழைத்துவந்து அவர்களின் அந்தஸ்துக்கேற்றபடி விடுதிகளைத்தந்து தக்கபடியுபசரித்தபின்னர் இருவர்களுக்கும் மங்களஸ்நானஞ்செய்வித்து, நந்திகேசருக்கு திவ்யமான பீதாம்பரங்களும் ஜரிகைசாலுவை, கிரீடம், இரத்தினகுண்டலம், முப்புரிநூல், பாகுவலயம், தோடா மோதிரம் முதலியவைகளாலலங்கரித்து அவ்வண்ணமே ஊர்மிளாதேவிக்கும் பீதாம்பரம் சர்வபூஷணம், முத்தாஹாரம், மோகனமாலை, சரப்பளி, சந்திரஹாரம், பதக்கங்கள், முதலிய கழுத்தணிகளும், வங்கி, பாஜிபந்து, தோள்வளை, கங்கணம், மோதிரங்கள் முதலிய கையணிகளும், ஒட்டியாணம், மேகலை, முதலிய இடுப்பணிகளும், பாடகம், பாதசரம், கொலுசு, முதலிய பாதஅணிகளும் விளங்க அலங்கரித்து சகலதேவர்களும், சகல முனிவர்களும், சகலரிஷிகளும், சகலபிராமணோத்தமர்களும், நான்குவருணத்தவர்களும் நிறைந்த திருமணமண்டபத்தில் சுரர், கின்னரர், முதலிய கந்தருவர் வாத்தியம்முழக்க, நாரதர், தும்புரர்,

யாழிசைக்க, அரம்பைமுதலான தேவமாதர்கள் நடனஞ்செய்ய வேதியர் வேதமோத, தேவர்கள் புஷ்பமாரிபொழிய, வேதிகை யின் முன்னமைக்கு விதிப்படி மங்களாஷ்டகஞ்சொல்லி ஸ்ரீமதி தேவியை நந்திகேசருக்கு வசிஷ்டர் கன்னிகாதானஞ் செய்துக் கொடுத்தனர்.

இவ்வாறு கன்னிகாதானம் முடிந்தபின்னர் அவ்விடம் வந் திருந்த சகலருக்கும் அவர்களுக்குத்தக்கபடி மரியாதைகளையும் சந்தனதாம்பூலங்களையுமளித்த பின்னர் பிராமணர்களுக்கு பூரி தக்ஷிணை கொடுத்து ஷட்ரசம்பொருந்திய போஜனங்களையும் அநேக பக்ஷணவகைகளையும், வாழை, மா, பலா, முதலிய பழ வகைகளையும் அருந்தும்படிச் செய்து மணமக்களை அவ்வொரு நாக்கி மணமகளை சிவிகையிலேற்றப் பெற்று நந்திகேசர் முன் னோக்கிச் செல்ல ஸ்ரீமதிதேவியும் தர்மசம்வர்த்தனி சமேத பஞ்சநதீசரும் பின்செல்ல திருவையாற்றையடைந்து அவ்வி டம் நடக்கவேண்டிய ஐதீகங்களை நடத்தி முடித்துத் திருப்பழனம், திருவேதிகுடி, திருச்சோற்றுத்துறை, கண்டியூர், திருப்பூந்துருத் தி, தில்லைஸ்தானம், திருவையாறு, ஆகிய சப்தஸ்தலங்களையும் ஸ்ரீ மதிதேவி சமேதராய் நந்திகேசர் ஊர்வலம்வந்து பஞ்சநதியில் சுகமாய் வாழ்ந்துவந்தனர்.

கேளுங்கள் முனிபுங்கவர்களே! இவ்வத்தியாயத்திற் கூறி யுள்ள நந்திகேசர் திருமணவைபவ சரித்திரத்தைப் படித்தவர் களும், கேட்டவர்களும், பிறர்க்கெடுத்துச் சொன்னவர்களும், இம்மையில் இஷ்டவரங்களைப்பெற்று மறுமையில் சிவசாயுச்சி யத்தையடைந்து சுகமாய் வாழ்வார்கள்.

## இருபத்தி நான்காம் அத்தியாயம்

திருமழுவாடி புராணம் முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| க௦ | எ | ருபம் | ரூபம் |
| 2 | 19 | ஓன்று | ஒன்று |
| 3 | 3 | உருத்ராக்ஷங்களாம் | உருத்திராக்ஷங்களாற் |
| 3 | 4 | கழுது | கழுத்து |
| 4 | 17 | பனைக்காட்டில் | பனங்காட்டில் |
| 4 | 18 | வஜ்ரத்துவேச | வஜ்ரத்தூணைசர் |
| 4 | 19 | பூஜிந்கெவ்விதம் | பூஜிக்கவெவ்விதம் |
| 4 | 26 | வொரம் | வௌரம் |
| 5 | 1 | திருமழுவடி | திருமழுவாடி |
| 6 | 22 | மலர்ந்தோழு | மலர்க்கோள |
| 7 | 6 | ரேலர் | ரேவைற் |
| 7 | 10 | அலங்கரிக்க | லைங்கரிக்க |
| 7 | 12 | ரூபியும் | ரூபியாயும் |
| 7 | 18 | காரணங்க | காணங்க |
| 8 | 21 | தங்ளாற் | தங்களாற் |
| 19 | 29 | பேள்த்திரர் | பௌத்திரர் |
| 20 | 12 | உபாந்த | உயர்ந்த |
| 22 | 13 | கோபாலடைவர் | கோபமடைவர் |
| 23 | 13 | மூர்த்தி | மூர்த்தி |
| 24 | 13 | வகைள | மக்கள |
| 27 | 20 | லிங்கத்தைதனது | லிங்கத்தைதனது |
| 29 | 14 | கமபோர் | சமபோர் |
| 31 | 27 | கூடத்தைபுசித்து | கூட்டத்தைப்புசித்து |
| 32 | 1 | வாய்ந்தசருக்கம | வாய்ந்தச்சருக்கம் |
| 32 | 11 | உயக்கு சந்தோஷ | உயக்குச் சந்தோஷ |
| 32 | 23 | வஜ்ரத்துவேசர் | வஜ்ரத்தூணைசர் |
| 34 | 9 | வசிரத்தூணைசர் | வஜ்ரத்தூணைசர் |
| 35 | 10 | புத்திரை | புத்ரரா |
| 34 | 16 | வச்சிரத்துவேச | வஜ்ரத்தூணைச |
| 35 | 10 | ஜாவக்கரித்த | ராயவதரித்த |
| 43 | 19 | கேசரா | கேசுரர் |
| 44 | 23 | கலைப்ப | கலையும் |

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 47 | 4 | துனேசர் | ஞானேசர் |
| 47 | 23 | அவ | அவர் |
| 57 | 17 | புணவியத்தை | புண்ணியத்தைச் |
| 60 | 12 | மடந்து | படைந்து |
| 60 | 14 | பார்க்கடல் | பாற்கடல் |
| 61 | 13 | பாகா | பகா |
| 64 | 17 | கனைவரை | களைவரை |
| 66 | 27 | போதனர் | தபோதனர் |
| 69 | 8 | அவிஷேக | அபிஷேக |
| 69 | 17 | உனை | உன்னை |
| 70 | 25 | பாதபலன் | பாதகாலன் |
| 77 | 28 | பூஷைறலைங் | பூஷறலங் |
| 77 | 29 | கோர்சனை | கோரோசனை |
| 79 | 25 | தீகா | தீர்க்கா. |
| 83 | 25 | தன்டபபேல் | தண்டம்போல் |
| 89 | 19 | ஞனேசர் | ஞானேசர் |
| 89 | 22 | ஞனேசர் | ஞானேசர் |
| 90 | 4 | வானைதின் | வாகனத்தின் |
| 91 | 3 | சொல்லுகின்ற | செல்லுகின்ற |
| 91 | 9 | உனக்குவுண்டா | உனக்குண்டா |
| 91 | 15 | முடையாகவனை | முடையவனை |
| 91 | 21 | துனேசர் | ஞானேசர் |
| 92 | 8 | சனத்தை | சனத்தைச் |
| 92 | 11 | துனேசர் | ஞானேசர் |
| 92 | 16 | வருமை | பருமை |
| 93 | 11 | சாரக்ஞை | சராக்ஞை |
| 93 | 11 | வோர் | ஓர் |
| 104 | 7 | கூறியள்ள | கூறியுள்ள |
| 104 | 9 | திங்கி | தீங்கி |